janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்


மலர் 85 | 2022 ஆகஸ்ட் 07 - ஆகஸ்ட் 13 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 18








மாநாடு வெற்றி பெற புரட்சிகர வாழ்த்துக்கள்






தோழர் தா.பாண்டியன் நகர், வித்யா கார்த்திக் திருமண மண்டபம், தாராபுரம் சாலை, திருப்பூர்

P.ஜெகநாதன், M.ஆறுமுகம், N.கிருஷ்ணன், K.சுப்பிரமணியம், M.ஈஸ்வரன், C.சிவசாமி, V.கோபால், G.செல்வராஜ், M.ராமமூர்த்தி, K.பொன்ராஜ், S.கோபால், S.சின்ராஜ், E.A.பூபதி

**கோவை ஜில்லா மில் தொழிலாளர் சங்கம்**

பதிவு எண் – 84, தியாகிகள் இல்லம், 99, ரங்கன் வீதி, காட்டூர், கோவை.



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின்

25வது மாநில மாநாடு

வெற்றிபெற வாழ்த்துகிறோம்...

★ மேற்கு பகுதி குழு ★ கிழக்கு பகுதி குழு
★ கோ.அபிஷேகபுரம் பகுதி குழு ★ ஸ்ரீரங்கம் பகுதி குழு
★ பொன்மலை பகுதி குழு ★ மணிகண்டம் ஒன்றியம்
★ அந்தநல்லூர் ஒன்றியம்

இவண் :

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

திருச்சி மாநகர் மாவட்டக் குழு.



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

தமிழ் மாநில 25வது மாநாடு

திருப்பூர்



வாழ்த்துகளுடன்...

க.சுரேஷ்

மாமன்ற உறுப்பினர்

23வது வார்டு

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.

CPI மேற்கு பகுதி,

திருச்சி மாநகர் மாவட்டம்.






இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது தமிழ் மாநில மாநாடு சிறக்க வாழ்த்துகள்

மிகமிக விரைவில்...

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் வெளியீடாக...

தமிழில் மார்க்சிய அரசியல் நூல்கள்

முதன்மைப் பதிப்பாசிரியர்: ந.முத்துமோகன்




NCBH

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, 48601884 | www.ncbhpublisher.in | info@ncbh.in

கிளைகள்

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஒசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.




# கான்பூர் முதலாவது அமைப்பு மாநாடு

**இந்த மாநாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது மத்தியக் கமிட்டி உருவாக்கப்பட்டது. முதலாவது அமைப்பு விதிகளையும் மாநாடு உருவாக்கியது.**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருக்கொள்வதற்கு முன்பே அதன் கழுத்து நெரிக்கப்பட்டது. 1924ம் ஆண்டில் மார்ச் மாதம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடங்குவதற்கு முன்பே கான்பூரில் “போல்ஷ்விக் சதி” என்று வழக்கு தொடுக்கப்பட்டது. இது தான் கான்பூர் சதி வழக்கு.

### கான்பூர் சதிவழக்கு

பிரிட்டிஷ் மன்னரின் அரசாளும் உரிமையைப் பறிக்க சதி, போல்ஷ்விக் உதவியோடு அரசியல் பயிற்சியும், ஆயுதப் பயிற்சியும் நடைபெறுதல் போன்ற காரணங்கள் கூறப்பட்டன. 1922–23 களில் பெஷாவர் சதி வழக்கின் போதும் இதே காரணங்கள் தான் கூறப்பட்டன.

“சமுதாயம் பழமையின் நுகத்தடியில் அமுக்கப்பட்டு, கொடுமைகளுக்கு மக்கள் உள்ளாக்கப்பட்டால் மக்களின், உள்ஆற்றல் தட்டி எழுப்பப்பட்டு புரட்சி வெடிப்பது தவிர்க்க முடியாதது என்பது வரலாற்று உண்மை. இதில் நாங்கள் மக்களைத் தட்டி எழுப்பும் புரட்சியாளர்களாகச் செயல்பட்டது உண்மை”

“அடக்குமுறை ஆங்கிலேய அரசின் உரிமையானால் புரட்சி செய்வது புரட்சியாளர்களின் உரிமை”

என்று நீதி மன்றங்களில் கம்யூனிஸ்ட்டுகள் முழங்கினார்கள்.

1924ம் ஆண்டு மே மாதம் முடிந்தது. எஸ்.ஏ.உஸ்மானி, முசாபர் அகமது, குலாம் உசேன், நளினி தாஸ் குப்தா ஆகியோருக்கு 4 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டது. சிங்கார வேலருக்கு உடல் நிலை சரியில்லாததால் அவர் விடுதலை செய்யப்பட்டார். எம்.என்.ராய் தலைமறைவாகி விட்டார். பின்பு 1931ல் கைதாகி 12 ஆண்டுகள் தண்டனை பெற்று 6 ஆண் டுகளில் விடுதலையானார்.



### சிங்காரவேலரின் தலைமை உரை

சிங்காரவேலரின் தலைமை உரை அமெரிக்காவின் சுதந்திரக் கவிஞன் வால்ட் விட்மன் கவிதை வரிகளை மேற்கோள் காட்டித் துவங்குகிறது.

“விடுதலைக்காக உயிர்ப்பலியானவர்களின் புதை குழியில் இருந்தே விடுதலைக்கான விதைகள் வளர்கின்றன” என்ற கம்பீரமான வரிகள் மூலம் புரட்சியாளர்களுக்கு அஞ்சலி செலுத்தப்படுகிறது.

சிங்கார வேலரின் தலைமை உரை தொலை நோக்கான கம்யூனிஸ்ட் அரசியல் பார்வையை இந்தியத் தன்மையிலான மார்க்சிய வளர்ச்சியை துவக்கி வைத்தது.

“தத்துவ ஞானிகள் உலகை வியாக்கியானம் செய்கின்றனர். ஆனால் அந்த உலகை மாற்றி அமைப்பது தான் நமது நோக்கம்“ என்ற மார்க்சின் குறிக்கோளின் அடிப்படையில் இந்திய அரசியல், பொருளாதார சமூக நிலைமைகளுக்குப் பொருத்தமான வகையில் தேசிய இயக்கத்திற்கு கோரிக்கைகள் மற்றும் செயல்பாட்டுக்கான ஒரு வேலைத் திட்டத்தையும் மாநாடு முன் வைத்தது.

எங்கிருந்தோ இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பிறந்துவிடவில்லை. இந்திய நிலைகளில் உருவான வரலாற்றுக் கட்டாயமாகவே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உருவானது. அடித்தளமிட்ட இந்த தினமே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் துவக்க நாளாக ஒன்றுபட்ட கட்சி ஒருமனதாக முடிவெடுத்தது.

கான்பூர் சதிவழக்கு இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி உருவாவதை இந்திய மக்களுக்கு எடுத்துக் காட்டியது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு மாநாடு 1925ல் டிசம்பர் மாதம் 26ம் தேதி உத்திரபிரதேச மாநிலம் கான்பூரில் கூடியது.

### கொள்கைகள் உருவாக்கம்

“கம்யூனிஸ்டுகள் நிலைமைகளைப் புரிந்து கொள்ள வில்லை. இந்தியப் பிரச்சனைகளை கம்யூனிஸ்டுகளால் தீர்க்க முடியாது. அவர்கள் ரஷ்யா, சீனா அடிப்படையைக் கடைப்பிடிப்பவர்கள். பொருளாதாரப் போராட்டத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பவர்கள். அனைத்திற்கும் அதுவே தீர்வு என்று வாதிடுவார்கள்.

மதம், சாதி, இனம், மொழி என்பவை கம்யூனிஸ்ட்களின் வேலைத் திட்டங்களில் இருந்ததில்லை. எனவே இந்தியாவில் கம்யூனிஸ்ட்டுகள் வெற்றி பெற முடியாது”.....

மார்க்சியம் விடுதலைக்கானதாக இருப்பினும் இனம் மற்றும் ஒடுக்குறை, சாதி, போன்ற வர்க்க மற்ற வடிவங்கள் பற்றி குறைபாடுகள் கொண்டதே”..

கம்யூனிஸ்ட்டுகள் மீதும், மார்க்சியத்தின் மீதும் இவ்வாறு தொடர்ந்து எழுப்பப்பட்டு வரும் விமர்சனங்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது அமைப்பு மாநாடு தகுந்த பதிலடி கொடுத்துள்ளது !

இந்த முதலாவது அமைப்பு மாநாட்டிற்கு தலைமை ஏற்ற சிங்காரவேலர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது கொள்கை அறிக்கையை தனது தலைமை உரையாக அறி வித்தார்.

### கம்யூனிஸ்டுகளின் இறுதி லட்சியம்

- மூலதனத்தின் ஆதிக்கத்தை ஒழிப்பது,
- போர்கள் இல்லாமல் செய்வது,
- எல்லா நாடுகளையும் ஒன்று சேர்த்து ஒரு ஜனநாயக கூட்டுறவுப் படையை உருவாக்குவது
- இந்தியாவில் கம்யூனிஸ்ட்களின் உடனடி நோக்கம்
- இந்தியாவின் சாமான்ய மக்களின் விடுதலைக்காகப் போராடுவது
- தொழிலாளர், விவசாயிகள் மீதான ஒடுக்குமுறைக்கு முடிவு கட்டுவது
- அரசியலிலும், பொருளாதார வாழ்விலும் சாதிய வேறுபாடுகளை ஒழிப்பது ஆகும்.
- அரசியல் விடுதலை, பொருளாதார விடுதலை, சமூக விடுதலை என்ற முப்பெரும் லட்சியங்களே இந்தியக் கம்யூனிஸ்டுகளின் கடமை ஆகும்.

கம்யூனிஸ்ட் கட்சி நாட்டில் பல குழுக்களாகச் செயல்பட்டு கருக்கொண்ட காலம் தொட்டே இக்கொள்கைகள் உருவாகின.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்ட நாள் பற்றி ஒரு குறிப்பு

சி.பி.ஐ. நிறுவப்பட்ட நாள் குறித்து, 1959 ஆகஸ்ட் வரை, வெவ்வேறு தோழர்கள் வெவ்வேறு ஆண்டுகளையும் தேதிகளையும் கூறி வந்தார்கள். இந்த விவகாரம் பற்றி விவாதித்து, ஒருமனதான முடிவெடுத்து பிரச்சினைக்கு முடிவுகட்ட 1959 ஆகஸ்ட் 18 அன்று சி.பி.ஐ.யின் மத்திய செயற்குழு கூடியது.

அவர்கள் இந்தப் பிரச்சினையைப் பல்வேறு கோணங்களிலும் ஆராய்ந்து, இறுதியில் 1925 டிசம்பர் 26 அன்று கான்பூரில் மாநாடு நடைபெற்ற தேதியே கட்சியின் நிறுவன நாள் என்று முடிவிற்கு வந்தார்கள். அந்தச் சமயத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்ட நாள் பற்றிய தகவலை இந்தோனேசியக் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டிருந்தது.

கட்சி நிறுவிய நாள் பற்றி முடிவெடுத்த மத்திய செயற்குழுவில், பொதுச் செயலாளர் அஜாய் கோஷ், பி.டி.ரணதிவே, பி.சி.ஜோஷி, எம்.பசவ புன்னையா, இசட்.ஏ.அகமது, எஸ்.ஏ.டாங்கே, ஏ.கே. கோபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புகள் (மினிட்ஸ்) பவசபுன்னையாவால் எழுதப்பட்டது. அதில் ‘கட்சியின் நிறுவன நாள் 1925 டிசம்பர் 26, கூட்டத்தில் கலந்து கொண்ட எவரும் வேறு எந்தத் தேதியையும் முன்வைக்கவில்லை’ என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

1959 ஆகஸ்ட் 20 அன்று ரிவ்யூ ஆஃப் இந்தோனேசியா’ என்ற பத்திரிகையின் ஆசிரியருக்கு பி.டி.ரணதிவே ஒரு கடிதம் எழுதினார். இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925 டிசம்பரில் தோற்றுவிக்கப்பட்டது என்று எழுதியிருக்கிறார். அதன்பின் வங்க மாநிலக் குழுவிற்கு 1960ல் இ.எம்.எஸ். எழுதிய கடிதத்தில் இதே கருத்தை பதிவு செய்திருக்கிறார்.

கட்சியின் இந்தக் கருத்தை முஸாபர் அகமதும் வங்காள மாநிலக்குழு தலைமைத் தோழர்களும் ஏற்கவில்லை. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவன நாள் 1920 அக்டோபர் என்று முஸாபர் அகமது வெளியிட்ட புத்தகத்திலுள்ள செய்தியின் அடிப்படையில், 1960ல் கட்சியின் 40வது ஆண்டுவிழாவைக் கொண்டாட வங்காள மாநிலக்குழு விரும்பியது.

ஆனால் இந்த முயற்சிக்கு எதிராக வங்காள மாநிலக் குழுவிற்கு 1960 ஜூன் 10 அன்று அன்றைய பொறுப்பு பொதுச் செயலாளராக இருந்த இ.எம்.எஸ். கடிதம் எழுதியதால், 40வது ஆண்டுவிழா நடத்தும் முயற்சி வெற்றி பெறவில்லை.

### 1920ல் தாஷ்கண்டில் நிறுவப்பட்டது குறித்து

1920 அக்டோபர் 17 அன்று தாஷ்கண்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டபோது எம்.என்.ராய், (எம்.என். ராயின் முதல் மனைவியும் அமெரிக்க பிரஜையுமான) எவ்லின் ட்ரென்ட் ராய், அபானி முகர்ஜி, (அபானியின் மனைவியும் வெளிநாட்டு பிரஜை யுமான) ரோஸா ஃபிடிங் கோஹாஃப், மொகமத் அலி, மொகமது ஷஃபிக், எம்.பி.டி.ஆச்சார்யா ஆகிய ஏழு பேர் கலந்து கொண்டனர்.

இதுபற்றிய விபரங்கள் ‘தாஷ்கண்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவியது பற்றி’ என்ற தலைப்பில் 1964 அக்டோபர் ‘நியூஏஜ்’ இதழில் டாக்டர் தேவேந்திரநாத் கௌசிக் எழுதிய கட்டுரையில் விரிவாக உள்ளன. இது ஒரு வரலாற்று நிகழ்ச்சி என்பது உண்மையே. ஆனால் அதற்கு அரசியல் முக்கியத்துவம் இல்லை. சில தனிநபர்கள், அவர்களில் சிலர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள், மற்றவர்கள் அயல்நாடுகளைச் சேர்ந்தவர்கள். அயல்நாடு ஒன்றில் கூடி, தங்களை கம்யூனிஸ்ட் கட்சி என்று அழைத்துக் கொண்டனர். கலந்துகொண்ட ஏழு பேரில் இரண்டுபேர் அயல் நாட்டவர். அவர்கள் அனைவரும் தனிநபர்கள். அவர்கள் மக்களின் ஏதாவது ஒரு குழுவையோ, நாட்டின் பகுதியையோ பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. அவ்வாறு தாஷ்கண்டில் சி.பி.ஐ. அமைக்கப்பட்ட விவரம் தாய் மண்ணான இந்தியாவிலிருந்த கட்சியினருக்கு 1950 வரை தெரிந்திருக்கவில்லை.



**கார்ப்பரேட் நிறுவனங்கள் கொள்ளை லாபம் அடிக்க! தொழிலாளி வர்க்கம் போராடிப் பெற்ற தொழிலாளர் நலச் சட்டங்களை 4ஆக குறைத்தது ஏன்?!**

**திருப்பூரில் ஆகஸ்ட் 6, 7, 8, 9 தேதிகளில் சங்கமிப்போம்!**

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு!**

# 1925 முதல் 2021 வரை




## கட்சிக் காங்கிரஸில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுச் செயலாளர்கள்



| மாநாடு | ஆண்டு | மாநிலம் | பொதுச் செயலாளர் |
|---|---|---|---|
| அமைப்பு மாநாடு | 1925 டிசம்பர் 25, 26 | உ.பி., கான்பூர் | பாகர்ஹட்டா, எஸ்.வி.காட்டே |
| 1–வது காங்கிரஸ் | 1943 மே 23 – ஜூன் 31 | மகாராஷ்டிர பம்பாய் | பி.சி.ஷோசி |
| 2–வது காங்கிரஸ் | 1948 பிப். 28 – மார்ச் 7 | மேற்கு வங்கம் கொல்கத்தா | பி.டி.ரணதேவ் |
| 3–வது காங்கிரஸ் | 1953 டிச. 27 ஜன. 3 | மதுரை | அஜய் கோஷ் |
| 4–வது காங்கிரஸ் | 1956 ஏப். 16 – 29 | கேரளா பாலக்காடு | அஜய் கோஷ் |
| 5–வது காங்கிரஸ் (சிறப்பு மாநாடு) | 1958 ஏப்ரல் 6 – 13 வரை | பஞ்சாப் அமிர்தசரஸ் | அஜய் கோஷ் |
| 6–வது காங்கிரஸ் | 1961 ஏப்ரல் 7 –13 | ஆந்திரா விஜயவாடா | அஜய் கோஷ் |
| 7–வது காங்கிரஸ் | 1964 டிசம்பர் 13–23 | மகாராஷ்டிர பம்பாய் | எஸ்.ஏ.டாங்கே தலைவர், சி.ராஜேஸ்வரராவ் |
| 8–வது காங்கிரஸ் | 1968 பிப். 7 –15 | பீகார் பாட்னா | எஸ்.ஏ.டாங்கே தலைவர், சி.ராஜேஸ்வரராவ் |
| 9–வது காங்கிரஸ் | 1971 அக். 3 –10 | கேரளா கொச்சி | எஸ்.ஏ.டாங்கே தலைவர், சி.ராஜேஸ்வரராவ் |
| 10–வது காங்கிரஸ் | 1975 ஜன. 27 – பிப். 2 | ஆந்திரா விஜயவாடா | எஸ்.ஏ.டாங்கே தலைவர், சி.ராஜேஸ்வரராவ் |
| 11–வது காங்கிரஸ் | 1978 மார்ச் 31 ஏப்ரல் 7 | பஞ்சாப் படிண்டா | எஸ்.ஏ.டாங்கே, தலைவர் சி.ராஜேஸ்வரராவ் |
| 12–வது காங்கிரஸ் | 1982 மார்ச் 21 –28 | உ.பி.வாரணாசி | சி.ராஜேஸ்வரராவ் |
| 13–வது காங்கிரஸ் | 1986 மார்ச் 12– 17 | பீகார் பாட்னா | சி.ராஜேஸ்வரராவ் |
| 14–வது காங்கிரஸ் | 1989 மார்ச் 6 –12 | மேற்கு வங்கம் கல்கத்தா | சி.ராஜேஸ்வரராவ் |
| 15–வது காங்கிரஸ் | 1992 ஏப்ரல் 10–14 | ஆந்திரா ஹைதராபாத் | இந்திரஜித் குப்தா |
| 16–வது காங்கிரஸ் | 1995 அக்டோபர் 7–11 | புதுடெல்லி | இந்திரஜித் குப்தா |
| 17–வது காங்கிரஸ் | 1998 செப். 14 – 19 | தமிழ்நாடு சென்னை | ஏ.பி.பரதன் |
| 18–வது காங்கிரஸ் | 2002 மார்ச் 26–31 | கேரளம் திருவனந்தபுரம் | ஏ.பி.பரதன் |
| 19–வது காங்கிரஸ் | 2005 மார்ச் 29 – ஏப்ரல் 3 | பஞ்சாப் சண்டிகர் | ஏ.பி.பரதன் |
| 20–வது காங்கிரஸ் | 2008 மார்ச் 23 – 27 | ஆந்திரா ஹைதராபாத் | ஏ.பி.பரதன் |
| 21–வது காங்கிரஸ் | 2012 மார்ச் 27 – 31 | பீகார் பாட்னா | சுதாகர் ரெட்டி |
| 22–வது காங்கிரஸ் | 2015 மார்ச் 25 – 29 | தமிழ்நாடு பாண்டி | சுதாகர் ரெட்டி |
| 23–வது காங்கிரஸ் | 2018 ஏப். 25 – 29 | கேரளா கொல்லம் | சுதாகர் ரெட்டி |
| தேசிய கவுன்சில் | | 2021 ஜூலை 19 | டி.ராஜா |

- 1925 பாகர்ஹட்டா நீக்கப்பட்டு எஸ்.வி.காட்டே பொதுச் செயலாளராகச் செயல்பட்டார்.
- 1931 முதல் 1933 வரை மீரத் சதி வழக்கிற்கு பின்பு எஸ்.வி.தேஷ்பாண்டே செயலாளராக இருந்தார். சிறையில் இருந்த தோழர்களுக்கு ஜி.அதிகாரி செயலாளராக இருந்தார்.
- 1933 பின்பு மீரத் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு கல்கத்தாவில் நடந்த கூட்டத்தில் டாக்டர் ஜி.அதிகாரி பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.
- 1935 டிசம்பர் இறுதியில் பி.ஷி.ஷோசி பொதுச் செயலாளர் பொறுப்பை ஏற்றார். 1948 வரை பொதுச் செயலாளராக நீடித்தார்.
- 1950 ஜூன் கல்கத்தா கூட்டம் சி.ராஜேஸ்வரராவ் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்
- 1962 ஏப்ரல் 23 முதல் 29 வரை அஜய் கோஷ் மரணத்திற்கு பிறகு தேசியக்குழு கூட்டம் எஸ்.ஏ.டாங்கே தலைவர், இ.எம்.எஸ்.நம்பூதிரிபாடு பொதுச் செயலாளர்
- 1964 ஏப்ரல் 11 அன்று நடைபெற்ற தேசியக்குழு கூட்டத்திலிருந்து 31 பேருடன் வெளிநடப்பு செய்து சிபிஐ(எம்) என்ற மற்றொரு கட்சியை உருவாக்கினர்,
- 1990 ஏப்ரல் 17 முதல் 19 வரை தேசியக்குழு கூட்டம் இந்திரஜித் குப்தா பொதுச் செயலாளர்
- 1993 மார்ச் 11 முதல் 14 வரை அமைப்பு நிலை மாநாடு கேரளா திருச்சூர்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்

# தமிழ்நாடு மாநில மாநாடுகள்





| மாநாடு | ஆண்டு | இடம் | மாநிலச் செயலாளர் |
|---|---|---|---|
| 1-வது மாநாடு | 1951 | சென்னை | பி.ராமமூர்த்தி |
| 2-வது மாநாடு | 1953 நவ.22–29 | பேரூர், கோவை | எம்.ஆர்.வெங்கட்ராமன் |
| 3-வது மாநாடு | 1956 பிப். 12–21 | திண்டுக்கல் | எம்.ஆர்.வெங்கட்ராமன் |
| 4-வது மாநாடு | 1958 (சிறப்பு) | திருச்சி | எம்.ஆர்.வெங்கட்ராமன் |
| 5-வது மாநாடு | 1959 மே. 26–31 | காரைக்குடி | எம்.ஆர்.வெங்கட்ராமன் |
| 6-வது மாநாடு | 1961 | கோவை | எம்.ஆர்.வெங்கட்ராமன் |
| 7-வது மாநாடு | 1962 அக். 29 நவ.4(சிறப்பு) | சென்னை | மணலி சி.கந்தசாமி |
| 8-வது மாநாடு | 1964 | மதுரை | எம்.கல்யாணசுந்தரம் |
| 9-வது மாநாடு | 1968 ஜன. 27–30 | வேலூர் | எம். கல்யாணசுந்தரம் |
| 10-வது மாநாடு | 1971 செப். 9– 12 | திருச்சி | எம்.கல்யாணசுந்தரம் |
| 11-வது மாநாடு | 1974 டிச.26–30 | சென்னை | எம்.கல்யாணசுந்தரம் |
| 12-வது மாநாடு | 1978 மார்ச் 16–19 | கோவை | ப.மாணிக்கம் |
| 13-வது மாநாடு | 1982 மார்ச் 3–7 | இராஜபாளையம் | ப.மாணிக்கம் |
| 14-வது மாநாடு | 1986 பிப்.27 மார்ச் 2 | நெல்லை | ப.மாணிக்கம் |
| 15-வது மாநாடு | 1989 பிப். 23–26 | திருச்சி | ப.மாணிக்கம் |
| 16-வது மாநாடு | 1992 மார்ச் 4–7 | மதுரை | ஆர்.நல்லகண்ணு |
| 17-வது மாநாடு | 1995 செப்.13–16 | சென்னை | ஆர் நல்லகண்ணு |
| 18-வது மாநாடு | 1998 ஜூலை 24–26 | கடலூர் | ஆர்.நல்லகண்ணு |
| 19-வது மாநாடு | 2002 மார்ச் 12–15 | தருமபுரி | ஆர்.நல்லகண்ணு |
| 20-வதுமாநாடு | 2005 மார்ச் 5–8 | திருவாரூர் | தா.பாண்டியன் |
| 21-வது மாநாடு | 2008 பிப்.29 மார்ச் 3 | புதுக்கோட்டை | தா.பாண்டியன் |
| 22-வதுமாநாடு | 2012 பிப்.17–19 | இராஜபாளையம் | தா.பாண்டியன் |
| 23-வதுமாநாடு | 2015 பிப்.25–28 | கோவை | இரா.முத்தரசன் |
| 24-வதுமாநாடு | 2018 மார்ச் 28–31 | மன்னார்குடி | இரா.முத்தரசன் |




# கள்ளப் பணம், கருப்புப் பணம் ஒழித்திடவே, பணமதிப்பிழப்பு என்றாயே!

## இன்று கள்ளப் பணம், கருப்புப் பணம் ஒழியவில்லையே!

திருப்பூரில் ஆகஸ்ட் 6, 7, 8, 9 தேதிகளில் சங்கமிப்போம்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் **மாநில மாநாடு!**

# தமிழ்நாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றம்



அமீர் ஹைதர்கான்



பாஷ்யம்



சி.சுப்பிரமணியன்

**தேசவிடுதலை இயக்கம், பாட்டாளி வர்க்க இயக்கம், சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றோடு இணைந்த வகையில் தமிழ்நாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் உருப்பெற்றது.**

1925 டிசம்பர் 26ல் கான்பூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பு ரீதியாக உருவாக்கப்பட்டபோது, அந்த துவக்கத்திற்கு தலைமை தாங்கி, கொள்கை நிலையை வெளியிட்ட ம.சிங்காரவேலர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் என்றாலும், அன்றைய சூழலில் தமிழ் நாட்டில் அமைப்பு ரீதியாக கட்சி உருவாகவில்லை.

1905ல் நடைபெற்ற முதலாவது ருஷ்யப் புரட்சியை பாரதி ஆதரித்தார். 1917ல் நடைபெற்ற சோலிசப் புரட்சியை பாரதி வரவேற்றார். தேச விடுதலை என்பதே 'சமரச சன்மார்க்கம் என்றார் தியாகச் செம்மல் சுப்பிரமணிய சிவா. 1920ல் திரு.வி.க. தனது நவசக்தி ஏட்டை துவங்கி, ஜனநாயகம், தொழிலாளர் நலன், பெண் விடுதலை, சாதி ஒழிப்பு, இந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கொண்ட சமதர்ம சன்மார்க்கத்தை லட்சியமாக பிரகடனப் படுத்தினார்.

முதலாம் உலகப் போர் முடிந்தவுடன் எம்.பி.டி. ஆச்சாரியா மாஸ்கோ சென்று லெனினைச் சந்தித்தார். 1921ல் சிங்காரவேலர் காந்திஜிக்கு பகிரங்கக் கடிதம் எழுதி, இந்திய விடுதலையின் லட்சியம் சமதர்மமாகவே இருக்க முடியும்' என பிரகடனப்படுத்தினார்.

1920களில் சமதர்மக் கருத்துக்களை சிங்காரவேலர், திரு.வி.க. சர்கரைச் செட்டியார், சுப்பிரமணிய சிவா போன்றோர் பரப்பினர். சமதர்மத்திற்கான தேடல் நிறைந்த காலம்.

1923 ஆம் ஆண்டு பாட்டாளி வர்க்கம் போராடிப் பெற்ற உரிமைத் திருநாளான மேதினம் இந்தியாவிலேயே முதன் முதலாக சென்னையில் சிங்கார வேலரால் கொண்டாடப்பட்டது.

1924ம் ஆண்டு மாமேதை லெனின் மறைந்த போது சிங்கார வேலர் நடத்திய லேபர் கிஸான் கெசட்டில் அஞ்சலி செலுத்தியதோடு அஞ்சலி கட்டுரையையும் எழுதினார்.

1925ம் ஆண்டு கான்பூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் அமைப்பு நீதியாக உருவானது; ஆயினும் தமிழ்நாட்டில் கட்சி அமைப்பு உருவாகி விடவில்லை, அதற்காக 12 ஆண்டுகள் பாடுபட வேண்டியிருந்தது. கட்சி அமைப்பு உருவாகவும், அரசியல் கொள்கை வளரவும் சிங்காரவேலர் அயராது பாடுபட்டார்.

தந்தைப் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தோடு சிங்கார வேலர் தீவிரமாகப் பணியாற்றினார். சிங்காரவேலர் – பெரியார் உறவு, பெரியாரை சமதர்மம் நோக்கி திருப்பியது. பெரியார் சோவியத் யூனியனுக்கு சென்று திரும்பியதன் விளைவாக சோசலிசக் கருத்துக்கள் மீது அவருக்கு மேலும் ஆர்வம் ஏற்பட்டது.

1932 டிசம்பரில் ஈரோட்டில் பெரியாரின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சுயமரியாதை சமதர்மக் கட்சி என்ற அமைப்பை உருவாக்குவதற்கான திட்டத்தை சிங்காரவேலர் முன்மொழிந்தார். அது ஈரோட்டுத் திட்டம் என்று அழைக்கப்பட்டது.

இந்தியாவுக்கு முழு விடுதலை, தேசக் கடன்கள் முழுவதும் ரத்து, தொழில்சாலைகள், வங்கிகள், ரயில்வே ஆகியவை



தேசியமயம், காடுகள் விவசாய நிலம் மக்களின் உரிமை, விவசாய கடன் ரத்து, ஏழு மணிநேர வேலை, சுதேச சமஸ்தானங்களை ஒழித்தல், இந்தியாவில் தொழிலாளர் விவசாயிகள் ஆட்சியை கொண்டு வருதல், இவைகள் தான் ஈரோட்டுத் திட்டம்' இத்திட்டத்தை விளக்கி தமிழகமெங்கும் சுயமரியாதை சமதர்ம மாநாடுகள் நடைபெற்றன. பெரியார், சிங்காரவேலர், ஜீவானந்தம் ஆகியோர் அயராது பாடுபட்டு தமிழகம் முழுவதும் சுயமரியாதை சமதர்ம இயக்கத்தின் கிளைகளை உருவாக்கினர்.

சுயமரியாதை இயக்கத்திற்குள் சமதர்மப் போக்கை விரும்பாதவர்கள் ஆங்கிலேயரின் ஆட்சியை பகைத்துக் கொள்ளாமல், சமூக சீர்திருத்தங்களை ஆதரித்தால் போதும் என்று பெரியாரை வலியுறுத்தி வந்தனர்.

பெரியார் கைது, பெரியாரின் நீதிக்கட்சி ஆதரவு, நீதிக் கட்சியின் வற்புறுத்தல் இவைகளால் பெரியார் ஈரோட்டுத் திட்டத்தை கைவிட்டார். 1936 பிப்ரவரியில் திருத்துறைப்பூண்டியில், கூடிய மாநாட்டில் உருவான சுயமரியாதை சமதர்ம கட்சி 1936 நவம்பரில் திருச்சியில் கூடிய மாநாட்டில் கலைக்கப்பட்டு, காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியுடன் இணைவது என்று முடிவெடுக்கப்பட்டது.

1934ல் தடைசெய்யப்பட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தலைமறைவாக செயல்பட்டு கொண்டு இருந்தது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் இணைந்து பணியாற்றுவது என முடிவு செய்தது.

1934ல் ஜூலை மாதம் ஹைதர்கான் தலைமறைவாக சென்னைக்கு வந்து கட்சியை அமைப்பு ரீதியாகக் கட்டினார்.

**சென்னை ஜார்ஜ் கோட்டையில் பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடியை இரவோடு இரவாக இறக்கிவிட்டு தேசியக் கொடியை ஏற்றிய பாஷ்யம் என்ற ஆர்யாவும் அமிர்ஹைதர் ஹானுடன் தொடர்பு கொண்டார். இவர்தான் சென்னை நகரத்தில் கட்சிக்கு முதல் செயலாளராக இருந்தார்.**

சென்னையில் தங்கியிருந்த தோழர் சுந்தரையா பாண்டிச்சேரி, வ.சுப்பையா ஆகியோருடன் அமீர் ஹைதர்கான் தொடர்பு கொண் டார்.

1936 ல் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் ஜீவா, சீனிவாசராவ், பி.ராமமூர்த்தி, எ.எஸ்.கே.அய்யங்கார், கே.முருகேசன், இளங்கோ போன்றோர் செயலாற்றினார்.

1936ம் பம்பாயிலிருந்து எஸ்.வி.காட்டே நாடு கடத்தப்பட்டு சென்னைக்கு வந்தார். இவரும் தமிழ்நாட்டில் கட்சி அமைப்பை உருவாக்க வழி காட்டினார். இவரின் வழிகாட்டுதல்களின் கீழ் பி.சீனிவாசராவ், ப.ஜீவானந்தம், பி. ராமமூர்த்தி, சி.எஸ். சுப்பிரமணியம், ஏ.எஸ்.கே.அய்யங்கார், கே.முருகேசன் ஆகிய தலைவர்கள் பணியாற்றினர். இவர்கள் பங்கேற்ற அமைப்பு கம்யூனிஸ்ட்''செல்'' என்று அழைக் கப்பட்டது. இதற்கு செயலாளர் என்று யாரும் கிடையாது. கூட்ட நிகழ்ச்சிகளை பதிவேடு எழுதுபவரே செயலாளராக கருதப்பட்டார். தோழர் சி.சுப்பிரமணியம் இந்தப் பணியை செய்ததால் அவரே செயலாளராக இருந்தார்.

1936ம் ஆண்டு விவசாய சங்கம் உருவாக்கப்பட்டது. அதே ஆண்டில் சென்னை மாணவர் சங்கமும் துவக்கப்பட்டது. 1937ல் ஜனசக்தி துவங்கப்பட்டது.

1936–38ம் ஆண்டுகளில் தமிழகத்தில் கட்சியின் கட்டமைப்பு அமைப்பு ரீதியாக உருவாக்கப்பட்டு விட்டது. பல துறைகளில் கட்சி செயல்பட ஆரம்பித்தது. தொழிலாளர்கள் போராட்டம், விவசாயிகள் போராட்டம், மாணவர்கள் போராட்டம் என பல நிலைகளில் போராட்டங்கள் நடைபெற்றன.

1938 ம் ஆண்டு இங்கிலாந்தில் கல்வி பயின்று கொண்டிருந்த மோகன் குமாரமங்கலம், சி.எஸ் சுப்பிரமணியம் ஆகியோர் கம்யூனிஸ்ட்களுடன் இணைந்து இயக்க வேலைகளைத் தீவிரப்படுத்தினர். அப்போது அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பட்டம் படித்த சுப்பிரமணிய சர்மாவும், பி.ராமமூர்த்தியும் கட்சியில் இணைந்து செயலாற்றினர்.

1939 கட்சி மீது தடை விதிக்கப்பட்ட போதும் கட்சியின் வெகுஜனப் போராட்டங்களை தடுத்து நிறுத்த முடியவில்லை. தமிழகத்தில் இனியும் கட்சியை வளரவிடாமல் தடுக்கும் நோக்கோடு 1940–41 சென்னை சதிவழக்கு போடப்பட்டது. இதைத் தொடர்ந்து கோவை சதி வழக்கு, நெல்லை சதிவழக்கு என்று பலப்பல சதி வழக்குகள் தொடர்ந்தது.

# இடைப்பட்ட கால கட்டம்




**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு மாநாட்டுக்கும் முதலாவது கட்சிக் காங்கிரசுக்கும் இடையே உள்ள அரசியல் காலகட்டம் மிக முக்கியமானதாகும்.**

1926–27களில் ஒரு போர்க்குணம் வாய்ந்த தொழிற்சங்க இயக்கத்தை கட்டியமைக்கும் பணியையும், விவசாயிகள் இயக்கத்தை தொடங்கும் பணியையும் கட்சி மேற் கொண்டது.

1921 முதலே இந்திய தேசிய காங்கிரசுக் குள்ளேயே முழு விடுதலைக்காக குரல் எழுப்பி போராடிய கம்யூனிஸ்ட்டுகள் 1929 வரையிலும் செயலூக்கமாகப் பணியாற்றினர். காங்கிரஸ் கட்சியின் தீவிரப் பகுதியினருக்கு கம்யூனிஸ்ட்டுகள் ஆதரவளித்தனர்.

தொழிற்சங்க இயக்கங்களை கட்டுவதில் ஜார்ஜ் அலிசல், பென் பிராமலி ஆகிய பிரிட்டீஷ் கம்யூனிஸ்ட் தொழிற் சங்கத்தலைவர்கள் பேருதவி புரிந்தனர். இச் செயலுக்காக இந்தத் தலைவர்களை பிரிட்டீஷ் அரசாங்கம் சிறையில் தள்ளியது.

1926–29 இந்த இடைப்பட்ட காலகட்டத்தில் சுறுசுறுப்பான ஸ்தாபன அமைப்புகள் மற்றும் அரசியல் பணிகளும் நடைபெற்றன. இதனால் கட்சி வேகமாக வளர்ச்சியடைந்தது.

1928ல் இந்தியாவில் நடைபெற்ற 203 வேலை நிறுத்தங்களில் 5,08,850 பேர் பங்கேற்றனர். அதுவரை நடைபெற்ற போராட்டங்களைவிட மிகப் பெரிய போராட்டமாகும். இந்த வேலை நிறுத்தப் போராட்டங்களின் ஊடே எண்ணற்ற தொழிற்சங்கங்கள் உருவாகின.

இந்த சட்டக் கெடிபிடிக்கு இடையில் ‘அகில இந்திய தொழிலாளர்கள் விவசாயிகள் கட்சி’ என்ற அமைப்பை வெளிப்படையான செயல்பாட்டிற்காக அமைக்கப்பட்டது.



தேச சமூக விடுதலைக்காக அனைத்து தேசபக்த சக்திகளை ஒன்றிணைத்து, ஏகாதி பத்திய எதிர்ப்பு, ஜனநாயக புரட்சிக்கான ஒரு திட்டத்தை வைத்து விவாதிக்கப்பட்டது.

1928ல் நடைபெற்ற அகில இந்திய தொழி லாளர்கள் விவசாயிகள் கட்சியின் தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

- உழுபவனுக்கே நிலம் சொந்தம்!
- அந்நிய ஏகாதிபத்திய மூலதனத்தை தேசிய மயமாக்குதல்.
- வயது வந்தோருக்கு வாக்குரிமை
- நாள் ஒன்றுக்கு 8 மணி நேர வேலை
- சங்கம் வைத்தல், கூட்டம் போடு தல், போராட்டங்கள் மற்றும் வேலை நிறுத்தம் ஆகிய ஜனநாயக உரி மைகள்.
- தீண்டத் தகாதவர்களுக்கு சமூகநீதி மற்றும் பல கோரிக்கைகள் கம்யூ னிஸ்ட்டுகள் உருவாக்கிய அகில இந்திய தொழிலாளர்கள் விவ சா யிகள் கட்சியில் உருவாக்கப்பட்டு முழங்கப்பட்டன.

1928ல் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தின் போது இந்த கட்சியால் திரட்டப்பட்ட 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆர்ப் பாட்டக்காரர்கள் இக்கோரிக்கைகளை மகா சபையின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

**இந்த மாநாட்டில் ஆர்ப்பாட்டக்காரர்கள் “இன்குலாப் ஜிந்தாபாத்’ என்ற முழக்கத்தை எழுப்பினர்.**

1929ல் மார்ச் 15ல் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை முழுவதின் மீதும் புகழ்பெற்ற மீரத் சதிவழக்கைத் தொடுத்தார்கள்.

1929 மார்ச் 18, 19 தேதிகளில் பம்பாயில் நடைபெற்ற மத்தியக் கமிட்டிக் கூட்டம் முடிந்து வெளிவரும் போதே தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர்.

- இந்த நீதிமன்றம் மூலம் நாங்கள் உலகறிய முழங்குகிறோம். நாங்கள் கம்யூனிஸ்ட்டுகள்!
- எங்களின் தத்துவம் மார்க்சியம் லெனினியம்!
- இந்தியாவுக்கு முழு விடுதலை!
- நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பை ஒழித்தல்!
- இந்தியாவில் சுதந்திரமான ஜன நாயகக் குடியரசை நிறுவுதல்!

“இவைகளே எங்களின் உடனடி இலட்சியம்‘ என்று மீரத் சிறைக் கைதிகளாக இருந்த கம்யூ னிஸ்ட்கள் முழங்கினர்.

1930ல் பர்தோலியில் தொடங்கப்பட்ட முத லாவது ஒத்துழையாமைப் போராட்டம் வாபஸ் பெறப்பட்டது. இதனால் அதிருப்தி அடைந்து, புதிய பாதையை தேடிக் கொண்டிருந்த காங்கிரஸ் கட்சிக்குள் இருந்த இடது சாரிகளுக்கு ஒரு தெளிவான, ஒருங்கிணைந்த தீவிரமான திசை வழியைக் கொடுப்பதில் கம்யூனிஸ்ட்டுகள் குறிப்பிடத் தக்க பங்காற்றினர்.

மேற்கண்ட அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு ‘நகல்செயல் திட்டம்‘ என்ற கட்சியின் ‘முதலாவது வேலைத் திட்டம்‘ 1930ல் தயா ரிக்கப்பட்டது. அதன் அச்சிட்ட பிரதிகள் ஆயிரக்கணக்கில் கராச்சியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் சட்ட விரோதமாக விநி யோகம் செய்யப்பட்டன.

1925 முதல் 1930 வரை எஸ்.வி.காட்டேயும் 1931இல் 1935 வரை எஸ்.வி. தேஷ்பாண்டேயும் சிறைக்கு வெளியே கட்சியின் பொதுச் செய லாளராகவும், மீரத் சிறைக்குள்ளே கட்சிக் குழுவிலிருந்து எஸ்.எ. டாங்கே அகற்றப் பட்டதற்குப் பின்பு டாக்டர் ஜி. அதிகாரி பொதுச் செயலாளராகவும் இருந்தனர். 1936ல் பி.சி.ஜோசி பொது செயலாளர் ஆனார்.

1933 வரை மீரத் சதி வழக்கு நடைபெற்றது. டாங்கே, முசாபர் அகமது, ஜோக்லேக்கர், மிராஜகர், நிம்கர், தரமணி கோஸ் சுவாமி உட்பட முக்கியமான 32 தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தனர்.

எனவே 1929 முதல் 1933 வரை விடுதலை போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் நேரடியான பங்குபெற முடியவில்லை. இதனால் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்தது.

சதிவழக்கின் முடிவில் சிறையிலிருந்து சிலர் விடுதலையாகினர். பலர் நீண்டகால சிறைத் தண்டனை பெற்றனர். பின்னர் கட்சி அமைப்புகள் மீண்டும் புனரமைக்கும் பணி தொடங்கியது. அரசியல், தொழிற்சங்கம், விவசாய சங்கம் மற்றும் பிற அரங்கங்களில் புதிய உத்வேகத்துடன் பணிகள் நடைபெற்றன.

1934ல் கம்யூனிஸ்ட் கட்சி தடைசெய்யப் பட்டது. கம்யூனிஸ்ட்களை அடக்க புதிய யுத்தி யாக 1908ஆம் ஆண்டின் சட்டப்பிரிவு 14ன்படி என்று கூறி கம்யூனிஸ்ட் கட்சி ஒரு சட்ட விரோத அமைப்பு’ என்று கொண்டு வந்தனர்.

“இந்தியா விடுதலை பெறுவது கம்யூனிஸ்ட் கட்சியின் நீண்ட காலத்திட்டம் அல்ல. ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் மூலம் உடனடி விடுதலை என்பதே அவர்களின் நோக்கம்“. என்று தடைக்கான காரணம் கூறப்பட்டது. இந்தத் தடை கட்சியை தலைமறைவு வாழ்க் கைக்குத் தள்ளியது.

இருந்த போதிலும் புரட்சிவாதிகளும், செயல் வீரர்களும் அதிக அளவில் கட்சியில் சேர்வதை ‘தடையால்’ தடுக்க முடியவில்லை. அந்தமான், தியோலி, பக்ஸா மற்றும் பல கொடிய சிறைச் சாலைகள் புரட்சிக்கான பல்கலைக் கழகங்கள் ஆகின.

1936ம் ஆண்டில் அகில இந்திய கிசான் சபா, அகில இந்திய மாணவர் பெருமன்றம், அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஆகிய வெகுஜன அமைப்புகள் தொடங்கப்பட்டன.

வெகுஜனத் போராட்டங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. கம்யூனிஸ்ட்டுகள் பலம் பெறத் துவங்கினர்.

1939ல் துவங்கிய 2வது உலகப் போர் 1941 ல் ஜூன் 22ம் தேதியில் புதிய கட்டத்துக்குள் நுழைந்தது. சோவியத் யூனியன் மீது ஹிட்லர் படையெடுத்ததால் அது பாசிச எதிர்ப்பு மக்கள் யுத்தமாக மாறியது.

பாசிசத்தை முறியடிக்க தேசிய அரசு அமைய வேண்டும். தேசிய அரசு கட்டப்பட வேண்டும் என்ற முழக்கத்தோடு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ‘மக்கள் யுத்தம்‘ குறித்த கொள்கையை வெளியிட்டது.

1942ல் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீதான தடை நீக்கப்பட்டு சட்டபூர்வமாகத் செயல்படத் தொடங்கியது.

1942ல் ‘செய் அல்லது செத்துமடி என்ற கோஷத்துடன் காந்திஜி ஆகஸ்ட் போராட்டம் அறிவித்தார்.

காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் கைது செய் யப்பட்டனர். கைதான காங்கிரஸ் தலைவர்களை விடுதலை செய்யக்கோரி கம்யூனிஸ்ட் கட்சி போராடியது. இருப்பினும் இக்கால கட்ட அரசியல் சம்பந்தமாக கருத்து மோதல்கள் ஏற்பட்டது. கம்யூனிஸ்ட்கள் மீது தேசியவாதிகள் அவதூறுகளை அள்ளி வீசினர்.

இக்காலகட்டத்தில் கடுமையாக எதிர் நீச்சல் அடித்துதான் கட்சி வளர்ந்தது.

1943ல் இந்திய மக்கள் நாடக மன்றம் (இப்டா) அமைப்பு தொடங்கப்பட்டது.

1935ம் ஆண்டு கட்சி உறுப்பினர் எண் ணிக்கை ஆயிரத்தை தாண்டவில்லை. ஆனால் 1936 முதல் 43 வரை கடும் போராட்டங்கள் நிறைந்த காலத்தில் மக்களின் பேரெழுச்சியை உருவாக்கியதில் கம்யூனிஸ்ட்களின் பங்க ளிப்பால் 1943ல் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 16000த்தை தொட்டது.

இதன் தொடர்ச்சியாக 1943ல் மே 23 முதல் ஜூன் 1 வரை 10 நாட்கள் பம்பாயில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது கட்சிக் காங்கிரஸ் தொடங்கி நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்நாடு 25 மாநில மாநாடு



வெற்றி பெற
வாழ்த்துகிறோம்!

ஏ.ராஜ்குமார்
செங்கல்பட்டு மாவட்ட செயலாளர்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்நாடு 25 மாநில மாநாடு



வெற்றி பெற
வாழ்த்துகிறோம்!

பா.கார்த்திக்
காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர்




# கம்யூனிஸ்ட் கட்சியின் துவக்கமும் – தொடர்ச்சியும்

**இரா.நல்லகண்ணு**



**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் துவக்க மாநாடு 1925 டிசம்பர் மாதம் கான்பூரில் நடந்தது. மாநாட்டை தென்னகத்தின் முதல் கம்யூனிஸ்டான மா.சிங்காரவேலர் துவக்கி வைத்தார். துவக்கவுரையே அன்றைய அடிமை இந்தியாவின் சமூக அரசியல் ஆய்வு ஆவணமாக விளங்குகிறது.**

இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்டுகளாகிய நாம் இந்த அரங்கில் இந்தியாவில் நிலவும், அரசியல், பொருளாதார நிலைகளைப் பொதுவாக ஆராயவும், நம் நாட்டு மக்கள் வாழ்வை மேலும் சிறப்பாகவும், மகிழ்ச்சி நிறைந்ததாகவும் ஆக்குவதற்குரிய நடவடிக்கைகளை திட்டமிடவும் இன்று கூடியுள்ளோம்.

நம் நாட்டு மக்கள் மட்டுமே இம்மண்ணில் மனித இனம் வாழும் மிக்க துயரம் தோய்ந்த பகுதியைச் சார்ந்தவர்கள். வாழ்க்கைக்குத் தேவையான உணவு, உறையுள், உடை, மனித வாழ்வின் மிகவுயர்ந்த விடுதலை, ஒத்த உரிமை, அறிவு ஆகியவைகளை இழந்து நம் நாட்டின் பெரும் பகுதி மக்கள் உலகிலுள்ள மற்ற நாடுகள் எட்டியுள்ள தரத்தைவிட மிகக் கீழான நிலையிலுள்ளனர். 30 கோடி மக்களில் 4 கோடி மக்களுக்குப் போதுமான உணவும் ஆடையுமில்லை என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த மனித சமுதாயத்தின் குமுறிக் கொண்டிருக்கும் பெருந் திரளான, ஏறத்தாழ பாதி மக்கள் இழிவான வீடுகளில் உள்ளனர். மனிதர்கள் குடியிருப்பதற்கான உறைவிடம் அவர்களுக்குக் கிடையாது. நூற்றுக்கு 80 விழுக்காட்டினர் எழுத்தறிவற்றவர்கள். நான்கில் ஒரு பகுதியினர் தீண்டாதோர் எனப்படுபவர்.

சுயராஜ்ய அரசில் தொழிலாளர், விவசாயிகளின் உரிமைகளைப் பெற நம் கட்சி கடைப்பிடிக்க வேண்டிய வழிகளை இம்மாநாட்டில் சிந்திக்குமாறு நான் வேண்டுகிறேன். ஆதலால் ஒவ்வொரு இந்தியக் கம்யூனிஸ்ட்டின் குறிக்கோள் கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும். சுயராஜ்யம் இன்றேல் வாழ்வில்லை; தொழிலாளி இன்றேல் சுயராஜ்யமில்லை" என்று முடித்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு 30 தோழர்களைக் கொண்ட மத்தியக் குழுவும், தோழர் காட்டே செயலாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி செயல்படத் துவங்கியதும், பிரிட்டிஷ் ஆட்சி மீரத், கான்பூர் சதி வழக்குகளைத் தொடுத்தது; 1934ல் தடை செய்யப்பட்டது; 1943ல் தடை நீக்கப்பட்டாலும், கம்யூனிஸ்டுகள் ஏகாதிபத்திய ஆட்சியின் வைரிகளாகக் கருதப்பட்டதால் ஜீவா போன்ற தலைவர்கள் 1940ல் கைது செய்யப்பட்டனர். நாடு கடத்தப்பட்டார். தமிழ்நாட்டுக்குள் 1945ல் தான் நுழைய அனுமதிக்கப்பட்டார். கட்சிக்கு மீண்டும் 1948 முதல் 1951 முடிய தடை விதிக்கப்பட்டது.

தடை விதிக்கப்பட்ட காலங்கள் நீங்கலாக மற்றைய காலங்களில் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை இந்திய அளவில் மாவட்ட, மாநில மாநாடுகளும் அகில இந்திய மாநாடுகளும் ஜனநாயக முறையில் நடத்தப்பட்டு வருகின்றன.

இதுவரை அகில இந்திய மாநாடுகள் 24 நடந்து முடிந்துள்ளன. 25வது அகில இந்திய மாநாடு ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் வரும் அக்டோபர் 14 துவங்கி நடைபெற இருக்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் அமைப்பு விதிப்படி, மாநாட்டில் விவாதிக்கப்பட இருக்கும் அரசியல் அறிக்கை இரண்டு மாதங்களுக்கு முன்பே தயாரித்து, எல்லா மாநிலக் குழுக்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. மாநில மொழிகளில் மொழி பெயர்த்து மாநில மாநாடுகளில் விவாதிப்பதற்கும், கருத்துக்களைச் சொல்வதற்கும் வாய்ப்பளிக்கப்படும். அகில இந்திய மாநாட்டிலும் கருத்துத் தெரிவிக்கவும் வாய்ப்பளிக்கப்படும். எதிர்வரும் மூன்றாண்டுகளுக்கு அரசியல் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் திசை வழியைத் தீர்மானிப்பதிலும் ஜனநாயக முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

தேர்தலில் வெற்றி தோல்வியைப் பற்றி மட்டுமல்லாமல், மக்களின் வாழ்வாதாரங்கள், நாடாளுமன்ற ஜனநாயக நெறிமுறைகள் எவ்வாறெல்லாம் சீர்குலைக்கப்படுகிறதென்பதைத் தகுந்த ஆதாரங்களுடனும் விவாதிக்கப்படுகின்றன.

தேர்தலில் எந்தக் கட்சிகளை ஆதரிப்பது, எதிர்ப்பது என்பதெல்லாம் தேர்தல் கால உத்திகள், தற்காலிகமானவை, மாறாக மக்கள் நலன் சார்ந்த வாழ்க்கை நிலை உயர்வுக்கான திட்டங்கள் ஜனநாயக நெறிமுறைகள் பாதுகாப்பதை, உணவு, உடை, உறைவிடம், கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு போன்ற அடிப்படை வசதிகள் அனைவருக்கும் கிடைத்து, சமுதாயத்தின் உள்கட்டமைப்பை வலுப்படுத்தும் பொருளாதார அரசியல் கோரிக்கைகளை நடவடிக்கைகளுக்கு முன்வைத்து விரிவடைந்த மக்கள் இயக்கங்களுக்குத் திட்டமிடுவதே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் மாநாட்டின் குறிக்கோளாக இருந்து வருகிறது.

தேசிய, சர்வதேசிய கார்ப்பரேட்டுகள் மிகவும் முக்கியமான விவசாயத் துறையில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது... இரும்பு, நிலக்கரிச் சுரங்கங்கள், நீர், மணல் உள்ளிட்ட இயற்கை வளங்கள் பன்னாட்டு நிறுவனங்களால் வரைமுறையில்லாமல் சுரண்டப்படுகின்றன. ஜி.எஸ்.டி. வரி விதிப்பு எனும் முறையால் ஒட்டுமொத்த மக்களும் சுரண்டப்படுகின்றனர். முன்னெப்போதும் இல்லாத அளவு காடுகள் அழிக்கப்படுவதும் தொடர்கிறது.

ஒவ்வொரு மாநாட்டிலும் தொடர்ந்து ஆய்வறிக்கையில் ஊழலின் ஆபத்தை எடுத்துக் கூறி எச்சரித்துள்ளது.

முதன் முதல் 1992ல் ஹைதராபாத்தில் 15வது அகில இந்திய மாநாட்டில் அறிக்கையில் "கிரிமினல் மயமாகி வரும் அரசியல் தளம்" **(Criminalisation and atrocities)** என்ற தலைப்பில் சொல்லப்பட்டதாவது:

"தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மதமும், சாதிகளும் பயன்படுத்தப்படுகிறது; பணத்தையும் அடியாட்களையும் பயன்படுத்தி வாக்குசாவடிகளை கைப்பற்றவும் வாக்குகளைப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முதலாளித்துவ அரசியல் கட்சிகள் இதற்குத் தயங்குவதில்லை; நடைமுறையில் சட்டமன்றங்களிலும், பஞ்சாயத்து நகர்மன்றங்களிலும் கிரிமினல்களின் பிடிப்பு வலுப்பட்டு வருகிறது"

1995ல் டெல்லியில் நடந்த 16வது அகில இந்திய மாநாட்டில் புற்று நோயாகி முற்றி விட்ட ஊழலும், கிரிமினல் மயமாகியிருக்கும் அரசியலும் **(Cancer of Corruption and Crminalisation of Politics)** என்ற தலைப்பில் ஒரு பகுதி.

"இன்றைய சமூகக் கட்டமைப்பில் ஊழல் புற்றுநோய் போல் வேர்பிடித்து விட்டது. அது முடி முதல் அடிப்பாத நகம் வரை புரையோடி விட்டது; சமூகத்தின் அன்றாட வாழ்க்கையில் அரசியல், வர்த்தகம், நிர்வாகம், நீதியமைப்பு, ஊடகங்கள், கல்வி, கலாச்சாரம் ஆகிய அனைத்திலும் நீக்கமற ஊடுருவி விட்டது.

அரசு அமைத்த வோரா குழு அறிக்கை அந்நிய உளவுத்துறை அமைப்புகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டு கொள்ளைக் கும்பல்கள் அரசுக்கு எதிராக மாற்று நிர்வாகத்தை நடத்தி வருகிறது" என்று எச்சரித்துள்ளது. மத்திய உள்துறை அமைச்சகத்தின் காவல் துறை ஆய்வறிக்கையில் நாட்டில் ஏற்பட்டு வரும் சமூக பொருளாதார மாற்றங்களின் நேரடி விளைவாகவே நவீன வகையான கிரிமினல் நடவடிக்கைகள் பெருகி வருகின்றன என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது. அரசு அதிகார மையத்தினரின் குற்றங்கள் 1991ல் 2.9 விழுக்காடாக இருந்தது. 1992ல் 3.1 ஆக அதிகரித்துள்ளதாக ஆய்வு செய்திருக்கிறது. இத்தகைய குற்ற நடவடிக்கைகள் இந்திய சமூகத்தையே நிலை குலையச் செய்கிறது.

கையறு நிலையிலுள்ள வெறும் பார்வையாளர்களாக இல்லாமல், பண ஆதிக்க சக்திகளும், கிரிமினல்களும், அரசியல் ஜாதிகளும், அதிகார வர்க்கமும், காவல்துறையும் இணைந்த கொள்ளைக் கூட்டத்தின் ஊழலை எதிர்த்து நல்லெண்ணங் கொண்ட மக்களையும் மக்கள் நல உரிமைப் போராளிகளையும் திரட்டிக் களத்தில் இறங்கிப் போராட வேண்டும் என்று அறைகூவல் விட்டுள்ளது.

**(Fight against corruption, blatant use of money power and criminal - politi-cian - bureaucrat - police nexus)**

1998இல் சென்னையில் நடந்த 17வது அகில இந்திய மாநாட்டில் ஊழலையும், கிரிமினல்களின் அரசியல் ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராட வேண்டும், பொது வாழ்வில் நேர்மையை நிலைநாட்டுவதற்காகப் போராட வேண்டும்" என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

2002ல் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற 18வது அகில இந்திய மாநாட்டிலும் 'ஊழல் என்பது ஏதோ பாரதீய ஜனதா கட்சியை மட்டும் பொருத்ததல்ல,. இது மாநில ஆளுங் கட்சிகளையும் கூட முடி முதல் அடி வரை பாதித்திருக்கும் தொற்றுநோய். பொது வாழ்க்கையை மாசுபடுத்தும் மிக மோசமான ஒன்று; இதை நாம் எதிர்த்துப் போராடியாக வேண்டும். இதே போல் அரசியலில் குற்றவாளிகள் நுழைவதையும் எதிர்த்துப் போராடி ஜனநாயக் நெறிமுறைகளை நிலை நிறுத்த வேண்டும்" என்று அறிவித்துள்ளது.

2005இல் பஞ்சாப் தலைநகர் சண்டிகாரில் நடந்த 19வது மாநாட்டிலும், 2008ல் ஹைதராபாத்தில் நடைபெற்ற மாநாட்டிலும் "ஊழல் எதிர்ப்பு இயக்கம் நடத்தப்பட வேண்டுமென்றும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தகவல் சேகரித்து, கலாச்சார மறுமலர்ச்சி இயக்கமாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அகில இந்திய மாநாடுகளில் நிறைவேற்றப்படும் அரசியல் தீர்மானங்களடிப்படையில் மாநிலங்களில் தொடர் இயக்கங்கள் நடத்தப்பட்டுள்ளன.

**இயற்கை வளங்களை கார்ப்பரேட் கம்பெனிகளுக்குத் தாரைவார்ப்பதைத் தடுத்து நிறுத்தும்போராட்டத்தில் சதீஸ்கரிலும், ஒரிசா மாநிலத்திலும் பழங்குடி மக்களின் பாதுகாவல் அரணாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் விளங்குகிறார்கள்; சில தலைவர்கள் கடந்த பல மாதங்களாக சிறையில் வாடுகின்றனர்; சிலர் கொல்லப்பட்டுள்ளனர்.**

வகுப்புவாத பா.ஜ.க. மோடிய தலைமையிலான ஒன்றிய அரசு மாநிலங்களின் உரிமையை தொடர்ந்து அழித்தொழித்து வருகிறது. தனது இந்துத்துவ நிகழ்ச்சி நிரலை திணிப்பதன் மூலம் மதவெறி கலவரங்களை பெருமளவு நடத்துகிறது. தனது கார்ப்பரேட் விசுவாச மதவெறி அரசியலை மிக மூர்க்கமாக அமல்படுத்துவதால் சாதாரண ஏழை எளிய மக்கள் இன்று விழிபிதுங்கி நிற்கின்றனர். மதச்சார்பற்ற அரசியல் சட்டத்தையும், சீர்குலைக்கும் விதமாக தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. கல்வி, கலாச்சாரம், பண்பாடு என அனைத்திலும் மதவெறி சிந்தனைகளை தொடர்ந்து புகுத்தி வருகிறது.

இந்தநிலையில் இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் அறிக்கைகள் காலந்தோறும் இந்திய உழைக்கும் மக்களின் உள்ளக் குமுறல்களையும் கொதிப்புகளையும் வெளிப்படுத்தும் சமுதாய ஆய்வு ஆவணங்களாகும். அறிக்கைகளையே கருத்து ஆயுதமாகத் தாங்கி, களத்தில் இறங்குகிறோம். இன்று வரை ஊழலைப் பற்றி, மதவெறி அபாயத்தைப் பற்றி தொடர்ந்து சொல்லி வருகிறோம். இந்திய சமுதாயக் கட்டமைப்பில் இத்துணை தடைகளையும் கடந்து மக்கள் மத்தியில் விழிப்பேற்பட்டு வருகிறது.

பொழுது புலர்வதை அறிந்து கூவும் சேவல் போல், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் சமுதாய மாற்றத்துக்கான புதிய விடியலைக் காட்டும் அரசியல் தீர்மானங்களை மக்கள் முன்வைக்கிறது.

திருப்பூரில் நடைபெறும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது மாநில மாநாடு தமிழக அரசியலில் புதிய திருப்பத்தை நிகழ்த்தும் மாநாடாக திகழட்டும்!





வெற்றி பெற வாழ்த்துகிறோம்!



பா.கருணாநிதி
மத்திய சென்னை மாவட்டச் செயலாளர்

பி.மாரியப்பன், பி.ரஞ்சித், துணைச் செயலாளர்கள்
மு. வரதன், மாவட்ட பொருளாளர்






வெற்றி பெற வாழ்த்துகிறோம்!

பி.கரும்பன்
தூத்துக்குடி மாவட்டச் செயலாளர்

# தியாகச் செம்மலர்கள்

**இன்று உலகம் முழுவதிலம், இந்திய மண்ணிலும் தமிழ் மண்ணிலும் கம்யூனிசக் கருத்துக்கள் ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி வருகின்றன என்றால் அதற்கு செய்யப்பட்ட தியாகம் வர்ணனைக்கும் எட்டாதது மனிதகுலம் துன்பங்கள் நீங்கி இன்பமுற்று வாழ வேண்டுமென்பதற்காக கம்யூனிஸ்டுகள் செய்த தியாகத்திற்கு உலகிலே ஈடு இணை கிடையாது.**

அந்த அளவுக்கு ஆயிரம் ஆயிரமான கம்யூனிஸ்டுகள் தங்கள் இன்னுயிர்களை அடக்குமுறை பலி பீடத்தில் ஈந்திருக்கிறார்கள்; தங்களது சொத்து, சுகம், இன்பம், வீடுவாசல், நில புலன்கள் எல்லாவற்றையும் இழந்திருக்கிறார்கள்! ஏகாதி பத்திய எதிர்ப்புப் போரிலே, மக்களின் நல்வாழ்வுக் கான போராட்டங்களிலே விழுப் புண்கள் பெற்றிருக்கிறார்கள்; சுரண்டும் வர்க்கத்தின் துப்பாக்கி ரவைகள் துளைத்தத் தியாகத் தழும்புகள் ஏற்றிருக்கிறார்கள்.

சுருங்கக் கூறின் தியாகம் என்பதற்கே இலக்கணமாக கம்யூனிஸ்டுகள் திகழ்ந்திருக்கிறார்கள். ஜெர்மனியில் நாஜிஸத்தின் கசாப்புக் கடை கொலை வெறிக்கு ஆளான ரோசா லக்சம்பர்க்கையும், லீப்நெக்ட்டையும், தேல்மனையும் நாம் மறக்க முடியாது. பிரான்சில் பாசிஸத்தின் நர வேட்டைக்காளான ஜார்ஜ் பொலிட்ஸரையும் கேபிரியலையும் நாம் மறக்க முடியாது; ஏகாதிபத்திய கோரப் பசிக்கு இரையான அமெரிக்க அமர ஜீவிகள் ரோசன்பர்க் தம்பதிகளையும், இத்தாலிய தலைவர் லெவனேயையும், இந்தோனேஷ்ய வீரர் மூசோவையும், மலேயா கணபதியையும் நாம் மறக்கமுடியாது. சதையைத் துண்டு துண்டாக வெட்டினும் உன் எண்ணம் சாயுமோ என்று சங்கநாதம் முழங்கி ஹிட்லரின் இரும்பு நெஞ்சப் படைகளிடம் அணு அணுவாகச் சித்திரவதைப்பட்டு மடிந்த வீராங்கனை டான்யாவையும், இரண்டாம் உலக யுத்தத்தின் போது பாசிஸப் பேய்களை எதிர்த்து வெஞ்சமர் புரிந்து வீரமரணம் எய்திய லட்சோபலட்சம் சோவியத் கம்யூனிஸ்டுகளையும் நாம் மறக்க முடியாது; பிறந்த பொன்னமுத பூமிக்காகத் தூக்குக் கயிற்றை புன் சிரிப்போடு முத்தமிட்டு, வானும் பூமியும் கடலும் மலையும் மனித வர்க்கமும், உள்ள வரையிலும் நிலைத்து நிற்கும் வீரகாவியத்தை எழுதி உயிர் நீத்த உத்தமர் ஜூலியஸ் பியூசிக்கை நாம் மறக்க முடியாது; நாஜி ஆக்கிரமிப்பின் போது, அவர்களைத் தீரத்தோடு எதிர்த்துப் போரிட்டு வீர சொர்க்கம் எய்திய 75 ஆயிரம் இளம் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுகளை நாம் மறக்க முடியாது; இதே போல் செக்கோஸ்லோவாகியா ஹிட்லரின் உடும்புப் பிடியிலிருந்து விடுபட்டு வீர சுதந்திரம் பெறுவதற்காக இரத்தாபிஷேகமும் உயிராபிஷேகமும் செய்த 25 ஆயிரம் செக் கம்யூனிஸ்டு தியாக ரத்தினங்களை நாம் மறக்க முடியாது; இன்னும் நாடும் மக்களும் உய்வும் உயர்வும் பெறவேண்டு மென்பதற்காகத் தம் இன்னுயிரை ஈந்த பம்பாயின் குல்கர்னியை, உத்தரப் பிரதேசத்தின் பரத்வாஜை, கேரளத்தின் நாராயண நம்பியாரை, மோயாரத் சங்கரனை, வயலாறு புன்னப்புரா வீரர்களை, கையூர் தோழர்களை, தெலுங்கானா தியாகச் செம்மல்களை, வோர்லி தீரர்களை நாம் மறக்க முடியாது.

இதே போன்று தமிழகக் கம்யூனிஸ்டுகள் செய்த தியாகமும், அந்த தியாக வேள்வியிலே அவர்கள் காட்டிய தீரமும் யுகயுகாந்திரங்களுக்கும் அமரத்துவம் பெறக் கூடிய வீர காவியங்களாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு சம்பவம் நம் நினைவுக்கு வருகிறது. அப்போது அரசாங்கத்திற்கு வெறியேறிப் போய் பேயாட்டமாடிய நாட்கள். உதயம் அஸ்தமனம் ஆகிய இரண்டும் பயங்கரமாக இருந்த நாட்கள்; எங்கு நோக்கினும் கொடுமையும் கோர நர்த்தனமும்! 'இம்' என்றால் சிறை வாசம், தடியடி, துப்பாக்கிப் பிரயோகம், தூக்குமேடை! அந்தக் காலத்தில் தோழர் எம். கல்யாணசுந்தரத்தின் ஒரே மகள் வீர பூக்ஷணம் பாம்பு கடித்து இறந்து போய்விட்டாள். இதுபற்றி அப்போது கட்சிக் காரியாலயத்திற்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் அவர் என்ன எழுதியிருந்தார் என்பதைப் படியுங்கள்;

"பூஷி (வீர பூக்ஷணம்) பாம்புக்கடிக்கு இரையானாளே என்று நான் விசனப்படுகிறேன். அவள் ஏகாதிபத்திய வெடிகுண்டுக்குப் பலியாகி இருந்தால், நான் சந்தோஷப்பட்டிருப்பேன்.

**ஒரு கம்யூனிஸ்டின் ஈடு இணையில்லாத தியாக உணர் விற்கு இதைவிட என்ன அத்தாட்சி வேண்டும்! இத்தகைய அப்பழுக்கற்ற தியாக பரம்பரையிலே வந்த நமது தோழர்கள் தமிழகத்தில் எத்தனை எத்தனை பேர் எப்படி எப்படி வதனத்திலே லட்சிய ஒளியும், உதட்டிலே புன் சிரிப்பும் தவழ அஞ்சா நெஞ்சத்தோடு மரணத்தைத் தழுவினார்கள் என்று சொன்னால் நம் அங்கமெல்லாம் சிலிர்க்கும், நெஞ் சமெல்லாய் விம்மும், விழிகளெல்லாம் நனையும், இரத்தக் கண்ணீர் சொரியும்!**



எத்தனை எத்தனையோ தோழர்கள்! தங்களுக்கு ஏற்பட்ட இன்னல்களைப் பொருட்படுத்தாமல், ஆட்சியாளர்களின் கொடிய அடக்குமுறைகளைத் தாங்கி நின்று, வர்க்கப் போராட்டங்களில், மக்களின் நல்வாழ்வுப் போராட்டங்களில் முன்னணியில் நின்று, மரணத்தைத் தழுவி வீரத்தியாகம் புரிந்துள்ளனர்.

இன்று மிகப் பெரிய, மிகமுக்கியமான பணிகள் கட்சியை கட்சித் தோழர்களை எதிர்நோக்கியிருக்கும் போது, அமரர்களாகிவிட்ட அந்தத் தோழர்களின் தியாகம் நமக்கு மேலும் உத்வேகமளிக்கட்டும். அவர்களை நினைவு கூர்ந்து நம் லட்சியப் பாதையில் தொடர்ந்து முன்செல்வோம்.

**சிவராமன்:** தஞ்சை மாவட்டம் சாம்பவான் ஓடை கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் தோழர் சிவராமன். கம்யூனிஸ்டுக் கட்சி, விவசாய சங்க ஊழியன். 1948ம் ஆண்டைத் தொடர்ந்து கம்யூனிஸ்டுக் கட்சியின் மீது ஆட்சியாளர்கள் ஏவிவிட்ட அடக்குமுறையில் மிகவும் பாதிப்புக்குள்ளான மாவட்டங் களில் ஒன்று தஞ்சை மாவட்டம்.

ஒரு துரோகியினால் காட்டிக்கொடுக்கப் பெற்று, போலீசிடம் பிடிபட்டார் தோழர் சிவராமன். தலைமறைவாயுள்ள கம்யூனிஸ்டுத் தலைவர்களைப் பற்றி யாதொரு தகவலையும் பெற முடியாத நிலைமையில் போலீசாரால் ஈவிரக்கமின்றி சுட்டுக் கொல்லப்பட்டார் தோழர் சிவராமன்.





அஞ்சா நெஞ்சம் படைத்த சிவராமன் ஆவி பிரியும் நேரத்திலும் "கம்யூனிஸ்டுக் கட்சிவாழ்க!" என்ற கோஷம் அவரது இதயத்திலிருந்து பீறிட்டெழுந்தது.

**இரணியன், ஆறுமுகம்:** பட்டுக்கோட்டை தாலூகா வாட்டாக்குடி கிராமம் பெற்றெடுத்த வீரப்புதல்வன் இரணியன், பிழைப்புத் தேடி கப்பலேறி மலேயாவுக்குச் சென்ற இரணியன், அங்கு ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து கம்யூனிஸ்டு கொரில்லாப் படையில் சேர்ந்து போராடினார். 1942ல் நாடு திரும்பி சொந்த ஊரில் கம்யூனிஸ்டு கட்சியிலும் விவசாயிகள் இயக்கத்திலும் சேர்ந்து முழு மூச்சுடன் பாடுபட்டார். அடக்குமுறை காலத்தில் அவரது தலைக்கு ரூ. 500 விலை வைத்து காங்கிரஸ் ஆட்சியாளர் பிரகடனம் செய்திருந்தனர்.

வடசேரி கிராமத்தில் துரோகிகளால் காட்டிக் கொடுக்கப்பட்ட நிலையில் தோழர் இரணியனும், தோழர் ஆறுமுகமும் போலீசாரால் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர். இந்த இரு தோழர்களின் பெயர்களைக் கேட்டாலே சிம்ம சொப்பனம் கண்டது போன்ற நிலையிலிருந்த போலீசார், அவர்கள் இருவரின் கைகளையும் கட்டிப் போட்டு, மிருகத்தனமாக சுட்டுக் கொன்றனர். உயிருக்கஞ் சாத அவர்களின் வீரத்தைக் கண்டு போலீஸ் ஜவான்களே தலை குனிந்தனர்.

**ராஜு, நடேசன்:** மன்னார்குடி கோட்டூர் தாழ்த்தப்பட்ட விவசாயத் தொழிலாளியின் மகன் ராஜு. கம்யூனிஸ்டுக் கட்சியின் முழுநேர ஊழியர். 1949ல் தலைமறைவு வாழ்வு. கம்யூனிஸ்டுக் கட்சி சட்டத்தினால் தடைசெய்யப்பட்டிருந்த அன்று,. முக்கிய ஊழியர்களை, வீர இளைஞர்களைத் தங்கள் சொந்தத் திறமை கொண்டு பிடிக்க முடியாத நிலையில் போலீசார் துரோகிகளைத் தான் தங்கள் கருவியாகப் பயன்படுத்தினர். அவ்வாறு தான் ராஜுவும் பிடிக்கப்பட்டு போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதே போன்று, நடேசன் என்ற மற்றொரு தோழரும் காங்கிரஸ் ஆட்சியின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியானார்.



**களப்பால் குப்பு:** தஞ்சை விவசாய மக்களின் தன்னேரில்லாத புதல்வர் களப்பால் குப்பு. ஊக்கம் மிகுந்த கம்யூனிஸ்டு. 1946 பொதுத் தேர்தலில் மாநில சட்டமன்றத்திற்கு கம்யூனிஸ்டுக் கட்சி சார்பில் போட்டியிட்டவர். விவசாயிகளின் இயக்கம் பலமடைந்து வருவதைக் கண்டு, அதை ஒடுக்க தோழர் குப்பு கைதுசெய்யப்பட்டு திருச்சி சிறையில் அடைக்கப்பட்டார். அங்கு பாவிகளால் விஷமிடப் பட்டு உயிர் நீத்தார் தோழர் குப்பு.

**ஒண்டாடித் தேவர்:** சீர்காழி தாலூகா ஆடாமங்கலம் விவசாயிகள் இயக்கத் தோழர் ஒண்டாடித் தேவர் 9.4.52ல் தூங்கிக் கொண்டிருக்கையில் வர்க்க விரோதிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

**சின்னத்தம்பி:** சீர்காழி தாலூகா வைத்தீஸ்வரன் கோவில் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர். எடக்குடி வடபாதி பஞ்சாயத்து உறுப்பினர். தோழர் சின்னத்தம்பி 1961 செப்டம்பரில் விவசாயிகள் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டவர். 13.10.61ல் சீர்காழி மருத்துவ மனையில் காலமானார். பட்டுக்கோட்டை, மம்மங்காடி கிராமத்தைச் சேர்ந்த தோழர் மாரி விவசாயிகள் அறப்போரில் பங்கேற்று திருச்சி சிறையில் அடைக்கப்பட்டிருந்தார், சிறை நிலைமைகளால் சீதபேதி கண்டு திருச்சி ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு அங்கு 20.10.61ல் காலமானார்.

**கே.நல்லகண்ணு:** 1948ம் ஆண்டில் அடக்கு முறைக்கு அஞ்சாமல் விவசாய மக்களுக்கு உறுதியாகப் பணியாற்றிய அருமையான தோழர் கே.நல்லகண்ணு. இவர் மீது காஞ்சிவாய் கலவர வழக்கு, மாயூரம் சதிவழக்கு, சறுக்கை வழக்கு என்று பல வழக்குகள் போடப்பட்டன. சிறையில் வருணிக்க முடியாத சித்திரவதைகளுக்கு உள்ளானார். 14 ஆண்டு, 6 ஆண்டுகள் என்ற பல தண்டனைகளுக்கு உள்ளான இத்தோழர் 11.8.62ல் இயற்கை எய்தினார்.

**தட்சிணாமூர்த்தி:** தஞ்சை மாவட்டம் நாரணமங்கலத்தில் விவசாய சங்கத்தில் தீவிரமாகப் பணியாற்றிய தோழர் தட்சிணாமூர்த்தி, விவசாயிகளின் கோரிக்கைகளுக்காக மிராசுதார்களுடன் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருந்த போது 8.1.66ல் மிராசுதாரர்களின் கையாட்களால் படுகொலை செய்யப்பட்டார்.

**பெருமாள்:** சீர்காழி தாலூகா வள்ளுவக்குடியைச் சேர்ந்த தோழர் பெருமாள் விவசாயிகளின் உச்சவரம்புப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டதற்காக 3 மாத சிறை தண்டனை பெற்று, 28.9.61ல் திருச்சி சிறையில் காலமானார்.

**குப்புசாமி:** விவசாயிகள் அறப்போரில் சிறை சென்ற பரமக்குடி தோழர் குப்புசாமி, மதுரை சிறையில் 7.10.61ல் உயிர் நீத்தார். சிறைகளில் சட்டப்படி கொடுக்க வேண்டிய குறைந்தபட்ச வசதிகள் செய்து கொடுக்கப்படாததால் இந்த கோர மரணம் ஏற்பட்டது. இவர் 15.9.61ல் பரமக்குடியில் விவசாயிகளின் மறியல் போரில் கைதாகி 3 மாதக் கடுங்காவல் தண்டனை பெற்றவர்.

**எஸ்.ராமநாதன்:** இராமநாதபுரம் மாவட்ட நாச்சியார் புரத்தைச் சேர்ந்தவர் தோழர் எஸ்.இராமநாதன். கிருங்காக்கோட்டை விவசாயிகளின் போராட்டத்தில் முன்னணியில் நின்ற இவர் 7 வருட தண்டனை பெற்று மதுரை சிறையில் அடைக்கப்பட்டிருந்தார் அன்றையக் காங்கிரஸ் ஆட்சியாளர்களால். அதே சிறையில் இருந்த, தூக்கு தண்டனை பெற்றிருந்த தோழர் பாலுவைத் தூக்கிலிடாதே என்று அங்கிருந்த கம்யூனிஸ்டு அரசியல் கைதிகள் உண்ணாவிரதமிருந்த போது 1950 ஜூன் 20ல் சிறை நிர்வாகத்தால் அவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறையில் வார்டர்களின் குண்டாந்தடி தாக்குதலுக்கு இரையாகி பலியானார் தோழர் இராமநாதன்.

**சோமசுந்தரம்:** அருப்புக்கோட்டையில் நெசவுத் தொழிலாளர் சங்கத்தைக் கட்டி வளர்க்க அரும்பாடுபட்டவர் தோழர் சோமசுந்தரம். உற்சாகமிக்க கம்யூனிஸ்டுக் கட்சி ஊழியர். திருநெல்வேலி சதி வழக்கில் 13/4 ஆண்டு தண்டனை விதிக்கப் பெற்று பெல்லாரி சிறையில் இருந்த போது மரணமடைந்தார்.

**பொன்னுதுரை:** தோழர் பொன்னுதுரையும் நெல்லை சதி வழக்கில் சேர்க்கப்பட்டு பெல்லாரி சிறையில் தண்டனை அனுபவித்தார். பின்னர் விடுதலையாகி கட்சிப் பணியில் ஈடுபட்டிருந்தார். ஆனால் சிறைவாசத்தின் போது ஏற்பட்ட நோயால் அவர் உடல் நலம் பெரிதும் பாதிக்கப்பட்டு காலமானார்.

**பாரிதாசன்:** இதுபோன்றே, ராமநாதபுரம் மாவட்ட முக்கிய கட்சி ஊழியர்களில் ஒருவரான கிருங்காக்கோட்டை தோழர் பாரிதாசன். இறுதிவரைக் கட்சிப்பணிகளிலே ஈடுபட்டுத் தன் இன்னுயிரைத் தியாகம் செய்தார். 1949ஆம் ஆண்டு நடைபெற்ற உலக வாலிபர் விழாக் கூட்டத்தைப் போலீஸ் கடுமை யான அடக்குமுறை ஏவிக்கலைத்த போது கடுமையான தாக்குதலுக்கு ஆளானார். நீண்ட சிறைவாசத்தினால் காச நோய்க்கு ஆளாகி 14.6.57ல் காலமானார். அப்போது அவருக்கு வயது 42.

**பாலு:** மதுரைத் தொழிலாளி வர்க்கத்தின் சிறந்த புதல்வர் பாலு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு மதுரை சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். தூக்குமேடை ஏறுவதற்கு முன்பு "மறுஜென்மம்" என்று ஒன்று இருந்தால் அப்போதும் கம்யூனிஸ்டாகவே பிறந்து மக்களுக்குத் தொண்டு புரிய விரும்புகிறேன்" என்று கூறிய உறுதியான கம்யூனிஸ்டுத் தோழர்.

**மாரி, மணவாளன், தில்லைவனம்:** 1949–ல் அடக்குமுறை தலைவிரித்தாடிய காலத்தில் மதுரை மாவட்டம் இழந்த சிறந்த புதல்வர்கள் மாரி, மணவாளன், தில்லைவனம். நள்ளிரவில் வீட்டை முற்றுகையிட்டு தூக்கத்தைக் கலைத்து போலீசாரால் தரதரவென்று இழுத்துச் செல்லப்பட்ட மாரியும், மணவாளனும் கைகள் பின்கட்டாகக் கட்டப்பட்டு ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரால் நெஞ்சீரமின்றி சுட்டுக் கொல்லப்பட்டனர். 'எங்கள் நெஞ்சைத் தான் உன்னால் துளைக்க முடியும், எங்கள் லட்சியத்தை உன்னால் துளைக்க முடியுமா?" என்று அறைகூவல் விடுத்த வண்ணம் தரையிலே சாய்ந்தனர். மணவாளன் கவிஞர், ஹிந்தி மொழி ஆசிரியர், மதுரை நகரக் கட்சி செயலாளராக இருந்தார். மாரி தொழிலாளி வர்க்கத்திலிருந்து கம்யூனிஸ்டு கட்சிக்கு வந்தார்.

**ஐ.வி.சுப்பையா, ராமசாமி:** மதுரையின் மற்றொரு சிறந்த கம்யூனிஸ்டு ஊழியர் தோழர் ஐவி. சுப்பையா. 1948ல் சிறைக் கொடுமைகளை எதிர்த்து வேலூர் சிறையில் உண்ணா விரதமிருந்தபோது மூன்றாவது நாளில் மரணமடைந்தார். தோழர் ராமசாமி 1946ல் ரௌடிகளால் தாக்கப்பட்டு பலியானார். மதுரையைச் சேர்ந்த தோழர் தில்லைவனம் ஒட்டன்சத்திரம் அருகில் சுட்டுக் கொல்லப் பட்டார். தோழர் பூந்தோட்டம் சுப்பையா, சிறையில் கொடிய அடக்குமுறைகளுக்கு உள்ளானதன் விளைவாக, விடுதலையடைந்த சில காலத்தில்

**2022க்குள் விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்குவோம் என்றீர்களே!**

**விவசாய விரோதச் சட்டங்கள் கொண்டு வந்து 300க்கும் மேற்பட்ட விவசாயிகளை சாகடித்தது ஏன்?!**

மரணமடைந்தார்.

**அக்னீஸ் மேரி:** திண்டுக்கல்லில் ஏழை கத்தோலிக்க கிறிஸ்தவத் தோல் பதனிடும் தொழிலாளி அக்னீஸ்மேரி, 1946 ஆகஸ்டில் வேலூர் சிறையில் உயிர் நீத்தார்.

**வெங்கடாசலம்:** பழனியைச் சேர்ந்த தோழர் எம்.ஏ. வெங்கடாசலம் தேசவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றவர். 1940ம் ஆண்டு கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்து தீவிரமாகப் பணி புரிந்தார். 1948–51 காலகட்டத்தில் பல வழக்குகள் அவர்மீது போடப்பட்டன. தனக்கிறுந்த சொத்துக்களை விற்று வழக்காடி அவற்றிலிருந்து மீண்டார். வட்டார மக்களுக்குச் சிறந்த முறையில் பணியாற்றிய தோழர் வெங்கடாசலம் 9.10.59ல் வர்க்க விரோதிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

**காவேரி, ஷேக் தாவூத்:** 1950 பிப்ரவரி 11ம் தேதியின் வரலாறு பச்சை ரத்தத்தால் எழுதப்பட்டது. நாகரிக, ஜனநாயக உலகமே அன்றைய சேதி கேட்டு அதிர்ச்சியுற்றது. நினைத்தாலே நெஞ்சம் செந்நீர் வடிக்கும் அந்த சோக நிகழ்ச்சி சேலம் மத்திய சிறையில் 22 கம்யூனிஸ்டு தியாகச் சுடர்மணிகள் சிறை நிர்வாகத்தினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவமாகும்.

சாதாரண கிரிமினல் குற்றவாளிகளைப் போல் குல்லாயும், நம்பர் வில்லையும் அணிய மறுத்ததற்காக 242 கம்யூனிஸ்டு அரசியல் கைதிகள் (தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம் ஆகிய மூன்று பகுதிகளையும், சேர்ந்த தோழர்கள்) மீது 200 போலீசாரும், 250 சிறை வார்டர்களும் வெறி கொண்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்து, சிறைக் கூடத்தை ரத்த வெள்ளமாக்கினர்.

இந்தப் படுகொலையில் குண்டு பாய்ந்து இறந்த தோழர்கள் 22 பேர். மற்றவர்கள் அனைவருமே படுகாயமுற்றனர். அந்த 22 பேர்களில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் இருவர். ஒருவர் சேலம் சூரமங்கலத்தைச் சேர்ந்த தோழர் காவேரி முதலியார் (வயது 50), பதினைந்து குண்டுகள் அவரது உடலைத் துளைத்தன. இந்தத் தியாக வேள்வியில் உயிரை ஈந்த மற்றொருவர் விழுப்புரத்தைச் சேர்ந்த ரயில்வேத் தொழிலாளி தோழர் ஷேக் தாவுது.

இவ்வாறு 22 தோழர்களைக் காட்டுமிராண்டித் தனமாகச் சுட்டுக் கொன்றதால், கம்யூனிஸ்டு இயக்கத்தை நசுக்கிவிடாலம் என்று நினைத்த அதிகாரவர்க்கமும், ஆட்சியாளர்களும் ஏமாந்தனர். அவர்களது நினைப்புக்கு மாறாகக் கம்யூனிஸ்டு இயக்கம் இன்று மேலும் பலமடைந்தே வந்துள்ளது.

**சோரகைப்பெருமாள், அப்பாதுரை, ஆறுமுகம்:** 1948 ஜூலையில் சேலம் மாவட்டம் சோரகையில் நடைபெற்ற விவசாயிகளின் உரிமைப்போராட்டத்தில் மார்பில் துப்பாக்கிக் சூடு தாங்கி அமரரானார் தோழர் பெருமாள். தோழர் அப்பாதுரை ஆரம்பப் பள்ளி ஆசிரியர், அரூர் தாலூகாவில் கட்சியைத் தோற்றுவிப்பதில் பெரும் பங்கு கொண்டவர். போலீஸ் அடக்குமுறை, தலைமறைவு வாழ்க்கை ஆகியவற்றில் பல தொல்லைகளுக்கு ஆளாகி 1952ல் சென்னையில் மருத்துவமனையில் காலமானார். சேலம் ஜவஹர் மில் தொழிலாளி தோழர் ஆறுமுகம். 1950 பிப்ரவரியில்




நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் வீரமரணம் அடைந்தார்.

**பொன்மலை வீரத்தியாகிகள்: ராஜு, தியாகராஜன், தங்கவேலு, ராமச்சந்திரன், கிருஷ்ணமூர்த்தி:** 1946 ஆகஸ்டில் வீரஞ்செறிந்த தென்னிந்திய ரயில்வேத் தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டத்தின் போது பொன்மலை ரயில்வே லேபர் யூனியன் அலுவலகத்தின் மீது மலபார் ஸ்பெஷல் போலீஸ் படையெடுத்து தாக்கியது. துப்பாக்கிப் பிரயோகம் செய்து மணியான ஐந்து தோழர்களின் உயிரைக் குடித்தது. அந்தப் படுகொலையில் வீரமரணம் எய்திய தோழர்கள் தான் ராஜு, தியாகராஜன். தங்கவேலு, ராமச்சந்திரன், கிருஷ்ணமூர்த்தி ஆவர்.

**அன்னை லட்சுமி:** 1950ல் கம்யூனிஸ்டுக் கட்சி மீது ஆட்சியாளர் கட்டவிழ்த்து விட்ட கொடிய அடக்குமுறையின் போது கைது செய்யப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களில் 45 வயதான லட்சுமி அம்மாளும் ஒருவர். இவர் பொன்மலை பாப்பாவின் அன்னை. தோழர் எம். கல்யாணசுந்தரம் மற்றும் பல தோழர்களோடு இவரும் கைது செய்யப்பட்டு சென்னை சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். அங்கு தம்மீது நடத்தப்பெற்ற தடியடிப் பிரேயோகத்தைப் கண்டித்து கம்யூனிஸ்டுக் கைதிகள் அனைவரும் உண்ணாவிரதம் இருந்தனர். அப்போது 23ஆம் நாள் உண்ணாவிரதத்தின் போது சிறைக் கோட்டத்தினுள்ளேயே அன்னை லட்சுமி காலமானார்.

**செங்கொடி காக்க உயிர்நீத்த சிங்காரவேலு:** திருச்சி உறையூர் கைநெசவுத் தொழிலாளி தோழர் சிங்காரவேலு, உறுதியான கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர். 1946 மார்ச்சில் பறந்து கொண்டிருந்த செங் கொடியை இறக்க வேண்டுமென்று நெசவுக் தொழில் முதலாளிகளின் அடியாட்கள் அடாவடி செய்தனர். உயிரினுமினிய செங்கொடியை இறக்க விடமாட்டேன் என்று உறுதியாக நின்ற தோழர் சிங்காரவேலுவின் மீது குண்டர்கள் பாய்ந்து தாக்கிக் கொன்றனர். இது போன்றே நமனசமுத்திரம் தோழர் சி. சண்முகம். 1956ல் முதலாளிகளின் ஏவலாட்களால் கொலை செய்யப்பட்டார்.

**ஸ்டேன்ஸ்மில் போராட்ட தியாகிகள்:** 1946 நவம்பரில் நியாயமான கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட கோவை ஸ்டேன்ஸ்மில் தொழிலாளிகள் மீது போலீசார் நடத்திய ஈவிரக்கமற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் 11 தொழிலாளர்கள் குப்பம்மாள், அம்மு, கோபாலன், எம்.குள்ளப்பன், மந்திரியப் பன்,



பழனியப்பன், ஆர்.கிருஷ்ணமூர்த்தி முதலியோர் கொல் லப்பட்டனர்.

**சின்னியம்பாளையம் தியாகிகள்:** 1946 கோவை மில் முதலாளிகளின் தாக்குதலை எதிர்த்து நின்று போராடியதன் விளைவாக, போலீசாரால் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு, ராமய்யன், சின்னையன், ரங்கண்ணன், வெங்கடாசலம் என்ற நான்கு சின்னியம்பாளையம் தோழர்கள் தூக்கிலிடப்பட்டனர். “இந்தியா உள்பட உலகம் முழுவதும் கம்யூனிசம் வரும் நாள் தூரத்திலில்லை” என்ற இறுதி சொற்களோடு அவர்கள் அமரத்துவம் அடைந்தனர்.

**அப்பாய், கருப்பண்ணன்:** கட்சி மாச்சரியங்களினாலும், அதை முதலாளி வர்க்கம் பயன்படுத்திக் கொண்டு தூண்டிவிட்ட தாக்குதல்களிலிருந்தும் கட்சியையும், தொழிற் சங்கத்தையும் காத்து நின்று போராடி உயிர் துறந்தார்கள் அப்பாய், கருப்பண்ணன், நந்த கோபால், பூசாரி ஆகிய தோழர்கள். இதே போல் நிலப்பிரபுக்களின் பயங்கரத் தாக்குதலுக்கு பலியானார்கள், பொள்ளாச்சி தாலூகா நடராஜனும், மதுக்கரை ராக்கியண்ணனும்.

**திருப்பூர் பழனிசாமி:** அநியாய அடக்குமுறைக்கு ஈடு கொடுத்து தலைமறைவாக இருந்த திருப்பூர் தோழர் பழனியாமி எப்படியோ போலீசாரிடம் அகப்பட்டு விட்டார். ரத்த வெறிபிடித்த போலீசார் அவரைக் கட்டிப்போட்டு சுட்டுக் கொன்றனர். ஆஷர் மில்லுக்குப் பின்புறத்தில், ‘நான் சாவதைக் கண்டு பயப்படவில்லை என்னை நீங்கள் இன்று கொல்லலாம். ஆனால் கம்யூனிஸ்டுக் கட்சியையும், தொழிலாளி வர்க்கத்தையும் உங்களால் கொல்ல முடியாது. நாளை ஆட்சி பீடம் ஏறப்போவது அந்த வர்க்கம் தான்” என்று சூளுரைத்தார்.

**அருணாசலம்:** மேட்டுப்பாளையம் தோழர் அருணாசலம் சுறுசுறுப்புமிக்க மிக்க கம்யூனிஸ்டு தொண்டர்; அரசியல் எதிரிகள், குண்டர்கள் 8.5.73ல் அவரைப் படுகொலை செய்தனர்.

**புதுவைத் தியாகிகள்:** 1946ல் கடற்படை வீரர்கள் போராட்ட தினத்தின் போது பிரெஞ்சிந்திய ராணுவ வெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். தோழர் ராஜ கோபால் 1947ல் பிரெஞ்சு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்ட காலத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிப் பத்திரிகை “சுதந்திரம்” பிரதிகள் விற்கச் சென்ற தோழர் பக்கிரி, ஆட்சியாளர்களின் குண்டர்களால் குத்திக் கொலை செய்யப்பட்டார். 1945ல் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து திருபுவனை கொம்யூனை கம்யூனிஸ்டுகள் விடுதலை செய்தபோது, பிரெஞ்சு அடிவருடி குண்டர்கள் தோழர் திருமலையைப் பிடித்துக் கொண்டு போய் அடித்துக் குற்றுயிராக்கி மண்ணெண்ணை ஊற்றி, உயிரோடு எரித்துக் கொன்றனர். பொய்யான கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப் பட்டு, சிறையில் ஆயுள் தண்டனை அனுபவித்து வந்தபோது, ஏகாதிபத்தியக் கொடுமைக்கு உள்ளாகி உயிர்விட்டார். பாரதி மில் தொழிற்சங்கத் தலைவர் தோழர் ஏழுமலை.

அடிப்படை உரிமையாகிய தொழிற்சங்கம் வைத்துக் கொள்ளும் உரிமைக்காகப் போராடிய தோழர்கள் சூசை, அமலோர்ப்பநாதன், பெருமாள், ராஜமாணிக்கம், வனத்தையன், சின்னையன் முதலிய 12 தோழர்கள் பிரெஞ்சு ராணுவ வெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

**விக்ரம சிங்கபுரம் தியாகிகள்:** 1946ல் உரிமைப் பேராட்டத்தில் ஈடுபட்ட விக்கிரமசிங்கபுரம் ஹார்வி (வெள்ளை முதலாளி) மில் தொழிலாளிகளின் மீது போலீசார் மிருகத் தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் தொழிலாளிகள் கொல்லப்பட்டனர்.

நாராயணன் என்ற தொழிலாளி ஹார்வி மில் நிர்வாகத்தின் அசிரத்தையினால் மில்லுக்குள் இறந்து போனார்; அவரது சடலத்தை கொடுக்கும்படி கிளர்ச்சி செய்ததற்காக, மில் வாயிற் கதவுகளை மூடிக்கொண்டு போலீசார் சுட்டதில் அருணாசலம், ஜானிமஸ்தான் என்ற இரண்டு தோழர்கள் கொல்லப்பட்டனர்.

**வேலாயுதம், பொன்னு:** தாழ்த்தப்பட்ட வகுப்பிலிருந்து கம்யூனிஸ்டுக் கட்சிக்கு வந்த தோழர் பொன்னு நெல்லை சதி வழக்கில் முதல் எதிரியாகச் சேர்க்கப்பட்டு, சிறையில் பல ஆண்டுகள் மிகவும் பாதிக் கப்பட்டார். அவருக்கு நல்ல சிகிச்சை வசதி செய்து கொடுப் பதற்காக அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று பலத்த கிளர்ச்சி நடைபெற்றும் பொருட்படுத்தாத ஆட்சியாளர்கள், அவர் மரணவாயிலை எட்டிக் கொண்டிருக்கும் போது விடுதலை செய்தனர். விடுதலையாகி வெளிவந்த சிலமாதங்களில் அவர் மரணமடைந்தார். இது போன்றே தோழர் வேலாயுதம் சிறை வாசத்தின் போது கொடிய காச நோய்க்கு ஆளானார். கடைசி நேரத்தில் சர்க்கார் அவரை தாம்பரம் மருத்துவ நிலையத்தில் சேர்ந்தனர். அங்கு சிறிது நாட்களில் உயிர் நீத்தார்.

**கடலூர் சிறையில் மடிந்த தியாகிகள்:** 1948 அடக்கு முறைக் காலத்தில் கடலூர் சிறையில் பாதுகாப்புக் கைதிகளாயிருந்த கம்யூ னிஸ்டுகள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது நான்கு தோழர்கள் கொல்லப்பட்டனர்.

**சிலுவைமுத்து:** அறந்தாங்கி தாலூகா பெருங்குடி ஆவணம் பகுதியில் செங்கொடியைப் பறக்கவிட்ட தோழர் சிலுவை முத்து, நிலப்பிரபுத்துவ வெறியன் ஒருவனின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியானார்.

**சிவகுருநாதன்:** தஞ்சை மாவட்டம் பஞ்சநதிக்குளம் கிராமத்தில் ஏழை ஹரிஜனப் பெண் ஒருத்தியை பலவந்தப்படுத்தினான் ஒரு கொடியவன். பஞ்சாயத்துத் தலைவராகிய கம்யூனிஸ்டுத் தோழர் சிவகுருநாதனிடம் முறையிட்டாள் அவள். தலைவர், சபையைக் கூட்டி அபலைப் பெண்ணுக்கு நியாயம் வழங்கினார். கொடியவனுக்கு ரூ.100 அபராதம் விதித்தார். ஊர் கூடி தன்னை தண்டிப்பதா? என்று அவமானம் தாங்காது ஆத்திரமடைந்தான் கொடியவன். தனியே வந்த தோழர் சிவகுருநாதனை வழி மறித்து வெட்டிக் ‘கொன்றான் அக் கொடியவன்.

**துரைசாமி:** பி.ஏ. படித்த பட்டதாரி இளைஞன் மக்களுக்குத் தொண்டாற்ற கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தான். தாழ்த்தப்பட்ட மக்களின் தோழன். ஜாதி வெறிக்கும்பல் இளைஞன் துரைசாமியை வெட்டி வீழ்த்தியது. திருச்சி மாவட்டம் கரூர் வட்டம் புகளூரில் நடந்தது இக்கொடுமை.

கோவை சிங்காநல்லூரைச் சேர்ந்த தோழர் முத்துசாமி மில்லுக்குள் சில ரௌடிகளால் குத்திக் கொல்லப்பட்டார். முத்துசாமி ‘ஜனசக்தி’ ஏஜெண்டாகவும், கட்சி உறுப்பினராகவும் இருந்தார். கோவை மாவட்டம் பெருமாநல்லூர் கிராமத்தில் கம்யூனஸ்ட் ஊழியர் தோழர் மணி, மாற்றுக் கட்சியினரால் கொல்லப்பட்டார்.

**சென்னை ஹார்பர் தொழிலாளிகள் துப்பாக்கிச் சூட்டுக்கு பலி:** நீதிபதியின் தீர்ப்பை அமுல் நடத்தக் கோரி சென்னை ஹார்பர் தொழிலாளிகள் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்திய போது 16.5.58ல் காங்கிரஸ் சர்க்காரின் போலீசார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஆறு தொழிலாளிகள் கோபால், வேதாசலம், அப்துல்வஹாப், நடராஜன், எத்திராஜ், மணி ஆகியோர் கொல் லப்பட்டனர்.




**கீழவெண்மணி தியாகிகள்:** 1967ல் தஞ்சை மாவட்டம் கீழ வெண்மணி கிராமத்தில் துணிந்து செங்கொடி சங்கத்தில் சேர்ந்து மிராசுதார்களின் அடக்கு முறைகளையும், ஒடுக்கு முறைகளையும் எதிர்த்து நின்ற தாழ்த்தப்பட்ட ஹரிஜன மக்களின் குடிசைகளுக்குத் தீ வைத்து கொளுத்தினர் நிலச்சுவான் தார்களின் கையாட்கள். இதில் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 44 பேர் உயிரோடு பொசுக்கப்பட்டனர். இந்தக் காட்டு மிராண்டித்தனமான செய்கைக்கு நாடெங்கும், ஏன் உலெகெங்கும் கண்டனம் எழுந்தது. இந்த 44 பேர்களின் உயிர்த் தியாகத்தால் சிவப்பேறிய கீழ வெண்மணியிலிருந்து தான் சென்னையிலே நடைபெற்ற கம்யூனிஸ்டுக் கட்சியின் 11 வது தமிழ்மாநில மாநாட்டில் ஏற்றி வைப்பதற்கான செங்கொடி கொண்டு வரபட்டது.

**வெண்மணியில் பலியான தியாகிகள் பட்டியல்:** கீழ வெண்மணி கிராமத்தில் இராமையன் வீட்டில் தஞ்சம் புகுந்து உயிர் நீத்தோரின் விவரம், ‘வெண்மணி படுகொலை’ என்ற நூலில் குடும்ப வாரியாகப் பட்டியலிட்டுக் காட்டப்படுகிறது.


## தோழர் கார்ல் மார்க்ஸ், தனது காதலி ஜென்னிக்கு எழுதிய கவிதை

கட்டுண்ட எனதுள்ளம் தெளிவடைய
ஒளிமிக்க எனது நிறை ஆத்மாவின்
கண்நோக்கு உயர்ந்தோங்க நானும்தான்
தெளிவின்றி எதையோ நம்பி
தேடித்தான் அடைந்த போது
அதையெல்லாம்
கடைசியில் உன்னில்தான் நான்
கண்டுகொண்டு களிப்படைந்தேன் கண்மணியே!
நான் எனது கடுமை மிக்க
முள் நிறைந்த வாழ்க்கையதன்
வழியை யெல்லாம்
கடந்து செல்லத் தேவையான
திறமையெல்லாம்
அடையத்தானும்
இடருற்றுத் தவறி நின்று
தயங்கிய நாளின்
சொல்லாமல் அழைக்காமல்
அவையெல்லாம் தேடி வந்து
என்னைத் தான் அடைந்ததென்றால்
மாயப் பார்வை மிக்க உன்
மந்திரக் கண்களின்
ஒளியன்றி வேறில்லை
கண்மணியே!



ஆண்டுக்கு 2 கோடி இளைஞர்களுக்கு வேலை என்றாயே!
கோடிக்கணக்கானோர் வேலையின்றி வீதிகளில்!
பதவி ஒரு கேடா?


# ஒரே நாடு – ஒரே வாழ்



**நாடு ஏற்று, போற்றும் அரசியலமைப்புச் சட்டம், பிரதமர் மோடி குறிப்பிடுவது போன்று நாட்டை வழி நடத்தும் சட்டம்.**

அச்சட்டம் கூறுகின்ற அனைத்தையும் நாட்டு மக்கள் ஏற்பது மட்டுமல்ல; பின்பற்றவும் வேண்டும்.

நாட்டு மக்கள் மட்டுமல்ல; நாட்டை ஆளும் ஒன்றிய, மாநில அரசுகளும் எள் முனையளவும் மீறாது உணர்வுபூர்வமாக பின்பற்றி செயல்படுத்திட வேண்டும்.

நமது அரசியலமைப்புச் சட்டமானது நமக்கு உரிமைகளையும், கடமைகளையும் வழங்கியுள்ளது. உரிமைகளைப் பயன்படுத்தவும், கடமைகளை நிறைவேற்றவும் நாம் கடமைப்பட்டவர்கள் என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை.

நமது அரசியலமைப்புச் சட்டம் மிக உயர்ந்த ஜனநாயக உரிமைகளை நாட்டு மக்கள் அனைவருக்கும் வழங்கி இருக் கின்றது.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறக்கூடிய தேர்தல்கள் அவை உள்ளாட்சி முதல் நாடாளுமன்றத் தேர்தல் வரை வாக்களிக்கும் அரசியல் உரிமையை வழங்கியுள்ளது.

நாம் அளிக்கும் வாக்கில் வேறுபாடுகள் இல்லை – கற்றவர், கற்காதவர், ஏழை, பணக்காரர், நிலமுடையோர், நிலமற்றோர், தாழ்ந்தவர், உயர்ந்தவர் என எவ்வித வேறுபாடுகளும் இன்றி வாக்கின் மதிப்பு ஏற்றம், இறக்கமின்றி வழங்கப்படுகின்றது.

அத்தகைய உயர்ந்தபட்ச ஜனநாயகத்தை ஒவ்வொரு வயது வந்த அனைத்து இந்தியக் குடிமகனுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

வயது வந்த ஒவ்வொரு குடிமகனும் வேட்பாளரை முன்மொழிய, வழிமொழிய உரிமை வழங்கப்பட்டுள்ளது.

சிற்றூராட்சி உறுப்பினர், தலைவர், பேரூர், நகர், மாநகர் உறுப்பினர், ஒன்றியக் குழு உறுப்பினர், மாவட்டக் குழு உறுப்பினர் வரை போட்டியிட வாய்ப்பளிக்கப்படுகின்றது.

சிற்றூராட்சித் தலைவர், ஒன்றியத் தலைவர், மாவட்ட ஊராட்சித் தலைவர், பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி தலைவர் வரை போட்டியிட உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், நாடாளு மன்ற ராஜ்யசபா உறுப்பினர் மட்டுமல்ல, குடியரசுத் தலைவருக்கும் போட்டியிட நமது அரசியல் அமைப்புச் சட்டம் நமக்கு உரிமை வழங்கியுள்ளது.

இவை மட்டுமல்ல எந்த ஒரு தனி மனிதரும் பிறரால் பாதிக்கப்படாமல் நீதி கேட்டு கீழ் நீதிமன்றம் முதல் உச்சநீதிமன்றம் வரை சென்று நியாயம் கேட்க நமது அரசியலமைப்புச் சட்டம் நமக்கு உரிமை வழங்கியுள்ளது.

உரிமைகள் மட்டுமல்ல, நமக்குரிய கடமைகளையும் அரசியலமைப்புச் சட்டம் கூறியுள்ளது.

நாம் சட்டத்திற்கு உட்பட்டு தான் வாழ வேண்டும்; சட்டத்தை மீறக்கூடாது.

அரசின் கஜானாவை நிரப்பவும் – நிரப்பப்படும் நிதியிலிருந்து ஊதியங்கள் வழங்கவும் – ஊதியம் என்றால் ஏதோ அரசுப் பணியில் பணியாற்றும் அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள் என்பது மட்டுமல்ல, குடியரசுத் தலைவருக்கு, பிரதமருக்கு, அமைச்சர் பெருமக்களுக்கு, முதல்வருக்கு, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் உட்படத்தான்.

**நலத் திட்டங்களை நிறைவேற்றவும், கட்டமைப்புகளை உருவாக் கவும், அவர்களைப் பாதுகாக்கவும் நிதி தேவைப்படுகின்றது.**

**அத்தகைய நிதியை நாட்டு மக்கள்தான் தருகின்றார்கள். ஆலை முதலாளிகள் உயர்ந்தபட்ச வருமானம் உடையவர்கள் மட்டுமல்ல& வாழ்க்கையின் கடைக்கோடியில் உள்ள, வறுமைக் கோட்டிற்கு கீழாக உள்ள ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் வழங்கி வருகின்றான்.**

**பெரும் முதலாளிகள் அல்லது உயர் வருமானம் உடையவர்கள் தங்களது லாபத்தில் அல்லது வருமானத்தில் மாதம் ஒரு முறையோ அல்லது ஆண்டுக்கு ஒரு முறையோ அரசுக்கு வரி செலுத்துகின்றார்கள்.**




ஆனால், வாழ்க்கையில் கடைக்கோடியில் வறுமைக் கோட் டிற்கும் கீழாக உள்ளவர்கள் தொழிலாளி – விவசாயி என அனைத்து தரப்பு மக்களும், ஒவ்வொரு நாளும், ஏன் ஒவ்வொரு வேலையும் அரசுக்கு வரி செலுத்துகின்றார்கள்– நாம் இவ்வாறு வரி செலுத்துகின்றோம் என்பது கூட அவர்கள் அறியாமல் இருக்கலாம்.

உணவு விடுதிகளுக்குச் சென்று நாம் ஒரு கப் காபி குடித்தால் அதன் விலை ரூ.20 அல்லது ரூ.30 அதன் மீது போடப்படுகின்ற ஜிஎஸ்டி வரி விதிப்பு ரூ.13 காஃபியின் விலை ரூ.30தான். வரி ரூ.13– ஆக ரூ.43 ஐ செலுத்துகின்றோம்.

ஹோட்டலுக்கு செல்ல வேண்டாம் வீட்டிலேயே காபி அருந்தலாம், அப்போது வரி இல்லையா? ஆம் உண்டு, நாம் வாங்கும் பாலுக்கு, சர்க்கரைக்கு, ஏன் தண்ணீருக்கு, இவைகளை கொதிக்க வைக்க பயன்படும் எரிவாயுவிற்கும் வரி உண்டு.

# மொழியும் – கம்யூ



மு.வீரபாண்டியன்

**சிந்தனையும் மொழியும் வாழ்வியல் மெய்ப்பாடு என்கிறார் மார்க்ஸ்.**

மார்க்ஸ், ஏங்கல்ஸ் முன்மொழிந்த கம்யூனிஸ்ட் அறிக்கை மொழியிலிருந்துதான் துவங்குகிறது. தேசிய இனங்களை மெய்ப்படுத்திதான் துவங்குகிறது.

‘‘பிளமிஷ், டேனிஷ், பிரஞ்சு, ஜெர்மன், ருஷ்ய, ஆங்கில மொழி பேசும் தேசிய இனங்களை அடையாளப்படுத்தும் நாடுகளின் தோழர்கள் அறிக்கையை மொழியாக்கம் செய்யக் கூடி இருக்கிறார்கள்’’ என்று கூறுகிறது.

மொழி மனித உறவுகளின் அடித்தளம் என்றார் லெனின்.

மொழிவழி தேசிய இனங்களின் உரிமைகள் குறித்தும், ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் தேசிய இனங்களின் தன்னுரிமை கோட்பாட்டையும் அவர்தான் உலகிற்களித்தார்; வரலாற்றில் முதல்முறையாக அவர்தான் செயல்படுத்தியும் காட்டினார்.

பொருள் துவங்கி – கருத்தியல் வரை தொடர்புள்ளது மொழி என்றார் ஸ்டாலின். மொழி வழி தேசிய இனத்திற்கான மொழி புவியியல், வரலாறு, உளவியல் எனத் தோழர் ஸ்டாலின் வகுத்தளித்தார்.

தோழர் ம.சிங்காரவேலர் 1925 தனது கான்பூர் உரையில் – கட்சி துவக்கப்பட்ட முதல் நாளிலேயே – மொழி – இனம் சார்ந்த பண்பியல் கருத்துகளையும் – மொழி வழி தன்னுரிமைகளையும் வலியுறுத்திப் பேசினார்.

மொழி தேசிய இனம் குறித்த பெரிய அளவிலான புத்தகங்களோ – உரையாடல்களோ இல்லாத பிரிட்டிஷ் இந்தியச் சூழலில், லெனினுக்கு நெருக்கமாக தோழர் ம.சிங்காரவேலர் சிந்தித்தது ஆச்சரியமளிப்பதாக அறிஞர்கள் கூறுகிறார்கள்.

வள்ளுவன், இளங்கோ, கம்பன், ஔவை, பாரதி, பாவேந்தர் எனும் தமிழ் இலக்கிய குறியீடுகள் மேடைதோறும் கொண்டு சேர்த்தவர் ஜீவா, தனித்தமிழ் இயக்கம், தமிழ் அறிஞர்களோடு கண்டார். தனது பேச்சில் பாட்டாளி வர்க்க அரசியலோடு களப்பிரர் காலம் துவங்கி, நான்மணிக்கடிகை, நாலடியார் என அவர் முழங்காத முழக்கம் இல்லை.

காலத்திற்குள் பொதிந்து கிடந்த நாட்டுப்புற இலக்கியங்களை வெளிக்கொணர்ந்தார் நா.வா.

சிவத்தம்பி, கைலாசபதி, தொமுசி, வல்லிக்கண்ணன், ஜெயகாந்தன், தமிழ்ஒளி, கேசிஎஸ், விந்தன், அறந்தை, மாயாண்டி பாரதி, ராமகிருஷ்ணன், பட்டுக்கோட்டை, தேவபேரின்பன், பேராசிரியர் சீனிவாசன், தோழர் ஏ.சீனிவாசன், சுந்தரம், தா.பாண்டியன், இளவேனில், பிரபஞ்சன், நாரா, பொன்னிவளவன்.

தமிழுக்குப் பங்களித்த மகத்தான கட்சி இடதுசாரிகள் பலர் மறைந்து விட்டனர்.

இன்றும் பலர் சமூக இடதுசாரிகளாக – இடதுசாரி கட்சியரின் பிரதிநிதிகளாகத் தமிழுக்கு மகத்தான பங்களிப்பைச் செய்த வண்ணமுள்ளனர்.

**தமிழுக்கு அற்புதமான ‘நூல் வடிக்கிறார்கள், கட்டுரை வரைகிறார்கள், ஆய்வு தருகிறார்கள், கவிதை புனைகிறார்கள், மேடைகளில் தமிழ் முழக்கம்‘ செய்கிறார்கள். இந்தப் பட்டியல் மிக நீளமானது. இதனையே ஒரு நூலாக வடிக்கலாம்: எனினும், மொழிப்பற்று இல்லாதவர்கள் கம்யூனிஸ்டுகள் என்ற ஆழமான பிம்பம் ஏன் படிந்தது?**



# க்கை!



தமிழ்நாட்டில் இருசக்கர வாகனத்தை பயன்படுத்துவோர் இரண்டரை கோடி பேர் உள்ளனர். அவர்கள் அனைவரும் தங்களின் வருமானத்திற்கு பயன்படுத்தும் பெட்ரோல் மூலம் தினசரி அரசுக்கு வரி செலுத்துகின்றனர்.

நமது வீட்டில் அன்றாடம் பலமுறை பயன்படுத்தும் வாருகோலுக்கு (விளக்குமாறு) வரி செலுத்துகின்றோம்.

நமது வீட்டில் பயன்படுத்தும் அலுமினியப் பாத்திரம் உள்ளிட்ட அனைத்து பாத்திரங்கள் வாங்கும் போதும் அதன் விலையுடன் வரியும் சேர்த்துதான் வழங்கி வருகின்றோம்.

ஏன் நமது குழந்தைகள் பயன்படுத்தும் புத்தகம், நோட்டுக், பேனா, பென்சில், அழிக்கும் ரப்பர் உட்பட அனைத்திற்கும் வரி செலுத்துகின்றோம்.

அரசுக்கு வரி செலுத்துவதை நமது கடமை என நமது அரசியலமைப்புச் சட்டம் கூறுகின்றது.

நெறி சார்ந்த அரசாக இருக்குமேயானால், யாருக்கு வரி விதிக்க வேண்டும் – யாருக்கு வரி விதிக்கக் கூடாது என்பது குறித்து ஆய்ந்தறிந்து முடிவுகள் எடுக்கும்.

யாரிடம் அதிக வரி விதிக்க வேண்டுமோ அவர்களுக்கு வரிச்சலுகையும், யாருக்கு வரி விதிக்கக் கூடாதோ அல்லது குறைக்க வேண்டும் என்பது குறித்து அரசு தான் முடிவெடுக்க வேண்டும்.

அரசின் முடிவிற்கு கட்டுப்படுவதைத் தவிர வேறு வழி யில்லை; மீறினால் அது சட்டப்படி குற்றமாகும்.

ஆகவே வரி அதிகம் என்றாலும் அரசியலமைப்புச் சட்டத்திற்கு நாம் உட்படுகின்றோம் – அதாவது நம்மால் இயலவில்லை என்றாலும் கூட அரசியலமைப்புச் சட்டத்தை குடிமக்களாகிய நாம் மதிக்கின்றோம்.

நமது அரசியல் அமைப்புச் சட்டம் நமக்கு வழங்கியுள்ள உரிமைகளில் மிக முக்கியமான ஒன்று, நமக்கு வழங்கப்பட்டிருக்கும் கருத்துச் சுதந்திரம். நாம் சுயமாக சிந்திக்க, சிந்தித்த கருத்தை பிறரிடம் பகிர, மக்கள் முன்னால் நமது கருத்தைச் சொல்ல நாளேடுகளில், வார ஏடுகளில் எழுத, நூலாக வெளியிட நமக்கு பரிபூரண உரிமையை அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ளது.

மாற்றுக் கருத்துக்கு மதிப்பளிப்பது தான் ஜனநாயகம். அத்தகைய ஜனநாயகம் இன்று ஆட்சியாளர்களால் பின்பற்றப்படுகின்றதா? என்ற வினாவிற்கு வாசகர்கள் முடிவிற்கே விட்டு விடுகின்றோம்.

இங்கே நாம் குறிப்பிட விரும்புவது அரசியல் அமைப்புச் சட்டம் நமக்கு வழங்கியுள்ள உரிமைகள், கடமைகள் குறித்து மட்டுமே!

நமது உயர்ந்த, போற்றத்தக்க அரசியலமைப்புச் சட்டம், நமக்கு உரிமைகளையும், கடமைகளையும் கூறுவது மட்டுமல்ல– நாம் சட்டத்திற்கு உட்பட வேண்டும் என்பதனையும் வலியுறுத்துகின்றது.

மக்கள் பிரச்சினைகளை அரசுக்கு எடுத்துக் கூற, அரசின் அல்லது நிர்வாகத்தின் கவனத்தை ஈர்க்க ஆயுதங்கள் இன்றி அறவழியில் இயக்கம் நடத்திட நமக்கு உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

இயக்கத்தின் வடிவம் ஆர்ப்பாட்டம், உண்ணாநோன்பு, மறியல், தொடர் மறியல், காத்திருப்புப் போராட்டம், முற்றுகை என எவ்வடிவத்தில் வேண்டுமானாலும் இருக்கலாம்– அத்தகைய இயக்கம் ஆயுதங்கள் இன்றி, வன்முறை இன்றி மேற்கொள்ளப்பட சட்டபூர்வமாக உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய உரிமையை பயன்படுத்திதான் இயக்கங்கள் நடத்தி வருகின்றோம்.

இவ்வாறு நாம் இயக்கம் நடத்தும் போது, நமது கோரிக்கையில் உள்ள நியாயங்கள் குறித்து அரசு கவலைப்படாமல், உணராமல் நம் மீது வெறுப்புணர்வு கொண்டு வழக்குகள் போடுவார்கள்.

காவல்துறை மூலம் நம்மை கைது செய்கின்றார்கள்– நாம் ஆயிரம் பேர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் – காவல்துறை அதிகாரி ஒருவர் நம்மிடம் வந்து உங்களை கைது செய்கின்றோம் என்று கூறியவுடன் நாம் கட்டுப்பட்டு கைதாகின்றோம்.

நாம் ஆயிரம் பேர் திரளாக உள்ளோம் என்பதால் – நம்மை கைது செய்வதாக ஒரு அதிகாரி கூறுகின்றார் என்பதற்காக கைதாக மாட்டோம் என்று கூறமாட்டோம்– இங்கே நாம் ஒரு அதிகாரிக்கு பணியவில்லை – சட்டத்தை மதிக்கின்றோம்.

அதுமட்டுமல்ல, நாம் ஆயிரம் பேரை நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரணை நடைபெறுகின்றது. விசாரித்து தீர்ப்பு வழங்குவது ஒரு நீதிபதி தான்– அவர் நமக்கு தண்டனை வழங்குகின்றார். அவர் வழங்கியத் தீர்ப்பு நேர்மையானதா? அல்லது அநீதியானதா? என்று வினா எழுப்பாமல் ஏற்றுக்கொள்கின்றோம்.

நாங்கள் ஆயிரம்பேர் – எங்களுக்கு நீ ஒருவர் அளிக்கும் தீர்ப்பை ஏற்க இயலாது என்று மீறவில்லை – தீர்ப்பை ஏற்கிறோம் என்றால் சட்டத்தை மதிக்கிறோம் என்று பொருளாகும்.

உரிமைகளை, கடமைகளை, சட்டங்களை வழங்கியுள்ள அரசியலமைப்புச் சட்டம் இந்தியக் குடிமகன் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் எவ்வாறு இருக்க வேண்டும்? என்று உறுதிபடக் கூறுகின்றது.

ஒவ்வொரு இந்திய குடிமகனின் வாழ்க்கையும் பிறர் மதிக்கத்தக்க, போற்றத்தக்க வாழ்க்கையாக இருக்க வேண்டும் – பிறர் பார்த்து ஏளனம் செய்யக்கூடிய வாழ்க்கையாக அமையக் கூடாது என்று தெள்ளத் தெளிவாகக் கூறுகின்றது.

அத்தகைய வாழ்க்கை– அரசியலமைப்புச்சட்டம் எடுத்துக் கூறுகின்ற வாழ்க்கை ஏற்றத்தாழ்வற்ற வாழ்க்கை வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி குரல் எழுப்புவது குற்றமா?

**ஒரே நாடு – ஒரே வாழ்க்கை வேண்டும் – ஏற்றமும், இறக்கமும் அற்ற சம வாழ்க்கை வேண்டும் எனக் கேட்பது குற்றமா?**

**ஒருவருக்கு ஒரு வாக்கு – வேறுபாடு இல்லை – கடமையை செய்யவேண்டும்**

**வேறுபாடு இல்லை – சட்டத்திற்கு உட்பட வேண்டும் வேறுபாடு இல்லை – இவைகள் அனைத்தையும் அரசியலமைப்புச் சட்டத்தின் பேரால் ஏற்றுக்கொள்கிற சமூகம் – ஒரே நாடு – ஒரே வாழ்க்கை பிறர் மதிக்கத்தக்க வாழ்க்கை, பிறர் போற்றும் வாழ்க்கை, பிறர் ஏளனம் செய்யாத வாழ்க்கை – இவைகளை மறுப்பது ஏன்? அரசியலமைப்புச் சட்டத்தை மீறுவது யார்?**

**மக்களா? ஆட்சியாளர்களா?**

மக்கள் மீறினால் சட்டவிரோதம் – தண்டனை உண்டு. அரசு மீறினால் அது குற்றமில்லையா?

அரசு மீறினால் அது தேசத் துரோகம் இல்லையா?

யார் தேச விரோதி? யார் அரசியலமைப்புச் சட்டத்தை மதிக்காதவர்? யார் மீறுபவர்?

அடையாளம் காண, மக்களிடம் விழிப்புணர்வு காண அத்தகைய விழிப்புணர்வு புரட்சியாக வெடிக்க, புதியதோர் உலகம் காண, இடைவிடாது, கண் துஞ்சாது கடமையாற்ற வாருங்கள் தோழர்களே!

நமது மகாகவி பாரதி

“முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை”

என்றானே– அத்தகைய சமுதாயம் கண்டால்தான் ஒரே நாடு – ஒரே வாழ்க்கை என்ற நிலை உருவாகும். பாரதி கண்ட, காண துடித்த பொதுவுடைமை சமுதாயத்தில்தான் நமது அரசியலமைப்புச் சட்டம் கூறியுள்ள பிறர் மதிக்கும் வாழ்க்கையைக் காண முடியும்.

ஒரே நாடு – ஒரே வாழ்க்கை என்கிற கனவு நனவாகட்டும்– நாட்டில் வாழும் நூற்று முப்பது கோடி மக்களின் முகங்கள் மலரட்டும்.

தோழமைமிக்க

**இரா.முத்தரசன்**

# னிஸ்டுகளும்




உலகத் தொடர்பு மொழிகள் மீதுள்ள ஆர்வம் தாய்மொழி மீது இல்லை என்கிறார்கள்.

உலக அரசியல் நன்கறிந்த நேரு கூட கம்யூனிஸ்டுகள் பிரதிபலிக்க முடியாத மொழிகளில் பேசினார்கள். பொங்கி எழுந்த தேசியத்திலிருந்து விலகி நின்றார்கள் என்கிறார். ஏன் இத்தகைய சூழல் எழுந்தது?

தேசியத்தை உள்ளடக்கிய ஒரு முழு நிறை சர்வதேசிய கோட்பாடல்லவா? மார்க்சியமும், லெனினியமும்.

எங்கும் – தேசியத்தை – சர்வதேசியம் கடந்து செல்வதில்லை, வர்க்கப் போர், வர்க்கக் கட்சி என்றாலும் தேச விடுதலையே – கம்யூனிஸ்டுகள் முன்னெடுக்கும் முதல் போர்.

அதுபோல் மொழியை மார்க்சியம் கடந்து செல்வதில்லை. வர்க்கக் கட்சி, வர்க்கப் போர் என்றாலும் மொழியை – மொழிவழி தேசிய இனங்களை அது கடந்து செல்வதில்லை.

வர்க்கம் – தேசியம் அதே போல – மொழி வர்க்கம் இவை இரண்டுக்குமான ஓர் இயங்கியல் அணுகுமுறையைத்தான் மார்க்சியம் கோருகிறது. அது வறட்டு சூத்திரம் அல்ல. மாறாக விடுதலை அறிவியல்! சமூக அறிவியல்!

மொழி – பொருள் உற்பத்தியிலும், சிந்தைகளிலும் வெளிப்படுவது.

இதன் பொருள், மொழி சமுதாயத்தின் அடித்தளமாகவும் – மேல் தளத்திலும் வினைபுரிவது. கட்சி வர்க்கக் கட்சி தான் – எனினும் இது அனைத்து மக்களுக்குமான கட்சி. கட்சி பற்றி நிற்பது வர்க்கப்போராட்டத்தைத்தான். எனினும் வர்க்கப் போரினால் மட்டுமே மாற்றம் ஏற்படும் எனக் கூறவில்லை.

தேசிய விடுதலைப் போர் – தேசிய இனங்களின் தன்னுரிமைப் போர் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூகநீதிப் போர் என யாவும் மாற்றங்களை கொண்டுவந்தது உண்மையே. ஆனால் அடிப்படையில் வர்க்க பேதங்களை முடிவுக்குக் கொண்டு வர – வர்க்கப் போரே இறுதிப்போர். முதலாளிய சமூகத்தை மாற்றி – புதுவகை சோசலிச சமூகத்திற்கு வர்க்கப் போரே தீர்வு என நம்புகிறோம். வரலாறு மற்றும் அதன் வளர்ச்சியை நிறைவாக பொருளியல் கொண்டுதான் அணுக முடியும் (Race is Economic Factor) என்றார் ஏங்கல்ஸ். காந்தி தலைமையிலான தேச விடுதலைப் போர் டாக்டர் அம்பேத்கர் தலைமையிலான சாதி ஒழிப்பு போர், தந்தை பெரியார் முன்னெடுத்த சமூக நீதி போர் என யாவற்றையும் வர்க்கப் போரின் துணை காரணிகளாக அணுகும் கொள்கை திறன் கம்யூனிஸ்டுகளுக்கு உண்டு.

கறுப்பின மக்களின் போராட்டங்களை வெறும் அடையாள போர் என கடந்து செல்ல முடியாது அது உரிமைப் போர். விடுதலைப் போர் இப்படிதான், மொழிப்போரையும் உரிமைப் போராக பார்க்கிறது கம்யூனிஸ்ட் கட்சி.

மொழி சமத்துவத்தைப் பற்றி நிற்பதால் மொழி ஆதிக்கத்தையும் கம்யூனிஸ்டுகள் எதிர்த்து நிற்கிறார்கள்.

ரஷ்யர்கள் – லிதுவேனியர்கள் – எஸ்தோனியர்கள் மீதான இனத் தாக்குதலை லெனின்தான் முதலில் எதிர்த்தார்.

ரஷ்ய மொழி – பிற தேசிய இனங்கள் மீதான ஆதிக்கத்தை அவர் எப்போதும், எச்சரித்தே வந்தார்.

**–கம்யூனிஸ்டுகளுக்கு எந்த நாடும் எதிரி அல்ல. அரசுகள் & அவற்றின் மேலாதிக்க கொள்கைகள், பாசிஸ சிந்தனைகள், முதலாளித்துவ கோட்பாடுகள் இவைகள்தான் எதிரி, நாட்டு மக்கள் அல்ல.**

**அதே போல் ஆதிக்க மொழிகளை எதிர்க்கிறோம். அனைத்து நாடுகளின் மொழி சமத்துவத்தை ஆதரிக்கிறோம்.**

தாய்மொழி எனும் பற்று, உணர்ச்சிகள் இயல்புதான். ஆனால் இதன் பொருட்டு பிறமொழி எதிர்ப்பு – வெறுப்பு பகுத்தறிவல்ல என்கிறது கட்சியின் மொழிப் பார்வை, மொழி வெறுமனே கருத்தை சுமந்து செல்லும் வாகனம் அல்ல.

அது சமூக கூட்டின் அடித்தளம்; உற்பத்தியோடு இணைந்தது. சிந்தனை எனும் மேல்தட்டில் வினைபுரிவது. வாழ்வின் ஒவ்வொரு கூறிலும் பின்னிப்பிணைந்தது.

தமிழ் தொன்மை மொழி – செவ்வியல் கூறுகளைக் கொண்டது, அனுசரிப்பு எனும் மகத்தான கலாசார கூறுகளைக் கொண்டது. உலகில் பல நாடுகளில் பேசப்படுகிறது.

அதற்காக பிறமொழி தாழ்வோ ‘கல் தோன்றி, மண் தோன்றா காலத்து முன் தோன்றிய மூத்த மொழி’ என்றோ அறிவியலை கடந்து செல்ல முடியாது.

ஆக, கம்யூனிஸ்டுகளைப் பொருத்தவரை ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்பதுதான் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தில் உள்ளடங்கியகூறு இது. காக்கை குருவி எங்கள் சாதி, அவை பேசும் மொழியாகவும் எங்கள் மொழி இதன் பொருள் தாய்மொழியை கடந்து செல்வதல்ல.

**“பிறப்பொக்கும் எல்லா உயிர்களுக்கும்...”**

**“வேறுள குழுவையெல்லாம் மானுடம் வென்றதம்மா...”**

**“அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்..”**

**எட்டுத் திக்கும் சென்று... செல்வங்கள் யாவும்...**

**உழைக்கும் மக்கள் யாவரும் ஒருவர் பெற்ற மக்களே...**

இவை யாவும் சர்வதேசியத்தையும் – பிறமொழி கற்பதையும், மதிப்பதையும் உள்ளடக்கியதே!

யாவும் சர்வதேசிய உள்ளடக்கமே.

– த.லெனின்






# விடுதலை யுத்தத்தில் ரத்த சாட்சி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி!

**அரசியலில் ஒரு ஆழிப்பேரலையாக! ஒடுக்குமுறைக்கு எதிரான பெரு நெருப்பாக! இந்தியாவை ஒரு சமத்துவ நாடாக மாற்ற வேண்டும் என்ற கனவின் ஊடாக 1925 டிசம்பர் 26 அன்று பிறந்தது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.**

1924ல் எஸ்.ஏ.டாங்கே, முஸாபர் அகமது, நளினி குப்தா, உஸ்மானி ஆகிய நான்கு பேருக்கும் நான்காண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. கான்பூர் சதி வழக்கை போட்டு கம்யூனிஸ்ட்களை ஒழித்து விட்டோம் என்று வெற்றிக் களிப்பில் வெள்ளை அரசு இருந்தபோதுதான், கம்சனை அழிக்கப் பிறந்த கிருஷ்ணனைப் போல இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பிறந்தது.

புகழ்பெற்ற கவிஞரும், விடுதலைப் போராட்ட வீரருமான ஹஸ்ரத் மொகானி வரவேற்புக் குழுவின் தலைவராக பொறுப் பேற்க தென்னகத்தின் முதல் கம்யூனிஸ்ட் மா.சிங்காரவேலர் தலைமை உரையுடன் அமைப்பின் முதல் மாநாடு தலைமறைவாக கான்பூர் நகரில் நடந்தேறியது.

கட்சி பிறப்பதற்கு முன்பே வெள்ளை ஆட்சியால் தடை செய்யப்பட்டது. பலர் சதி வழக்குகளால் சிறைச்சாலையில் வாடி வந்தனர். இந்த போர்க்குணமிக்க புரட்சியாளர்களும், தேச பக்தர்களும் இணைந்து உருவாக்கியதே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

போர்க்குணமிக்க வன்முறை சாகசங்களாலும் ஈடு இணையற்ற தியாகங்களாலும் வெள்ளை ஆட்சிக்கு எதிராக போர் புரிந்த தேசபக்தர்கள். வெகு மக்களை விடுதலைக்கு ஆதரவாக அணி திரட்ட இயலாததால் அதிலிருந்து விடுபட்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் சங்கமித்தனர்.

புகழ்பெற்ற கதார் கட்சியை (கதார் என்றால் புரட்சி என்று பொருள்) சார்ந்த லாலா ஹர்தயால், சோகன்சிங் பாக்னா மற்றும் இந்தியாவை ஆயுதப் போராட்டம் மூலம் கைப்பற்றுவதற்காக வெளிநாட்டிலிருந்து காமகட்டமாரு கப்பல் மூலம் வருகை தந்த போராளிகள் பலர் கொல்லப்பட்டனர். எஞ்சியவர்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்.

கல்வி கற்க வெளிநாட்டிற்கு சென்ற எம்.என்.ராய், அபானி முகர்ஜி, வீரேந்திரநாத் சட்டோபாத்யாயா, டாக்டர் பூபேந்திரநாத் தத்தா (சுவாமி விவேகானந்தரின் தம்பி) மற்றும் பலர் மாஸ்கோவில் கம்யூனிஸ்ட்டாகி, அங்கேயே சிலர் தாஸ்கண்ட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை 1920ல் நிறுவினர். ஆனால், ஒன்றுபட்ட கட்சி வெளிநாட்டில் கட்சி உருவானதை ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதுடன், 1925 டிசம்பர் 26 தான் கட்சி அமைக்கப்பட்ட தினமாக ஏற்றுக் கொண்டது.

1922 லிருந்து 1924 வரை இந்தியாவின் வடமேற்கு பகுதியில் நுழைந்த முஹாஜிர்கள் எனப்படும் இஸ்லாமிய புரட்சியாளர்கள் மீது நான்கு பெஷாவர் சதி வழக்குகள் போடப்பட் டன. இதிலிருந்து பலர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்.

நவஜவான் சோசலிஸ்ட் படையை நடத்திய பகத்சிங், ராஜ குரு, சுகதேவ் தூக்கிலிடப்பட்ட பிறகு அவருடைய தோழர்கள் அஜய்கோஷ், ஷிவ்வர்மா, சோஹன் சிங் கோஷ் ஆகியோர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்.

சிட்டகாங் ஆயுதக் கிடங்கு தாக்குதல் புகழ் சூரியா சென்னின் சீடர்களும், புரட்சிப் போராளிகளுமான கணேஷ் கோஷ் மற்றும் கல்பனா தத் ஆகியோர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்.

ஒத்துழையாமை இயக்கத்திற்கு காந்தி அறைகூவல் விடுத்த போது சத்தியாகிரகிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த மறுத்த, கார்வால் ஆயுதப்படை சார்ஜன்ட் சந்திரசிங் கார்வாலி சிறை தண்டனைக்குப் பிறகு வெளியே வந்தவுடன், புரட்சிகர இயக்கமாம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார்.


வெள்ளை காலனியாதிக்கத்திற்கு எதிராக வெகுண்டெழுந்து போராடிய மணிப்பூர் ஜன நேத்தா (மக்கள் தலைவர்) இராபோர்ட் சிங் சிறை வாசத்தின்போதே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார்.

விடுதலைப் போராட்ட புரட்சியின் பல்கலைக்கழகங்களாக விளங்கிய அந்தமான், தியோலி, பக்ஸா, ஹிஜ்லி மற்றும் பிற சிறைகளில் இருந்து விடுதலை அடைந்தவர்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர்.

1921 நவம்பர் 30லிருந்து டிசம்பர் 2 வரை ஜாரியாசில் நடைபெற்ற ஏஐடியூசியின் இரண்டாவது மாநாட்டில் முதல் தீர்மானம் இந்திய மக்கள் சுயராஜ்யம் அடையும் நேரம் வந்து விட்டது என்றது.

1928ல் சைமன் கமிஷன் பம்பாயில் வந்து இறங்கியபோது, 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏஐடியூசி தொழிலாளர்கள் பூரண சுயராஜ்யம் வேண்டும் என்றும், சைமன் கமிஷனே திரும்பிப் போ என்றும் கேட் வே ஆப் இந்தியா வரை ஊர்வலம் சென்றனர்.

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மகாசபை கூட்டம் 1928ல் கல்கத்தாவில் நடைபெற்றது. 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏஐடியூசி தொழிலாளர்கள் காங்கிரஸ் மாநாட்டுப் பந்தலில் நுழைந்து பூரண சுயராஜ்யம் தேவை என்று தீர்மானத்தை முன்மொழிந்தனர்.



மீரட் சதி வழக்கில் கைதானவர்களுக்கு வாதிட நேரு தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. காந்தி சிறைக்கே சென்று அவர்களைச் சந்தித்தார். இவர்களில் பெரும்பகுதி கம்யூனிஸ்ட்கள்.

இவர்கள் மீது வாசிக்கப்பட்ட குற்றப்பத்திரிகையில் பிரிட்டிஷ் இந்திய இறையாண்மையை பேரரசிடம் இருந்து பறித்துக் கொள்ள இந்தியாவிலிருந்து தங்களுக்கு தெரிந்த, தெரியாத ஒவ்வொருவருடனும் சேர்ந்து சதி செய்ததாக வெள்ளை காவல்துறை குற்றம் சுமத்தியது.

அந்தமான் தனி கொட்டடி சிறையில் மிருகத்தனமான சித்திரவதைக்கு பிறகு பலர் இறந்தனர். சிலர் விடுதலை அடைந்தனர். விடுதலையடைந்த அனைவரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தனர். ஆனால், எவரும் ஒருபோதும் வீரசவார்க்கரை போல மன்னிப்புக் கடிதம் எழுதியதில்லை!

நாடு விடுதலைப் பெற்ற போது, நவகாளியில் எழுந்த வகுப்புக் கலவரத்தை அடக்க நேரில் சென்றார் தேசப்பிதா காந்தி. ஆனால், நவகாளிக்கு சில மைல் தூரத்தில் இருந்த லால் ஹஸ்நாபாத் என்ற ஊரின் கதை அனேகருக்குத் தெரியாது. அங்கு ஏராளமான கம்யூனிஸ்ட் விவசாயிகள் அங்கு வந்த ஆயிரக்கணக்கான இந்துக்களுக்கு திரண்டு நின்று பேருதவிகளை செய்தனர். கலகக்காரர்களை மாவட்ட எல்லைக்குள் வரவிடாமல் தடுத்து நிறுத்தினர். அப்படி தடுத்து நிறுத்திய தோழர் லால் மோகன் சென் அந்தமான் சிறையில் இருந்து வெளிவந்து கம்யூனிஸ்ட் ஆனவர். அவர் இக்கலவரத்தில் களப்பலியானர்.

புடம்போட்ட தியாக வரலாற்றுக்குச் சொந்தமான கம்யூனிஸ்ட் கட்சி 1925ல் தொடங்கியதைப் போலவே, கூட்டிக் கழித்துப் பார்த்தால் விடுதலைப் போராட்டத்தை காட்டிக் கொடுத்த ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் 1925 நவம்பர் 27 ஒரு விஜயதசமியன்று ஹெட்கேவரால் தொடங்கப்பட்டது.

ஆர்.எஸ்.எஸ்.சின் குறிக்கோளாக வேத கால பழம் பெருமையான தர்மத்தை நிலை நாட்டுவது என்றும், நமது சமுதாயத்தில் ஒரு பிரிவினர் (பிராமணர்) தூய ஒழுக்கமும், தியாகம் முதலிய பண்புகளுடன் வாழ்த்து வந்தனர். அவர்கள் வாழ்வு அனைத்தையும், ஞானத்தை வளர்க்கிற பணியில் ஒப்படைத்திருந்தார்கள். இந்த சமூகத்திற்கு ஆணி வேர். இவர்கள்தான்! உண்மையில் இந்து ராஷ்டிரத்தின் சிரஞ்சீவியாக வாழ்ந்து வரும் ரகசியம் இதுதான் என்று தனது உயர்சாதிப் பிடிப்பை வெளிப்படுத்திக் கொண்டது.

ஆர்.எஸ்.எஸ். ஒரு இந்து அமைப்பு மட்டுமே. தான் ஒரு பிரிட்டிஷ் எதிர்ப்பு இயக்கம் அல்ல என்பதை பிரகடனப்படுத்தியது! இந்தியா சோசலி சத்தை நோக்கி செல்வதை தடுக்கவே இது உருவாக்கப்பட்டது என்றும் கூறிக் கொண்டது!

அரசியலை இந்துமயமாக்கு! இந்துக்களை ராணுவ மயமாக்கு! என்ற பாசிச முழக்கத்தை எப்போதும் முன்னெடுத்தது ஆர்.எஸ்.எஸ்.!

முஸ்லீம்கள், கிருஸ்தவர்கள் எதிரிகள். கம்யூனிஸ்ட்கள் பயங்கரவாதிகள் என்றது. பாசிச கோட் பாடுகளை, வெறுப்பு அரசியலை உச்சிமுகந்து கொண்டாடியது.

விடுதலைப் போராட்ட தியாகிகளை பற்றி ஆர்.எஸ்.எஸ். வரையறுத்த போது இத்தகைய மனிதர்கள் பின்பற்றத் தக்கவர்களாக நமது சமுதாயத்தால் பார்க்கப்படவில்லை என்றது.

மனு ஸ்மிருதி விதிகள் உலகத்தாருக்கே ஆர்வத்தை தூண்டிக் கொண்டிருக்கிறது. ஒரு இயல்பான அடக்க ஒடுக்க மான (சாதி) சமூகத்தை அது படைத்தது. ஆனால், நமது அரசியல் சாசன சட்டத்திற்கு அதில் ஒன்றுகூட இல்லை என்று ஒதுக்கிவிட்டது என்றும் மனுஸ்மிருதியை உயர்த்திப் பிடித்தது ஆர்.எஸ்.எஸ்.

1930ல் காந்தி சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்ட போது, தண்டியாத்திரையை அவர் துவக்கிய போதும், சத்தியாகிரகத்தில் சங் பங்கேற்காது என்று ஹெட்கேவார் நாடு முழுவதும் செய்தி அனுப்பினார்.

இப்போராட்டத்திற்கு பிறகு மத்திய சட்டமன்றங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களும் ராஜினாமா செய்தனர். ஆனால் இந்து மகாசபை தலைவர் சியாமபிரசாத் முகர்ஜி, நிதியமைச்சராக முஸ்லீம் லீக் தலைமையிலான பஸ்லுக் ஹக் அமைச்சரவையில் அமைச்சராக பற்றிக் கொண்டிருந்தார். இந்த அமைச்சரவை குழு தான் ''தனி பாகிஸ்தான்'' வேண்டுமென்று கேட்டு தீர்மானம் நிறைவேற்றியது. இதுதான் அவர்களது தேச பக்தி!

**1942 வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை காந்தி அறிவித்த போது, அதில் ஆர்.எஸ்.எஸ். பங்கேற்க கூடாது என்று சுற்றறிக்கை விட்டது. இந்து மகா சபைத் தலைவர் வி.டி.சாவர்க்கரோ இந்துக்கள் இந்த இயக்கத்தில் பங்கேற்ககூடாது என்று ஆணையே இட்டிருந்தார். நேதாஜியின் இந்திய தேசிய ராணுவத்தையும் காட்டிக் கொடுத்த காரியத்தையும் செய்தவர் தான் இவர்!**

கம்யூனிஸ்ட்களும் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்கவில்லைதான். காரணம் இரண்டாம் உலகப்போரில் ஹிட்லரை எதிர்த்து சோவியத் முகாமும், மேற்கத்திய நாடுகளும் இணைந்து போர்நடத்தியதே ஆகும். இந்நிலையிலும்கூட நாட்டிலேயே இதில் முதல் களப்பலியானது கம்யூனிஸ்ட் மாணவர் ஹெமு கெலனி ஆவார். அந்த இயக்கத்தில் புகழ்பெற்ற அருணா ஆஸப் அலி, பத்ரி சர்க்கார், கிரந்தி சின்ஹா, நானா பட்டீல் மற்றும் அவரது நெருங்கிய தோழர்கள் அனைவரும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தது வரலாறு!

ஹைதராபாத் நிஜாமை எதிர்த்த வீர தெலுங்கானா, திருவாங்கூர், கொச்சி, பாட்டியாலா ஆகிய சமஸ்தானங்களில் கம்யூனிஸ்ட்கள் முன்னணியில் நின்று இந்தியாவில் இணைப்பதற்கான போராட்டங்களை நடத்தினர்.

காஷ்மீரை இணைக்க தேசிய மாநாட்டுக் கட்சியின் ஷேக் அப்துல்லாவோடு இணைந்து கம்யூனிஸ்ட்கள் பணியாற்றினர். பிரஞ்சு இந்தியப் பகுதியான பாண்டிச் சேரியின் விடுதலைப் போராட்டத்தை வ.சுப்பையா தலைமையில் கம்யூனிஸ்ட் கட்சி நடத்தி வெற்றி அடைந்தது. டச்சு இந்தியப் பகுதியான கோவாவின் விடுதலைக்கு உயிர்நீத்த 35 பேரில் 25 பேர் கம்யூனிஸ்ட்கள்.

தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி வளர்வதை தடுக்க நெல்லை, மதுரை, கோவை, இராமநாதபுரம், சென்னை சதி வழக்குகளை போட்டு எவ்வளவே முயன்றனர். ஆனாலும் இருள் கிழிக்கும் ஆதவனாக எழுச்சிப்பெற்றது. இப்படி ரத்த சாட்சிகளே கம்யூனிஸ்ட்களின் நாட்டுப் பற்று சின்னங்களாக காட்சியளிக்கிறது. விடுதலைக்குப் பின்னும் நாட்டின் ஒற்றுமையை, ஒருமைப்பாட்டை பாதுகாக்க இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பல அளப்பரிய தியாகங்களை செய்துள்ளது என்பது வரலாறு.

காலிஸ்தான் தனி நாடு கேட்டு பஞ்சாபில் சீக்கிய பயங்கரவாதிகள் போராடியபோது, இந்து ராஜ்யமும் அல்ல! காலிஸ்தானும் அல்ல! வாழ்க வாழ்க இந்தியா! என்று தனி நாடு கேட்டவர்களை எதிர்த்த ஆயுதப் போராட்டத்தை நடத்தியது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி! பஞ்சாப் மாநிலச் செயலாளர் தர்ஷன் சிங் கனடியான், அனைத்திந்திய இளை ஞர் பெருமன்றத்தின் மாநிலத் தலைவர் அமலோக் ராம், ஏஐடியூசி தொழிற்சங்கத்தின் நச் சத்தார் சிங் உட்பட 200 பேர் இதில் கொல்லப்பட்டனர்.

இதுதான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தியாக வரலாறு. காட்டிக் கொடுத்தவர்கள் எல்லாம் இன்று தேசபக்த வேடம் போடுகின்றனர். ஆனால் போராட வேண்டிய நேரத்தில் ஓய்வெடுத்தது மட்டுமல்லாமல், ஓய்வின்றி வெள்ளையர்களை ஆதரித்தவர்கள்தான் இன்று நாட்டிற்கு பாடம் நடத்துகின்றனர். என்னே விந்தை!




- எம்.ரவி



# காரிருள் நீக்க வந்த கதிரொளி!

**உங்கள் கரங்களில் தவழும் இந்த "ஜனசக்தி" பத்திரிக்கை சாதாரணமான பத்திரிக்கையல்ல, பல அசாதாரணங்களையும் படைத்து தமிழக வரலாற்றில் தனி முத்திரை பதித்த பத்திரிக்கையாகும். ஜனசக்தி மற்ற பத்திரிக்கையைப் போல் பத்தோடு பதினொன்றல்ல.**

தனிநபர் யாருக்கும் சொந்தமாக்கப்படாத பொது சொத்தான ஜனசக்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை ஏடாக வெளிவந்து கொண்டுள்ளது.

ஜனசக்தி பத்திரிக்கையின் வரலாறு மெய் சிலிர்க்க வைக்கும் தியாக வரலாறாகும். தமிழ்நாட்டின் அரசியல், சமூக பொருளாதார வாழ்வில் பல விளைவுகளை உருவாக்கிய பத்திரிக்கை ஜனசக்தியாகும்.

ஜனசக்தியை துவக்கிய பேராசான் தோழர் ஜீவா முதற்கொண்டு தற்போது ஜனசக்தியின் ஆசிரியராகவுள்ள தோழர். கே.சுப்பராயன் வரை இந்தப் பத்திரிக்கையில் எழுதியவர்கள், பணியாற்றியவர்கள் ஒவ்வொருவரும் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியவர்கள் ஆவர். ஜனசக்தியில் வந்த செய்திகள், கட்டுரைகள், கவிதைகள், மிக மிக அற்புதமான, புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்டவைகளாகும். ஜனசக்தியின் தியாக வரலாற்றை இன்றைய தோழர்களுக்கும், வாசகர்களுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். எனவே, ஜனசக்தியின் வரலாற்றை தொடர்ந்து வெளியிடவுள்ளோம். இதனைப் படித்து பார்ப்பதோடு ஜனசக்தியை அனைத்துத் தரப்பு மக்களிடம் குறிப்பாக உழைக்கும் மக்களிடம் கொண்டு செல்ல அனைவரும் பாடுபடுவோம்!

### பிறந்தது ஜனசக்தி:

இந்தியாவை ஆட்சி செய்து கொண்டிருந்த இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் முடிவின்படி 1937 ஆம் ஆண்டு நவம்பர் 6ஆம் தேதி அன்று சென்னை மாகாண சட்ட மன்றத்திற்கான தேர்தல் நடைபெற்றது. காங்கிரஸ், காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி ஆகியவை ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிட்டன.

இந்த தேர்தலில் தொழிலாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த கோவை தொகுதியில் ஏஐடியூசியின் தமிழக தலைவர்களில் ஒருவரான காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் சார்பாக தோழர். ஜீவானந்தம் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டு, வேட்புமனுவும் தாக்கல் செய்யப்பட்டது.

ஆனால், கோவை மில் முதலாளிகள் ஜீவானந்தம் போட்டியிடுவதை விரும்பவில்லை. அதற்கு மாறாக காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்.ஜி.ராமசாமி அவர்களை வேட்பாளராக அறிவிக்க வைத்தனர். காரணம், காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் வழிகாட்டுதலில் ஏஐடியுசியின் தலைவரான ஜீவானந்தம் தலைமையில் கோவையில் தொழிலாளி வர்க்கத்தின் வீரமிக்க போராட்டங்கள் நடைபெற்று வந்த காலகட்டம் அன்றைய காலகட்டம்.

எனவே, ஜீவானந்தம் சட்டமன்ற உறுப்பினராகிவிட்டால் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டங்கள் தீவிரமடைவதோடு, ஆட்சிக்கு வரும் அரசாங்கம் தொழிலாளிகளுக்கு ஆதரவான நிலை எடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுவிடும் என மில் முதலாளிகள் அஞ்சினர். எனவே, காங்கிரஸ் கட்சி தனது முடிவுக்கு மாறாக என்.ஜி.ராமசாமியை வேட்பாளராக நிறுத்த வேண்டியதாயிற்று.

காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் வேட்பாளரான தோழர்.ஜீவானந்தம் அவர்கள் அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறும் சூழல் அப்போது இருந்தது. ஆனால்,


janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi

புதியதோர் உலகம் செய்வோம்
ஜனசக்தி
மக்கள் வாரஇதழ்

மலர் 84 | 2021 செப்டம்பர் 12 - 18 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 23

ஆர்.எஸ்.எஸ்.சின் வகுப்புவாத வக்கிரம்! — ப 08
அணிதிரட்ட ஆயத்தமாவீர்! — ப 02
பணமாக்கல் திட்டமா? மக்களை பிணமாக்கும் திட்டமா? — ப 03

அப்டேட்ஸ் 12 - 18

செப்.27ல் பாரத் பந்த் வெற்றிபெறச் செய்வீர்

சிபிஐ தேசிய நிர்வாகக் குழு அறைகூவல்

புதுடில்லி: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு கூட்டம் புதுடெல்லியில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகமான அஜய் பவனில் செப். 4, 5ல் நடைபெற்றது.

ஜனசக்தி
சந்தா விவரம்
ஆண்டுச் சந்தா ரூ.500/-
2 ஆண்டுச் சந்தா ரூ.1000/-
ஆயுள் சந்தா ரூ.5000/-
Janasakthi Trust
A/c no 108302000009999
IFC no: IOBA 0001083
Indian overseas bank
Mylapore branch
Chennai 600004

எதிரும் புதிரும்

அடுத்த மாநாடு

தீர்மானங்கள்



காங்கிரஸ், காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி இரண்டும் எதிர் எதிராக போட்டியிட்டால் வாக்குகள் பிரிந்து வெள்ளையருக்கு ஆதரவான நீதிக்கட்சியின் வேட்பாளர் தொழிலாளிகளின் துரோகி பாசுதேவ் ஏதாவது ஒருவகையில் வெற்றிபெறும் நிலை ஏற்பட்டுவிடும் என்பதால் ஜீவானந்தத்தின் வேட்புமனுவை வாபஸ் பெற்றுக்கொள்வது என்று காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி முடிவு செய்தது. மேலும், காங்கிரசுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்வது என்றும் தீர்மானித்தது.

தோழர் ஜீவானந்தம் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து கோவை மற்றும் தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரம் செய்தார். அவர் பேசிய கூட்டங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடினர். சென்னை மகாணத்தில் காங்கிரஸ் அமோக வெற்றிபெற்றது.

இந்த புதிய சூழலில் தங்களது கொள்கையை அனைத்து தரப்பு மக்களிடமும் எடுத்து சொல்லவும், உழைக்கும் மக்களின் போராட்டங்களை விரிவுபடுத்தவும் ஒரு பத்திரிக்கை தேவை என காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி முடிவு செய்தது. அந்த முடிவின் அடிப்படையில் பிறந்தது தான் "ஜனசக்தி".

1937 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆம் தேதி ஜனசக்தி பத்திரிக்கை துவக்கப்பட்டது. தமிழ்நாடு காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் ஜீவானந்தம் ஜனசக்தி பத்திரிக்கையின் ஆசிரியராக பொறுப்பேற்று நடத்தினார்.

ஜனசக்தியின் முதல் இதழில் ஜனசக்தியின் லட்சியம் என்ன? கடமை என்ன? என்பதை "நாம்" என்ற தலைப்பில் ஒரு பிரகடனம் வெளியிடப்பட்டது.

இந்திய சுதந்திரப் போராட்டம் என்பது உலகில் பழமைக்கும், புதுமைக்கும் இடையில் நடக்கும் போராட்டத்தின் ஒருபகுதியேயாகும். ஏகாதிபத்தியத்தையும், பாசிசத்தையும் எதிர்த்து உலக மக்களால் நடத்தப்படும் ஒரு மகா யுத்தத்தின் ஒரு பகுதிதான் இந்திய சுதந்திரப் போராட்டம். மனித சமூக வாழ்வில் புரட்சிகர சக்திக்கும், அதற்கெதிரான ஆதிக்க சக்திக்கும் இடையில் நடக்கும் போராட்டத்தின் ஒருபகுதிதான் இந்திய சுதந்திரப் போராட்டம். இதனை இந்திய மக்கள் அனைவரும் உணர வேண்டும்.

மேலும், நாம் செய்ய வேண்டிய அவசர அவசிய வேலை என்பது இந்தியாவில் உள்ள விவசாயிகள், தொழிலாளர்கள், வாலிபர்கள் ஆகியோரை ஒன்று திரட்டி காங்கிரஸ் மகாசபையை மைய அமைப்பாக வைத்து தேசிய ஐக்கிய முன்னணியை உருவாக்கி ஏகாதிபத்தியத்தை கடுமையாக எதிர்த்து போராடுவது தான் நமது முன்னுள்ள கடமையாகும்.


மேலும், ஏகாதிபத்திய எதிர்ப்பு போரை நடத்தவும், இந்தியாவுக்கு பரிபூரண சுதந்திரம் கிடைக்கவும், சோசலிசத்தை உருவாக்கவும், ஜனசக்தி கடைசி மூச்சு உள்ள வரையில் தயவு தாட்சண்யமின்றி கடும் போர்புரிய போர்கோலம் கொண்டு நிற்கும். என்று தனது முதல் இதழில் ஜனசக்தி போர் பிரகடனம் செய்திருந்தது.





இன்றைய நவகானியாதிக்க, நிதிமூலதன மூர்க்க சுரண்டல் வடிவமான உலகமயத்தை, இந்துத்துவ மதவெறி சக்திகளை வேரறுக்க தொடர் போராட்டங்களின் வாயிலாக ஜனசக்தியின் பணி தொடர்கிறது...!

தொடர்புக்கு: 94427 36668

ஐ.சி.எப். யுனைடெட் ஒர்க்கர்ஸ் யூனியன் - ஏஐடியூசி
ICF UWU AITUC







இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
தமிழ்நாடு மாநில 25வது மாநாடு
வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

C. ஸ்ரீகுமார் — தலைவர்
G.சரவணகுமார் — பொதுச் செயலாளர்
S.பாலாஜி — பொருளாளர்
T.ராஜேந்திரன் — துணைத் தலைவர்
S.நிக்சன் ஆபிரகாம் — நிர்வாகத் தலைவர்
P.குணசேகரன் — துணைத் தலைவர்



# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர்கள் (சிறு குறிப்பு)



**கான்பூர் நகரில் 1925 டிசம்பர் 26ம் நாள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு மாநாடு நடந்தது. அதற்கு மா.சிங்காரவேலர் தலைமை தாங்கினார். அவர்தான் தமிழகத்தில் முதலில் தொழிற்சங்கங்களைத் தொடங்கியவர். பொதுவுடைமைக் கருத்துக்களை சிறுபிரசுரங்களாக வெளியிட்டவர், தன்னை 'கம்யூனிஸ்ட்' என்று காங்கிரஸ் மாநாட்டிலேயே அறிவித்துக் கொண்டவர்.**

ஆனாலும் அமீர் ஐதர்கானின் வருகைக்குப் பிறகுதான் தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பு வடிவில் உருக்கொண்டது. பாகிஸ்தானிலுள்ள ராவல்பிண்டிக்கு அருகிலுள்ள சிறு கிராமத்தில் பிறந்து, புரட்சிகரக் கொள்கைகளை மனதில் இருத்தி, உலக நாடுகள் பலவற்றிற்கும் பயணம் செய்து இறுதியில் பம்பாய் வழியாக 1931ல் சென்னைக்கு வந்தார். கம்யூனிஸ்ட் கட்சியைத் தமிழகத்தில் கால்பதிக்கச் செய்ய கடும் முயற்சிகளை மேற்கொண்டார். மொழியறியா இடத்திற்கு வந்து, காவல்துறைக்குக் கடுக்காய் கொடுத்துக் கொண்டே, தலை மறைவு வாழ்க்கை வாழ்ந்து, பல சிறந்த புரட்சியாளர்களைத் தேடிப்பிடித்து, கம்யூனிஸ்ட் கட்சியை சென்னையில் அமைப்பதில் அமீர்ஐதர்கான் வெற்றி பெற்றார்.

ரஷ்யா மாணிக்கத்தையும், அவரது சகோதரர் ராஜவடி வேலுவையும் சந்தித்தார். பாஷ்யம்என்ற ஆர்யா, பி.சுந்தரய்யா, கம்மம்பட்டி சத்தியநாராயணா, சி.எஸ்.சுப்பிரமணியம், வி.சுப்பையா போன்ற (அன்றைய) இளைஞர்களை ஈர்த் தெடுத்து, கம்யூனிசக் கொள்கைகளை விரிவாக எடுத் துரைத்து, அமைப்பை உருவாக்கினார். 1931ன் பிற்பகுதி யிலிருந்து 1932 இடைப்பகுதி வரையிலும், பிறகு 1934 முதல் 1936 வரையிலும் சென்னையில் கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பு ரீதியாகச் செயல்பட்டது. அக்காலங்களில் பாஷ்யம் என்ற ஆர்யா, சி.எஸ்.சுப்பிரமணியம், பி.சுந்தரய்யா ஆகியோர் அவ்வப்போது (செயலாளராகப்) பொறுப்பேற்று செயல்புரிந்து வந்திருக்கின்றனர்.

பிறந்ததிலிருந்தே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி யினரின் தாக்குதலுக்குள்ளாகி வந்ததால், வெளிப்படையாக பலகாலம் அமைப்பு ரீதியாக இயங்குவதில் சிக்கல் இருந்தது.

### **தோழர் பி.ராமமூர்த்தி** (1952 – 53)

தோழர் பி.ராமமூர்த்தி 1952 – 53 காலங்களில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளராகப் பணி யாற்றியிருக்கிறார்.

தஞ்சை மாவட்டத்தில் ஐதீக பிராமணக் குடும்பத்தில் பிறந்த ராமமூர்த்தி, புரட்சிகர வாலிபனாக வளர்ந்தார். விடுதலை இயக்கத்தில் முன்நின்ற காங்கிரஸ் கட்சியிலும், காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியிலும் முனைப்பாகச் செயலாற்றி, கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். எஸ்.வி.காட்டேயின் வழி காட்டுதல்படி, ஜீவா, கே.முருகேசன், ஏ.எஸ்.கே., சி.எஸ்.சுப்பிரமணியம் ஆகியோருடன் சேர்ந்து தொழிற்சங்கங்களை உருவாக்கினார். 1940– 41ல் அரசு தொடுத்த, சென்னை கம்யூனிஸ்ட் சதிவழக்கில் மோகன் குமாரமங்கலம், சி.எஸ்.சுப்பிரமணியம், சுப்பிரமணியசர்மா, உமாநாத், ஹனுமந்தராவ், கேரளீயன் ஆகியோரோடு பி.ஆரும் சேர்க்கப்பட்டார். 4 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. நாட்டு விடுதலைக்குப்பின் முதல் பொதுத் தேர்தலில் சிறையிலிருந்து கொண்டே மதுரை தொகுதியிலிருந்து சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து சிறப்புறப் பணியாற்றினார்.

### **தோழர் எம்.ஆர்.வெங்கட்ராமன்** (1953 – 1963)

1953ல் நடைபெற்ற மாநில மாநாட்டில் மாநிலச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார் எம்.ஆர். வெங்கட்ராமன். சட்டம் பயின்று வழக்கறிஞராகத் தொழில் நடத்தியபோது இவரிடம் ஒரு வழக்கைக் கொண்டு வந்தார் தோழர் பி.சீனிவாசராவ். அப்போதிலிருந்து அவருடன் ஏற்பட்ட தொடர்பே எம்.ஆர்.வி.யை தீவிர அரசியலுக்குக் கொண்டு வந்தது. எஸ்.வி.காட்டேயின் தொடர்பும் வழிகாட்டுதலும் கிடைத்தது. காங்கிரஸ், காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சிகளில் பணியாற்றி, 1939ல் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். 1940ல் கைது செய்யப்பட்டார். 1943ல் கட்சியின் மாநிலச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மோகன் குமாரமங்கலம் பம்பாய் மத்தியக் கமிட்டி அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டுக் கொண்டதால், தமிழ் மாநிலச் செயலாளராக எம்.ஆர்.வி., பொறுப்பேற்றுக் கொண்டார். 1946 டிசம்பரில் மதுரை சதிவழக்கில் கைது செய்யப்பட்டார். 1947 ஜனவரியில் விடுவிக்கப்பட்ட அவர் மீண்டும் 1948ல் கைது செய்யப்பட்டு சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தார். தமிழ்நாடு எனப் பெயர் மாற்றக் கோரிய போராட்டத்திற்கு ஜீவா, ம.பொ.சி.யுடன் தலைமை தாங்கிச் சென்று மிருகத்தனமாகத் தாக்கப்பட்டார். தனது அண்ணன் மகன் இசை இயக்குனர் எம்.பி.சீனிவாசனையும், நோபல் பரிசு பெற்ற தனது சித்தப்பா, சர்.சி.வி.ராமனின் மகன் சந்திரசேகரையும் கம்யூனிஸ்டுகளாக்கினார். 1964ல் கட்சி பிரிந்தபோது மார்க்சிஸ்ட்டுக் கட்சியில் தொடர்ந்து பணியாற்றினார்.

### **தோழர் மணலி கந்தசாமி** (1963 – 1968)

திருத்துறைப்பூண்டி அருகிலுள்ள மணலி என்ற கிராமத்தில் பிறந்த சி.கந்தசாமி, 1940ல் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். தஞ்சை மாவட்ட விவசாயிகளால் பெரிதும் நேசிக்கப்பட்ட அவர், தஞ்சை மாவட்ட நிலச் சுவான்தார்கள் அனைவருக்கும் சிம்ம சொப்பனமாக விளங்கினார். 1948ல் கம்யூனிஸ்ட்டுகள் மீது அரசு அடக்குமுறையை ஏவிவிட்ட போது, தலைமறைவாக இருந்து தஞ்சை மாவட்டத்தில் கட்சியையும், விவசாய சங்கத்தையும் நடத்தி வந்தார். 1952 பொதுத் தேர்தலின்போது, தலைமறைவாக இருந்தபடியே சட்டமன்றத் தேர்தலில் அமோக வெற்றி பெற்றார். தலை மறைவு காலத்தில் அவர் தலைக்குப் பல்லா யிரம் பரிசு வைத்தது அரசு. ஆனாலும் பிடிக்க முடியவில்லை. பி.சீனிவாசராவோடு இணைந்து விவசாய இயக்கங்களை நடத்திய மணலி கந்தசாமி தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1963ம் ஆண்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

### **தோழர் எம்.கல்யாணசுந்தரம்** (1968–1978)

தென்னிந்திய ரயில்வேத் தொழிலாளர்களின் ஒப்புயர்வற்ற தலைவராக விளங்கியவர் தோழர் எம்.கல்யாணசுந்தரம். 1928ல் நடந்த ரயில்வே வேலைநிறுத்தமும், அதன் தொடர்பான வழக்குகளும் எம்.கே.வுக்கு ஆங்கிலேய ஆட்சியாளர்கள் மீது வெறுப்பை உண்டாக்கின. பொன்மலை ரயில்வேஒர்க் ஷாப்பிலிருந்து ஈரோட்டிற்கு மாற்றலாகிப் போனபோது,அங்கு ஜீவா, ஏ.எஸ்.கே., பி.ஆர். ஆகியோருடன் தொடர்பு ஏற்பட்டது. கே.டி.ராஜு, பி.எம்.சுப்பிரமணியம், பரமசிவம் முதலியோருடன் சேர்ந்து ரயில்வே சங்கத்தைப் பலப்படுத்தினார். காங்கிரஸ்கட்சி தீவிர உறுப்பினராக இருந்த எம்.கே, 1939ல் தலைமறைவாகத் திருச்சி வந்த ஏ.கே. கோபாலனைச் சந்தித்தபின் கம்யூனிஸ்ட் ஆனார். எம்.கே., வேலையிலிருந்து நீக்கப்பட்டார் கைது செய்யப்பட்டார். சிறை மீண்டபின், ரயில்வே தொழிற்சங்கத்தை மேலும் வலுவுள்ளதாக்கி அதன் தலைவரானார். அனந்தன் நம்பியார் செயலாளராக இருந்தார். 1946 ஜூலை முதல் செப்டம்பர் வரை பிரசித்திபெற்ற ரயில்வே வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தினார்.

1947ல் நாடு விடுதலை அடைந்தபோது பாகிஸ்தான் எல்லை பிரதேசத்தில் ஏற்பட்ட வகுப்புக் கலவரங்களின்போது ரயில்வேத் தோழர்களை அனுப்பி தைரியமாக ரயில்களை ஓட்டி இந்து, முஸ்லிம் அகதிகளைக் காப்பாற்ற உதவினார். 1948ம் ஆண்டு கட்சியின் மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்ட காலத்தில் கட்சியின் மாநிலச் செயலாளராக இருந்தார். 1952 பொதுத் தேர்தலில் திருச்சியிலிருந்து சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டசபையில் ஜனநாயக முன்னணியின் துணைத் தலைவராக பணிபுரிந்தார். தமிழ்நாடு சட்டமன்றம், நாடாளுமன்றம், மாநிலங்களவை ஆகியவற்றின் உறுப்பினராக செயலாற்றிய எம்.கே., 1968ல் கட்சியின் மாநிலச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1978 வரை செயலாற்றினார். ஏ.எஸ்.கே.., மறைவுக்குப்பின் ஹார்பர் சங்கத்தின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொழிற்சங்க வேலைகளை முன்னிட்டு டெல்லி சென்றிருந்தபோது 1998 ஜூன் 20 அன்று மாரடைப்பால் காலமானார்.

### **தோழர் ப.மாணிக்கம்** (1978–1992)

தஞ்சை மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்ட தோழர் ப.மாணிக்கம், கடலூரில் வளர்ந்தார். அண்ணாமலைப் பல்கலையில் பயிலும்போதே மாணவர் தலைவராக விளங்கினார். அப்போதே அரசியலில் ஆர்வம் கொண்டு சோசலிஸ்ட் கட்சியுடன் தொடர்பு கொண்டார். நெல்லிக் குப்பத்தில் அடிக்கடி நடந்த ஜீவாவின் சொற்பொழிவுகளை தவறாது கேட்டுவந்தார். அண்ணாமலையில் பயிலும்போது 1941ல் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். எம்.ஆர்.வி., சங்கரய்யா, என்.கே.கிருஷ்ணன் ஆகியோரின் அரசியல் வகுப்புகளில் 1942 – 43களில் கலந்து கொண்டதன் விளைவாக மாணவர் சங்கத்தின் முழுநேர அமைப்பாளரானார். மதுரை, ராமநாதபுரம், நெல்லை மாணவர் அமைப்புகளின் பொறுப்பினை ஏற்றார். 1945க்குப்பின் மாநில மாணவர் சங்கத்தின் பொதுச் செயலாளரானார். பிறகு பாலன் வேண்டுகோளின்படி நெல்லை மாவட்ட கட்சி அமைப்பாளரானார். 1946 கடைசியில் மதுரை சதிவழக்கில் சேர்க்கப்பட்டு, விடுவிக்கப்பட்டார். சிறைமீண்ட பின் கட்சியின் நெல்லை மாவட்டச் செயலாளரானார். 1950ல் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார். நெல்லை சதிவழக்கிலும் சேர்க்கப்பட்டார். 1953ல் விடுதலையானபின் மீண்டும் கட்சியின் நெல்லை மாவட்டச் செயலாளரானார். 1978ல் கட்சியின் மாநிலச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1992 வரை அப்பொறுப்பில் இருந்தார். தமிழ்நாடு சட்ட மேலவை உறுப்பினராகவும் பணிபுரிந்தார்.

### **தோழர் ஆர்.நல்லகண்ணு** (1992 – 2005)

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தோற்றுவிக்கப்பட்ட 1925 டிசம்பர் 26 அன்று நெல்லை மாவட்டத்தில் பிறந்தவர் தோழர் ஆர்.நல்லகண்ணு. தமிழ் புலவருக்கான பி.ஓ.எல். படிப்பை அரசியல் வேலை காரணமாக இடையில் நிறுத்திவிட்டார். பள்ளியில் படிக்கும்போதே ஆசிரியர் பலவேசம் செட்டியார் மூலம் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பு ஏற்பட்டது. 1944ல் ஸ்ரீவைகுண்டம் கட்சிக் கிளையில் உறுப்பினரானார். மதுரையில் நடந்த சென்னை மாநிலத் தொழிற்சங்க மாநாட்டில் பேசிய ஜீவாவின் சொற்பொழிவு இவருக்கு மிகுந்த ஊக்கமளித்தது. பின் நா.வானமாமலை, என்.டி.வானமாமலை, வி.மீனாட்சிநாதன், ப.மாணிக்கம் ஆகியோரைச் சந்தித்தார். சென்னைக்கு வந்து ஜனசக்தி செய்திக்குழுவில் பணியாற்றினார். பிறகு நாங்குநேரி தாலுகாவிற்கு விவசாய சங்கப் பணியாற்றச் சென்றார். விவசாயிகளுக்காதரவாக ஜீயர் மடங்களை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார். நாங்குநேரி பகுதியில் மக்கள் பிரச்சினைகள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு போராடினார். 1948ல் கட்சி தடை செய்யப்பட்ட போது தலைமறைவானார். பிறகு நெல்லைச் சதிவழக்கில் சேர்க்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார். 1956ல் விடுதலையானார். தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், விவசாயத் தொழிலாளர் சங்கங்களில் முக்கிய பொறுப்பேற்று பணியாற்றினார். அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1992 ஏப்ரலில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளராகத் தேர்வு பெற்று 2005ம் ஆண்டு வரை திறம்படப் பணியாற்றினார்.

### **தோழர் தா.பாண்டியன்** (2005–2015)

மதுரை மாவட்டம் உசிலம்பட்டிக்கு அருகிலுள்ள வெள்ளைமலைப்பட்டி கிராமத்தில் 1932 மே 18 அன்று பிறந்தார். இவர் பள்ளியில் படித்த காலத்திலேயே, மதுரை அமெரிக்கன் கல்லூரியில் படித்து வந்த அண்ணன் தா.செல்லப்பா மூலம் உலக விவகாரங்களை அறிந்து கம்யூனிஸ்ட் கட்சியின்பால் ஈர்க்கப்பட்டார். 1948ல் கட்சி தடை செய்யப்பட்டிருந்த காலத்திலேயே, உசிலம்பட்டியில் இளைஞர்களைத் திரட்டி கட்சிப் பணிகளைப் பயமில்லாமல் செய்து கொண்டிருந்தார். பிறகு காரைக்குடி அழகப்பா கல்லூரியில் படித்தபோது ஆர்.ஹெச்.நாதன், எஸ்.நாராயணன் ஆகிய தலைவர்கள் மூலம் கம்யூனிஸ்ட் இயக்கத்தைப் பற்றி விரிவாக அறிந்து கொண்டார். 1953ல் கட்சியில் சேர்ந்தார். அப்போது சட்டமன்ற உறுப்பினராக இருந்த ஜீவா, கம்பன் விழாக் கூட்டங்களுக்கும், அரசியல் கூட்டங்களுக்கும் அடிக்கடி காரைக்குடி வருவார். அவருடன் நெருங்கிய தொடர்பு கிடைத்தது. கல்லூரியில் பட்டப்படிப்பு படிக்கிறபோது, கல்லூரி மாணவர் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பட்டம் பெற்றதும் அக்கல்லூரி யிலேயே 4 ஆண்டுகள் ஆசிரியப் பணியாற்றினார். தோழர் தா.பா.வின் இலக்கிய ஆர்வத்தையும் அரசியல் ஆழத்தையும் உற்று நோக்கிய ஜீவா, அவரை முழுநேர கட்சிப் பணிக்கு ஈர்த்தார். 60களின் தொடக்கத்தில் சட்டம் பயின்ற தா.பா.. அன்றைக்கு இருந்த அரசியல் சூழ்நிலையில் தமிழகம் முழுவதும் சுற்றிச் சுழன்று கட்சிப் பணியாற்றினார். ஜீவா தொடங்கிய தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்று செயலாற்றினார். ஜனசக்தியில் ஆசிரியர் குழுவிலும் இணைந்து பணிபுரிந்தார். தமிழகத்தின் அனைத்து பட்டி தொட்டிகளிலும், கல்வி நிலையங்களிலும் அரசியல் சொற் பொழிவுகள், இலக்கியப் பேருரைகள் நிகழ்த்தியிருக்கிறார். இரண்டு முறை நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் 2005ம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டுவரை கட்சியின் மாநிலச் செயலாளராக செயல்பட்டார்.




'மலையாள மனோரமா' இதழின் கருத்தரங்கில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலியில் உரை!

## ஆளுநர்கள் மூலம் இரட்டை ஆட்சி நடத்தப் பார்க்கும் பா.ஜ.க. தலைமை!

# வலிமையான மாநிலங்களே இந்தியாவின் பலம்!

**கேரள மாநிலம் - திருச்சூரில், "மலையாள மனோரமா" நியூஸ் சார்பில் "இந்தியா 75" என்ற தலைப்பில் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற கருத்தரங்கில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை - முகாம் அலுவலகத்திலிருந்து கலந்து கொண்டு ஆற்றிய உரையில், ஆளுநர்கள் மூலமாக மாநிலங்களில் இரட்டை ஆட்சி நடத்தப் பார்க்கிறது ஒன்றிய பா.ஜ.க. தலைமை!" எனக் கடுமையாகச் சாடினார்.**

மேலும் முதல்வர் அவர்கள் தமது உரையில், "வலிமையான மாநிலங்களே இந்தியாவின் பலம்!" என்று குறிப்பிட்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 30.7.2022 அன்று முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக கேரள மாநிலம், திருச்சூரில் மலையாள மனோரமா நியூஸ் சார்பில் நடைபெற்ற 'இந்தியா 75' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் கலந்துகொண்டு ஆற்றிய உரை வருமாறு:–

கேரள மாநிலத்தின் முதலமைச்சரும் – எனது அன்புக்கும் மரியாதைக்கும் உரிய தோழருமான மாண்புமிகு பினராயி விஜயன் அவர்களே!

மலையாள மனோரமா இதழின் செய்தி ஆசிரியர் ஜானி லூகோஸ் அவர்களே!

தி வீக் செய்தியாளர் லட்சுமி சுப்பிரமணியம் அவர்களே!

மலையாள மனோரமா இதழின் ஊடகவியலாளர்களே!

இந்தக் கருத்தரங்கில் பல்வேறு தலைப்புகளில் உரையாற்ற இருக்கும் கருத்தாளர்களே! அனைவர்க்கும் வணக்கம்!

மலையாள மனோரமா இதழின் சார்பில் நடைபெறும் 'இந்தியா 75 ஆண்டுகள்' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் கலந்து கொண்டு உங்களை எல்லாம் காணொலி மூலமாகச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

திருச்சூருக்கு நான் நேரில் வந்திருக்க வேண்டும்.

இரண்டு வாரங்களுக்கு முன் கொரோனா தொற்றால் நான் பாதிக்கப்பட்டதால் உடல் சோர்வு உள்ளது.

வெளியூர்ப் பயணங்களை ஓரிரு வாரங்களுக்குத் தவிர்க்க மருத்துவர்கள் சொல்லிய காரணத்தால் அங்கு நேரில் வர இயலவில்லை.

கடந்த ஏப்ரல் மாதம் கண்ணூரில் நடந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நான் வந்திருந்தேன்.

அப்போது எனக்கு கேரள மாநில அரசும், மக்களும் அளித்த வரவேற்பை நான் இன்னும் மறக்க முடியவில்லை.

நான் பேசி முடித்ததும் – 'ரெட் சல்யூட் ரெட் சல்யூட்' என்று சொல்லி எனக்கு அந்த மாநாடே வாழ்த்து தெரிவித்த காட்சி நெஞ்சில் நிழலாடி வருகிறது.

என்னையும் தங்களில் ஒருவராக நினைத்து கேரள மாநில மக்கள் வரவேற்பு கொடுத்தார்கள். செல்பி எடுத்துக் கொண்டார்கள்.

அத்தகைய மகிழ்ச்சியான நினைவுகளுடன் திருச்சூருக்கு வர நினைத்தேன், வர முடியவில்லை.

பல்வேறு சோதனைகளை சந்தித்த செய்தி நிறுவனம்!

மலையாள மனோரமா இதழானது 1890ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இன்று இந்தியா முழுமைக்கும் அதிகமான வாசகர்களைக் கொண்ட இதழாக இருக்கிறது. மலையாள மனோரமா செய்தி நிறுவனம் மிகப்பெரிய நிறுவனமாக வளர்ந்துள்ளது. வெறும் செய்தி நிறுவனமாக மட்டுமல்லாமல் தனக்கென ஒரு கொள்கை – கோட்பாடு கொண்ட நிறுவனமாக இருந்ததால் பல்வேறு சோதனைகளைச் சந்தித்த செய்தி நிறுவனம் இது. அத்தகைய துணிச்சல் தான் இந்தளவுக்கு இந்த நிறுவனத்தை வளர்த்துள்ளது.

கேரளாவைப் பொறுத்தவரையில், மலையாள மனோரமா என்பது பெரும்பாலானவர் குடும்பத்தில் ஓர் அங்கம் என்று சொல்லத்தக்க நிலையை அடைந்துள்ளது. அத்தகைய பெருமைமிகு நிறுவனத்தின் சார்பில் நடைபெறும் கருத்தரங்கில் நான் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியா விடுதலை பெற்று 75 ஆண்டுகள் ஆவதையொட்டி, **India 75 - The state of affairs & Federalism, Freedom and Forward** - என்ற இந்தக் கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கூட்டாட்சிக் கருத்தியலும் – விடுதலையால் பெற்ற உரிமைகளும் அனைத்து விதமான வளர்ச்சிக்கான முற்போக்குச் சிந்தனைகளும் இணைந்துதான் இந்தியாவை இந்தளவுக்கு வளர்த்துள்ளன.

இந்தியாவின் வேற்றுமைகளை மதிக்கக் கூடியவராக இந்தியாவின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்கள் இருந்தார்கள். பல்வேறு மொழி பேசும் மக்கள் ஒற்றுமையாக வாழ மொழிவாரி மாகாணங்களை உருவாக்கிக் கொடுத்தார் பிரதமர் நேரு. இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை இந்தி அவர்கள் மீது திணிக்கப்பட மாட்டாது என்று உறுதி அளித்தார் பிரதமர் நேரு.

மதச்சார்பற்ற மனிதர் நேரு!

ஐந்தாண்டுத் திட்டங்களைக் கொண்டு வந்து அனைத்து மாநிலங்களுக்கும் பல்வேறு திட்டங்களை உருவாக்கிக் கொடுத்தார்.

வறுமை ஒழிப்புத் திட்டங்களைச் செயல்படுத்தினார்.

அனைத்து மாநிலங்களிலும் பொதுத் துறை நிறுவனங்களை உருவாக்கித் தந்தார்.

மதச்சார்பற்ற மனிதராக அவர் இருந்தார்.

சகோதரத்துவத்தை வலியுறுத்தினார்.

நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

அனைத்துத் தரப்பும் விவாதம் செய்யும் களமாக நாடாளுமன்றத்தை நடத்திக் காட்டினார்.

கூட்டாட்சி நெறிமுறைகளை அவர் அடிக்கடி பேசினார்.

இந்தியா முழுவதும் இருந்த பல்வேறு மாநில முதலமைச்சர்களோடு அடிக்கடி பேச்சுவார்த்தை நடத்தினார். கடிதங்கள் எழுதினார்.

முதலமைச்சர்களுக்கு அவர் எழுதிய கடிதங்களே பல்வேறு தொகுப்புகளாக வெளியாகி இருக்கிறது.

இத்தகைய காரணங்களால்தான் இந்தி யாவானது 75 ஆண்டுகள் வலிமையோடு நின்று கொண்டு இருக்கிறது.

இந்தியா என்பது ஒற்றை அரசு அல்ல!

இன்னும் பல நூறு ஆண்டுகளுக்கு இந்தியா வலிமையாக இருக்க வேண்டுமானால் இதே கருத்தியல்களை மேலும் மேலும் வலிமைப்படுத்த வேண்டும்.

* கூட்டாட்சி, * மாநிலத் தன்னாட்சி, * மதச்சார்பின்மை

* சமத்துவம், * சகோதரத்துவம், * சமதர்மம், * சமூகநீதி

இவற்றை நாம் வலிமைப்படுத்த வேண்டும்.

இவை அனைத்தையும் காப்பாற்றுவதுதான் இந்தியாவைக் காப்பாற்றுவது ஆகும்.

75ஆம் ஆண்டு சுதந்திர தினத்தைக் கொண்டாடுவது என்பது வெறும் கொண்டாட்டமாக இருக்கக் கூடாது. இன்னும் பல நூறு ஆண்டுகளுக்கு இந்தியா வலிமையோடு இருப்பதற்கான திட்டமிடுதலாக நமது சிந்தனைகள் அமைய வேண்டும்.

இந்தியா என்பதை வெறும் நிலப்பரப்பின் எல்லைகளாக நாம் கருதக் கூடாது.

இந்தியா என்பது இங்கு வாழும் மக்கள்தான்.

இந்தியா என்பது ஒற்றை அரசு அல்ல!

பல்வேறு மாநில அரசுகளின் ஒன்றியம்தான் இந்திய அரசு.

ஒன்றியம் – யூனியன் என்பது தவறான சொல் அல்ல.

அரசியலமைப்புச் சட்டம் இந்தியாவை வரையறுக்கப் பயன்படுத்தும் சொல் யூனியன்தான்.

இந்தியாவைக் காப்பாற்ற வேண்டுமானால் இந்திய ஒன்றியத்துக்குள் உள்ளடங்கியுள்ள அனைத்து மாநிலங்களையும் காப்பாற்ற வேண்டும்.

மாநிலங்கள் காப்பாற்றப்பட்டால்தான் இந்தியா காப்பாற்றப்படும்.

**'Uniformity is different from Unity', as stated by - the great icon of Tamil Nadu Perarignar Anna.**

(தமிழ்நாட்டின் மாபெரும் அடையாளமான பேரறிஞர் அண்ணா கூறியது போல, ஒரே போல ஆக்குவது என்பது ஒற்றுமையில் இருந்து வேறுபட்டது.)

**You cannot achieve UNITY, by bringing UNIFORMITY!**

(ஒற்றைத்தன்மையைத் திணிப்பதன் மூலம் ஒற்றுமையைக் கொண்டுவர முடியாது)

அன்புக்குரிய மலையாளிகளே, பிரபல மலையாள எழுத்தாளர் சிஹாபுத்தின் பொய்த்தும்கடவு **'Truecopy Think'** தளத்தில் எழுதிய ஒரு கட்டுரையின் தமிழ் மொழிபெயர்ப்பை நான் அண்மையில் வாசித்தேன்.

அது தி.மு.க.வின் நாளேடான முரசொலியில் வெளியிடப்பட்டிருந்தது.

புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளுக்குக் கூட தமிழில் இணையான சொற்கள் உண்டு.

ஆனால், மலையாளத்தில் பல வட்டார வழக்குகளிலும் உள்ள அழகிய சொற்கள் அழிந்து வருகின்ற என வேதனையோடு அவர் அக்கட்டுரையில் எழுதியிருந்தார்.

மலையாளத்துக்கும் தமிழுக்கும் இடையேயான ஆழமான உறவைக் குறித்தும் அவர் குறிப்பிடுகிறார்.

அதோடு, பிறமொழிச் சொற்களின் ஆக்கிரமிப்பைத் தமிழ் எவ்வாறு தடுத்து நிறுத்தியது என்றும் அவர் அக்கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

மலையாளிகள் எல்லாரும் அக்கட்டுரையைப் படிக்க வேண்டும் என நான் விரும்புகிறேன்.

ஒற்றை மொழி தேசிய மொழி ஆக முடியாது!

இந்தியாவில் ஒற்றை மொழி தேசிய மொழி ஆக முடியாது.

ஏனென்றால் இந்தியாவில் எத்தனையோ மொழிகள் இருக்கின்றன.

இந்தியாவுக்கு ஒற்றை மதம், அனைவர்க்குமான மதமாக இருக்க முடியாது.

ஏனென்றால், இந்தியாவில் பல்வேறு மத வழிபாட்டு முறைகள் இருக்கின்றன.

இந்தியாவில் ஒற்றைப் பண்பாடு இல்லை.

உணவு, உடை அனைத்திலும் ஆயிரம் வேறுபாடுகள்.

இவ்வளவு வேற்றுமைகளை வைத்துக் கொண்டும் ஒன்றாக வாழ நமக்குள் இருப்பது அன்பும் மனிதநேயமும் மட்டும்தான்.

ஒற்றை மொழியை ஒற்றை மதத்தை ஒற்றைப் பண்பாட்டைத் திணிக்க நினைப்பவர்கள் இந்தியாவின் ஒற்றுமையை சிதைக்க நினைக்கிறார்கள்.

இந்திய ஒற்றுமையைச் சிதைக்க நினைப்பவர்கள் இந்தியாவின் எதிரிகள். இந்திய மக்களின் எதிரிகள்.

இந்தத் தீய சக்திகளுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

வலுவான மாநிலங்கள்தான் கூட்டாட்சியின் அடிப்படை.

வலிமையான – அதிகாரம் பொருந்திய – தன்னிறைவு பெற்றவையாக மாநிலங்கள் இருப்பது இந்தியாவுக்கு வலிமைதானே தவிர, அது பலவீனமல்ல!

வலிமையான – வசதியான தொழில் வளர்ச்சி அடைந்த மாநிலங்களால் இந்தியாவுக்குப் பயன்தானே தவிர, குறைவு ஏற்படாது!

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு 9.22 விழுக்காடாக இருப்பதால் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும்தானே நன்மை கிடைக்கிறது?

மாநிலங்கள் தன்னாட்சி கொண்டவைகளாக இருக்க வேண்டும்!

ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் தமிழ்நாட்டின் பங்கு 6 விழுக்காடு.

தமிழ்நாட்டின் பங்கு என்பது இந்தியாவுக்குத்தானே நன்மை?

மாநில அரசுகள் மிகச்சிறப்பாக மாநிலங்களை வழிநடத்துவதால் ஒன்றிய அரசு பலம் அடையுமே தவிர, பலவீனம் அடையாது! இன்னும் சொன்னால், மக்களோடு நேரடியாக தொடர்பில் இருப்பவை மாநில அரசுகள்தான்! மக்களின் அனைத்து அன்றாடத் தேவைகளையும் பார்த்துப் பார்த்து நிறைவேற்ற வேண்டிய கடமை மாநில **தொடர்ச்சி 16ஆம் பக்கம்**

**ஒவ்வொரு குடிமகனின் வங்கிக் கணக்கிலும் ரூ.15 லட்சம் என்றாயே!**

**ஆண்டுகள் எட்டாகியும் எங்கே அந்த 15 லட்சம்!**

15ஆம் பக்கத் தொடர்ச்சி

அரசுக்குத்தான் இருக்கிறது. எனவே, மாநில அரசுகளைத் தன்னிறைவு பெற்ற அரசுகளாக வைத்திருந்தால்தான் இந்தியா மகிழ்ச்சியாக இருக்கும். அதற்கு மாநிலங்கள் தன்னாட்சி உரிமை கொண்டவையாக இருக்க வேண்டும்.

நாடாளுமன்றத்தில் பேசக் கூட உரிமை இல்லை!

இந்திய அரசானது கூட்டாட்சிக் கோட்பாட்டை மதித்துச் செயல்பட வேண்டும். ஆனால், அதற்கு மாறாக பல நிகழ்ச்சிகள் நடக்கின்றன.

ஒற்றைத் தன்மை கொண்டதாக இந்தியாவை மாற்றும் முயற்சியை நாம் ஏற்க முடியாது.

அதனை வலிமையாக, உறுதியாக, ஒன்றிணைந்து எதிர்க்க வேண்டும்.

பல்வேறு சிந்தனைகள் மோதும் களமாக இருக்க வேண்டிய நாடாளுமன்றங்களில் பேசுவதற்கான உரிமை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே மறுக்கப்படுகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள் உள்பட 27 எம்.பி.க்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார்கள். கருத்தைச் சொல்வதற்கான களமான நாடாளுமன்றத்தில்கூட பேச உரிமை இல்லை.

இதுதான் இந்திய மக்களாட்சியின் இன்றைய நிலை!

சரக்கு மற்றும் சேவை வரி மூலமாக மாநிலங்களின் நிதி உரிமை பறிக்கப்பட்டு விட்டது. இழப்பீடாக தரப்படும் நிதி உரிய நேரத்தில் தரப்படுவது இல்லை. முழுமையாகவும் தருவது இல்லை.

நீட் போன்ற நுழைவுத் தேர்வுகளால் எளியோருக்குக் கல்வி உரிமை மறுக்கப்படுகிறது.

புதிய கல்விக் கொள்கை என்பது கல்வியைப் பல்வேறு படிநிலைகளில் தடுப்பு போட்டு மறிக்கும் கொள்கையாக உள்ளது.

ஒன்றிய அரசின் பல்வேறு சட்டங்கள், மக்கள் விரோதச் சட்டங்களாக இருக்கின்றன.

ஆளுநர்களின் மூலமாக இரட்டை ஆட்சி நடத்தப் பார்க்கிறது பாஜக தலைமை.

இவை அனைத்துக்கும் இடையில்தான் மாநிலங்களில் ஆட்சி நடத்தியாக வேண்டும். அரசியல் நடத்தியாக வேண்டும்.

மக்கள் தேவைகளை, எதிர்பார்ப்புகளை நிறைவு செய்தாக வேண்டும்.

அதற்காக நான் நம்பிக்கை இழக்கவில்லை.

இந்தியாவின் மிக நீண்ட வரலாறும் – இந்திய மக்களின் சகோதர உணர்வும் – இந்தியாவை நிச்சயம் காக்கும் என்று நான் நம்புகிறேன்.

மலையாள மனோரமா போன்ற இதழ்களுக்கு தங்களது ஊடகப் பணியைத் தாண்டி இந்தியாவைக் காக்கும் பணி இருக்கிறது என்பதை மறந்துவிடாதீர்கள்.

75 ஆண்டுகள் இந்தியாவைக் காத்த அரசியல் நெறிகளைக் காக்க ஜனநாயக சக்திகளோடு இணைந்து ஊடகங்களும் கருத்துப் பிரச்சாரத்தை தொடர வேண்டும்.

75 ஆண்டுகளுக்கு முன்னால் மாநில முதலமைச்சர்களுக்கு அன்றைய பிரதமர் நேரு கடிதம் எழுதியபோது, ''மிக நீண்டகால நன்மையாக இருந்தாலும், குறுகிய கால நன்மையாக இருந்தாலும் இந்தியாவுக்கு ஜனநாயகமே பொருத்தமானது! இந்தியாவுக்கு மட்டுமல்ல எந்த நாட்டுக்கும் ஜனநாயகமே பொருத்தமானது'' என்று சொன்னார்.

அத்தகைய ஜனநாயக விழுமியங்கள் கொண்ட நமது இந்தியாவை எந்நாளும் பாதுகாக்க நம்மை அர்ப்பணிப்போம்!

எனது அன்புக்குரிய மலையாளி உடன்பிறப்புகள் எல்லோருக்கும் நன்றி! வணக்கம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## முதல்வர் பேட்டி!

இதனைத் தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 30.7.2022 அன்று முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக கேரள மாநிலம், திருச்சூரில் மலையாள மனோரமா நியூஸ் சார்பில் நடைபெற்ற 'இந்தியா 75' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் பங்கேற்று ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு அளித்த பதில் வருமாறு:–

**கேள்வி:** கேரள மக்கள் தமிழ் சினிமா மற்றும் இசையின் பெரும் ரசிகர்கள். அதே போல ரசிகர் கூட்டம் தமிழக முதல்வருக்கும் அங்கு இருக்கிறது. கண்ணூரில் நடந்த சி.பி.எம். கட்சி மாநாட்டில் உங்களுக்குக் கிடைத்த வரவேற்பில் இருந்து அது தெளிவாகத் தெரிகிறது. கேரள முதல்வர் பினராயி விஜயனை தமிழகம் எப்படிப் பார்க்கிறது?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** எனக்கு கேரளாவில் ரசிகர்கள் இருப்பது போல 'காம்ரேட்' பினராயி விஜயன் அவர்களுக்கும் தமிழ்நாட்டில் மிகப்பெரிய ரசிகர் கூட்டம் இருக்கிறது. அவர் முதலமைச்சராக செயல்பட்டு கொண்டு இருந்த நேரத்தில், தமிழ்நாட்டில் வேறு ஒரு கட்சியின் ஆட்சி இருந்தது. அது உங்களுக்கு தெரியும். அப்போது கேரள மாநிலத்தின் பினராயி விஜயன் போல ஒரு முதலமைச்சர் நமது மாநிலத்திற்கு இல்லையே என்று தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய மக்கள் எல்லாம் ஒரு ஏக்கத்தோடு சொல்லிக் கொண்டு இருந்தார்கள். அதை ஊடகங்கள்கூட எழுதியது.

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் நடந்தபோது – உள்ளபடியே சொல்கிறேன். என்னுடைய செயல்பாடுகளுக்கு, முன்னுதாரணமாக உங்களுடைய முதலமைச்சர் பினராயி விஜயனுடைய செயல்பாடுகளை தான் நான் கையில் எடுத்தேன்.

குறிப்பாக, கொரோனா தொற்று நோயை எப்படி கட்டுப்படுத்த வேண்டும் என்பதை உங்கள் மாநிலத்தினுடைய முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களின் வழிகாட்டுதல்படி தான் அந்தப் பணியை நிறைவேற்றினேன் என்பது முக்கியம். இதுதான் எனக்கு ஒரு பெரிய பெருமை.

**கேள்வி:** தமிழகத்தில் சி.பி.எம். கட்சியும் மற்றும் தி.மு.க.வும் கூட்டணி கட்சிகள். இந்த நட்பு ஆட்சியிலும் கட்சியிலும் எப்படி இருக்கிறது?

**முதல்வர்:** எங்களுடைய இரு கட்சிகளுக்கும் இடையில் இருப்பது வெறும் தேர்தல் கூட்டணி மட்டுமல்ல. அது ஒரு கொள்கை கூட்டணி, இலட்சியக் கூட்டணி. எனவே நாங்கள் இணக்கமாகவே இருக்கிறோம்.

தி.மு.க. ஆட்சிக்குத் தேவையான, ஆரோக்கியமான ஆலோசனைகளை சி.பி.எம்.மை பொறுத்தவரையும் அக்கட்சியினுடைய தலைவர்கள் எங்களுக்கு அவ்வப்போது அறிக்கைகளாக கொடுக்கிறார்கள். தொலைபேசி மூலமாக எங்களுக்கு சொல்கிறார்கள். ஏன் நேரிலும் எங்களை பார்த்து இப்பிரச்சினைகள் எல்லாம் இருக்கிறது, இப்படி செய்ய வேண்டும் என்று கருத்துகளை சொல்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், நானும் சில விஷயங்களை அவர்களோடு நேரடியாக தொடர்பு கொண்டு செய்து கொண்டு இருக்கிறோம். அதையும் தாண்டி பல கருத்துகளை சி.பி.எம். அதிகார பூர்வமான பத்திரிகையான ''தீக்கதிர்'' பத்திரிகையில், அவ்வப்போது ஆட்சியில் இருக்கக்கூடிய சில குறைபாடுகளை சுட்டிக் காட்டுகிறார்கள். அதையெல்லாம் உடனுக்குடன் சரி செய்கிறோம். ஆக எங்களுடைய கொள்கை கூட்டணி, ஆரோக்கியமாக தொடர்ந்து கொண்டு இருக்கிறது. இது தொடரும்.

ஒரு மொழி என்று பேசுவது அச்சுறுத்தலாகும்!

**கேள்வி:** உள்துறை அமைச்சர் அமித் ஷா, ஒரே நாடு, ஒரே மொழி என்று கூறியபோது, தமிழகம் மற்றும் கேரளாவில் இருந்து எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன. பின்னர் பிரதமர் மோடி பிராந்திய மொழிகளின் முக்கியத்துவத்தை ஏற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டார். ஆனால் ஒரு மொழி என்று பேசுவது மாநில மொழிகளுக்கு அச்சுறுத்தலானதா?

**முதல்வர்:** ஆமாம்!

இந்தியா என்பது பல்வேறு மொழிகள் பேசக்கூடிய மக்கள் வாழக்கூடிய நாடாகும். ஒற்றை மொழி என்பது தேசிய மொழியாகவோ, ஆட்சி மொழியாகவோ, அரசு மொழியாகவோ நிச்சயம் ஆக முடியாது. அப்படி ஆனால் மற்ற மொழிகள் பாதிக்கப்படும். காலப்போக்கில் அழிந்துவிடும். அதில் மாற்று கருத்து இல்லை. அதுதான் என்னுடைய பதில்.

விடுதலைப் போராட்ட தியாகிகளுக்குச் செய்யும் துரோகம்!



**கேள்வி:** கருத்துச் சுதந்திரம் கேள்விக்குள்ளாகி வருகிறது. பத்திரிக்கையாளர்கள் கூட கைது செய்யப்படுகிறார்கள். மத்திய புலனாய்வு அமைப்புகள் எதிர்க்கட்சித் தலைவர்களை குறிவைக்கிறது. போராடிப் பெற்ற சுதந்திரத்தை இழக்கிறோமா?

**முதல்வர்:** இவை அனைத்தும் ஒரு எதேச்சதிகாரப் போக்குகள்!

போராடி பெற்ற சுதந்திரத்திற்கு பின்னர் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பு வழங்கிய உரிமைகள் அனைத்தையும் பறிப்பது என்பது மிகமிக தவறானது. இந்திய விடுதலை போராட்ட தியாகிகளுக்கு செய்யக்கூடிய துரோகம் என்பது தான் என்னுடைய கருத்து.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.

நன்றி: *முரசொலி (31.07.2022)*


வல்லான் பொருள் குவிக்கும்
தனியுடைமை நீங்கி
வரவேண்டும் திருநாட்டில்
பொதுவுடமை!

கட்சியின் மாநில மாநாடு
ஜனசக்தி சிறப்பு மலருக்கு
வாழ்த்துக்கள்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

கண்ணம்பாளையம் – வடக்கு
கண்ணம்பாளையம் – தெற்கு
கண்ணம்பாளையம் – 11 வது வார்டு
கண்ணம்பாளையம் – 12 வது வார்டு
செல்வராஜபுரம் – கிளைகள்

பாலன் இல்லம்
கண்ணம்பாளையம்
சூலூர் தெற்கு வட்டாரம்
கோவை – 641 402.




ஒன்றுபட்டுப்போர் புரிந்தே
உயர்த்துவோம் செங்கொடியை
இன்றுடன் தீருமடா – என் தோழனே
இம்சை முறைகளெல்லாம் – ஜீவா

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி



தமிழ்நாடு 25 ஆவது மாநில மாநாடு
வெல்லட்டும்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
சூலூர் தெற்கு வட்டாரக்குழு

தியாகி ஸ்டாலின் சின்னையன் இல்லம்
20 C, சந்தை வீதி, சூலூர்
கோவை – 641 402.
மற்றும்

சூலூர் - இருகூர் - பாரதிபுரம் - பட்டணம்
காமாட்சிபுரம் - நடுப்பாளையம் கிளைகள்




# திருப்பூர் மாநில மாநாடு - ஊர்வல முழக்கங்கள்



செம்படைப் பேரணி வருகிறது!
செங்கொடி ஏந்தி வருகிறது!
வர்க்கப் போரின் போர் வாளாய்
ஃபாசிசம் ஒழிக்கும் கூர்வாளாய்
செம்படைப் பேரணி வருகிறது!
தன்னுயிர் தந்து கொடி காத்த
குமரன் வாழ்ந்த மண்ணிலே
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
செம்படைப் பேரணி வருகிறது!

சுரண்டலற்ற சமுதாயத்தை
சோஷலிச சமுதாயத்தை
இந்திய மண்ணில் மலரச் செய்திட
முழக்கமிட்டே வருகிறது!
கொள்ளையன் மோடியே
வெளியேறென்று
குரல் எழுப்பி வருகிறது!
செம்படைப் பேரணி வருகிறது!

இந்திய நாட்டை இருட்டில் தள்ளும்
குருட்டு காவி பயங்கரவாதக் கும்பலை
ஆட்சியை விட்டு அகற்றிடுவோம்
இந்திய நாட்டின் ஒற்றுமை குலைக்கும்
மதவெறியை வேரோடு
பெயர்த்தெறிவோம்!

சுதந்திரக் காற்றை சுவாசிக்க
வெள்ளையனே வெளியேறென்றோம்
பெற்ற சுதந்திரம் பேணிக் காக்க
நாட்டைச் சுடுகாடாக்கும்
கொள்ளையன் மோடியே
வெளியேறென்போம்!

ஒன்றிய காவி கார்ப்பரேட் மோடி அரசின்
வேலையின்மை, வெறுப்பு அரசியல்
மக்கள் விரோதப் போக்கிற்கெதிராய்
அணி வகுத்துக் குரல் கொடுப்போம்!
பிணி அகற்ற குரல் கொடுப்போம்!

திருப்பூர் வீதிகள் அதிர்ந்திடவே
செம்படைப் பேரணி வருகிறது
கொள்ளையன் மோடியே
வெளியேறென்று
உரக்க நாமும் குரல் கொடுப்போம்!

சங் பரிவார், ஆர்எஸ்எஸ்
காவி பயங்கர இந்துத்வா மோடியை
ஆட்சியிலிருந்து அகற்றாமல்
இந்திய மக்களுக்கு விடுதலை இல்லை!

ஆட்சிக்கெதிராய் கருத்துச் சொன்னால்
தேச விரோத முத்திரையா?
பயங்கரவாதி முத்திரையா?
இந்தக்கொடுமை இனியும் தொடர
ஒரு நாளும் அனுமதியோம்!

பெட்ரோல் டீசல் சமையல் வாயு
விஷம்போல் விலையேறி நிற்கிறது
வரியை மட்டும் குறைத்தால் போதும்
விலைகள் தானாய்க் குறைந்துவிடும்!
காங்கிரஸ் ஆட்சியில் எதிர்ப்பைக் காட்ட
கட்டை வண்டியில் போனவர்கள்
சொரணையற்று போனார்கள்!

தொழிலாளி வர்க்கம் போராடிப் பெற்ற
உரிமைகள் அனைத்தையும் பறிக்கின்ற
புதிய சட்டத் திருத்தங்களை
குப்பையிலே தூக்கி எறிவோம்!

அத்துக் கூலி தினக் கூலி
ஒப்பந்தக் கூலி எல்லாமே
சுரண்டலின் மாற்று வடிவங்களே
இராணுவத்திலும் காண்டிராக்டா?
அக்னிவீர் அக்னிபாத்
சுரண்டல் முறையை ஏற்க மாட்டோம்!
இராணுவத்தில் காண்ட்ராக்ட் முறை
நாட்டுக்கே ஆபத்து! பேராபத்து!

நீட் தேர்வு என்பது
ஏழை மாணவர் கனவுகளை
குழி தோண்டிப் புதைத்து விடும்!
கல்விச் சிறந்த தமிழ் நாட்டில்
நீட் தேர்வு தேவை இல்லை!

ஒன்றிய அரசின் ஜிஎஸ்டி
கார்பரேட்டுக்கு காவடி தூக்குது
ஏழைகள் வயிற்றில் ஓங்கி அடிக்குது!
தறிகெட்டோடும் ஜிஎஸ்டியை
தலைதெறிக்க விரட்டிடுவோம்!

வந்தாரை வாழவைக்கும் நம்ம
திருப்பூரிலே
இங்கிருப்போருக்கே வேலை இல்லை
பாழாய்ப்போன பணமதிப்பிழப்பால்
இருந்த வேலையையும் இழந்து
விட்டோம்!

சிறு குறு நடுத்தர
நிறுவனம் பலவும் மூடிக் கிடக்குது
குட்டி ஜப்பான் திருப்பூர்
குட்டிச் சுவராய் மாறுவதோ?

இத்தனைக்கும் காரணமான
மோடி அரசைத் தூக்கி எறிவோம்
ஆட்சி மாற்றம் இல்லாமல்
கொள்கை மாற்றம் இல்லாமல்
எதுவும் இங்கு மாறாது!

வானும் மண்ணும் காற்றும் நீரும்
எல்லோருக்கும் பொதுவாகும்
உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கெதிராய்
மேகதாது பிரச்சனையில்
சார்பு நிலை எடுக்கின்ற
ஆணையத் தலைவரின் போக்கை
வன்மையாகக் கண்டிக்கின்றோம்!

ஒன்றிய அரசே மோடி அரசே
கிராமப்புற மக்களுக்கான
வேலை உறுதித் திட்டத்தில்
வேலை நாட்களை 200 ஆக்கு
தினக் கூலியை 600 ஆக்கு!
எல்லோருக்கும் வேலை கொடு!
வேலை கொடுக்க முடியாவிட்டால்
ஆட்சியை விட்டே நடையைக் கட்டு!

பொதுத் துறை நிறுவனங்கள்
இந்திய நாட்டின் நவீன கோயில்கள்
அஞ்சல், வங்கி, காப்பீடு
ஆயில், நிலக்கரி, தொலைத்தொடர்பு
இரயில்வே மற்றும் பாதுகாப்பில்
தனியார் மயத்தை அனுமதியோம்!

விற்காதே! விற்காதே!
பணமாக்கல் கொள்கை பேரால்
தேசச் சொத்தை விற்காதே
ஒன்றிய அரசே விற்காதே!
மனம் குன்றிய மோடி அரசே விற்காதே!

திரும்பப்பெறு திரும்பப்பெறு!
தொழிலாளர்களின் வயிற்றிலடிக்கும்
புதிய பென்ஷன் திட்டத்தை
ஒன்றிய அரசே திரும்பப் பெறு
தமிழ்நாடு அரசே திரும்பப் பெறு!
உடனடியாகத் திரும்பப் பெறு!

சாதியின் பேரால் மதத்தின் பேரால்
இனத்தின் பேரால் மொழியின் பேரால்
மதவெறி சக்திகள்
இந்தியாவைக் கூறு போட
ஒரு போதும் அனுமதியோம்!

ஒரேநாடு ஒரேமொழி ஒரேமதம் என்றால்
ஒரே போடு போட்டிடுவோம்!
மோடி ஆட்சியை தூக்கி எறிவோம்!
தூக்கி எறிவோம்!

பெரியாரும், ஜீவாவும், சிங்காரவேலரும்
வாழ்ந்த தமிழ் மண்ணில்
சனாதனத்தை அனுமதியோம்!
ஒருபோதும் அனுமதியோம்!

மனுதர்ம சாதிமுறையை எதிர்த்த
தோழர் கோவிந்த் பன்சாரேவை
மூட நம்பிக்கைக்கு எதிராக
முழக்கம் இட்ட தபோல்கரை
விட்டுவைக்குமா
மதவெறிக் குண்டர் கூட்டம்!
கவுரி லங்கேஷ், கல்புர்கி
சமூக நீதிப் போராளிகள்
தொடர்ந்து சுட்டுப் படுகொலைகள்!
இனியும் தொடர அனுமதியோம்
சபதம் நாமும் ஏற்றிடுவோம்!

பேய் ஆட்சி செய்திட்டால்
பிணம் தின்னும் சாத்திரங்கள்!
காஷ்மீர் மக்கள் கனவை சிதைத்து
வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சும்
சொந்த மக்களை பிரித்தாண்டு
குடியை கெடுக்கும் குடியுரிமை
திருத்தச் சட்டம்!
விடமாட்டோம்! விடமாட்டோம்!
மக்களை பிளக்க விடமாட்டோம்!

ஆர்.எஸ்.எஸ். குருபீட
கட்டளைக்கு தலையாட்டும்
ஃபாசிஸ்ட் மோடி அரசாங்கத்தை
ஆட்சியிலிருந்து தூக்கி எறிவோம்!
வன்முறை வெறுப்பு அரசியலை
வேரோடு அகற்றிடுவோம்!
வெந்நீர் ஊற்றி அகற்றிடுவோம்!

விவசாயிகள் போராட்டம்
வீரம் செறிந்த போராட்டம்
மூன்று வேளான் சட்டங்களை
முறியடித்த போராட்டம்!
மூர்க்கமான பிடிவாதத்தை
முறியடித்த போராட்டம்!
போராடினால் முடியும் என்ற
நம்பிக்கையை விதைத்த போராட்டம்!
அந்தச் சுடரைக் கையில் ஏந்தி
அநீதிகளைப் பொசுக்கிட
அணிதிரள்வோம்!

எப்படியாவது ஆட்சியைப் பிடிக்க
பொய் மூட்டைகளை அவிழ்த்து விட்ட
கோயபல்ஸ் மோடியே
கொடுத்த வாக்குறுதி என்னாச்சு?
கறுப்புப் பணத்தை பிடித்தாயா?
ஒவ்வொரு கணக்கிலும் 15 லட்சம்
போட்டாயா? போட்டாயா?
ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு
வேலையொன்று தந்தாயா? தந்தாயா?
வாங்கிய கடனைக் கட்டாமல்
கோடிகளில் கொள்ளையடித்து
நாட்டை விட்டு ஓடிப்போன
நீரவ் மோடி மல்லையாவை - நீ
பிடித்தாயா? பிடித்தாயா?
கட்சி நிதி வாங்கிக் கொண்டு
தப்பிப் போக விட்டாயே - ஒருபோதும்!
தப்பிக்கவே முடியாது!
மக்கள் எழுச்சி
நிச்சயம் உங்களைத் தண்டிக்கும்!
தண்டிக்கும்!



## மகாகவி பாரதியின் கடைசிக் கவிதை

# பாரத சமுதாயம்

**ராகம்: பியாக்,**
**தாளம்: ஏகதாளம்**
**பல்லவி**

பாரத சமுதாயம் வாழ்கவே! – வாழ்க வாழ்க!
பாரத சமுதாயம் வாழ்கவே! – ஜய ஜய ஜய!

**அனுபல்லவி**

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை – வாழ்க (பாரத)

**சரணங்கள்**

மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனி யுண்டோ? – புலனில்
வாழ்க்கை இனியுண்டோ? – நம்மிலந்த
வாழ்க்கை இனி யுண்டோ?

இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெருநாடு;
கனியும் கிழங்கும் தானி யங்களும்
கணக்கின்றித் தரு நாடு – இது
கணக்கின்றித் தரு நாடு – நித்த நித்தம்
கணக்கின்றித் தரு நாடு – வாழ்க!

பாரத சமுதாயம் வாழ்கவே! – வாழ்க வாழ்க!
பாரத சமுதாயம் வாழ்கவே! – ஜய ஜய ஜய!

இனியொரு விதி செய்வோம் – அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவில்லை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம் – வாழ்க!

பாரத சமுதாயம் வாழ்கவே! – வாழ்க வாழ்க!
பாரத சமுதாயம் வாழ்கவே! – ஜய ஜய ஜய!

“எல்லா உயிர்களிலும் நானே யிருக்கிறேன்”
என்றுரைத்தான் கண்ண பெருமான்;
எல்லாரும் அமரநிலை எய்தும்நன் முறையை
இந்தியா உலகிற் களிக்கும் – ஆம்

இந்தியா உலகிற் களிக்கும் – ஆம் ஆம்
இந்தியா உலகிற் களிக்கும் – வாழ்க!

எல்லாரும் ஓர்குலம் எல்லோரும் ஓரினம்
எல்லோரும் இந்திய மக்கள்.
எல்லோரும் ஓர்நிறை எல்லோரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர் – நாம்!
எல்லாரும் இந்நாட்டு மன்னர் – ஆம்!
எல்லாரும் இந்நாட்டு மன்னர் – வாழ்க!



## பாவேந்தர் பாரதிதாசனின் கடைசிக் கவிதை

# துன்பச் சுமை தாங்கி!

சீவாநந் தத்தின்
தமிழ்த் தொண்டு செப்புகிற
‘நா’ ஆனந் தத்தை
நணுகுமன்றோ – பாவாணர்
நல்லாரைப் பாடியன்றோ
நல்லின்பத்தைப் பெற்றார்
பொல்லாரைப் பாடுவரோ போய்?

சீவா வினவறிந்த
நாள்முதல் செந்தமிழ்ச் சீர்
காவாத நேரத்தைக்
கண்டவர் யார்? நாவாரச்
சொற்பொருக் காற்றாத்
துறையுண்டோ? யார்க்குமவர்
பொற்பெருகச் சீறும் புலி

பாட்டெழுதக் கேட்டிடுவார்
பன்னாளும், ஓர் நாள், நீர்
பாட்டெழுதும், என்று
பகர்ந்திட்டேன் கேட்ட அவர்
ஏழை நிலை எண்ணி
எழுதிய பாட் டொவ்வொன்றும்
வாழவகை செய்யும் மருந்து.

இறைக்கஞ்சி ஏங்கும்
தலைவர்போல் அன்றிச்
சிறைக்கஞ்சா சிங்கத்தைச்
எண்ணினால் நெஞ்சம்
இறங்கும் தமிழின்நிலை
எண்ணினால் கண்ணீர்வரும்!

எப்போது பெண்கொண்டா?
இல்லத்தின் மக்கள் தமை
எப்போது கையில்
எடுத்தணைத்தார்? – முப்போதும்
மாசுடையும் மாற்றாத
சீவாவுக் கூர்ஊராய்ப்
பேசுவது தானே பெரிது.

தாமரைக்கோர் ஆசிரியர்
தாய்மொழிக்கோர் ஆய்வாளர்
ஊமரையும் பேசவைக்கும்
உண்மையிதழ்த் தாமரையோ
கல்விப் பசிக்கு நல்
கட்டமுது! கற்றாரை
வெல்விக்கும் வெற்றி முரசு

நாட்டுக்குப் பேசித்தன்
நாட்டுக்கெழுதி உயிர்
நாட்டுக்கே நல்கிய
சீவாவை – நாட்டில்
இருக்கும் படிசெய்வோம்!
கல்நாட்டிச் சீர்த்தி
பெருக்கும் படிசெய்வோம் நாம்!

இருந்தும் வரைந்தார்
இறந்தும் வரையத்
திருந்து புலவரையும்
செய்தார்! – விருந்தினரைத்
தாமரை என்றும்
தழுவவைத்தார் ஆதலினால்
நாமவரை நாளும் மறவோம்.

தாங்கொண்ட கொள்கை
தழைக்கப் பெரிதுழைப்பார்
தீங்குவரக் கண்டும்
சிரித்திடுவார் – யாங்காணோம்
துன்பச் சுமைதாங்கி!
சீவானந்தம் போன்ற
அன்பச் சுமைதாங்கும் ஆள்


சீவா புகழ்காப்போம்!
செம்மை மனைமக்கள்
மூவா மகிழ்ச்சியினில்
மூழ்க வைப்போம் – சீவா
தொடங்கிய வற்றைத்
தொடர்ந்து முடிப்போம்
நடுங்கோம் தமிழ் மீட்க நாம்.





வெற்றி பெற
வாழ்த்துகிறோம்!
எஸ்.கே. சிவா
தென் சென்னை மாவட்ட செயலாளர்













வெற்றி பெற
வாழ்த்துகிறோம்!
செ. லெட்சுமணன்
திருநெல்வேலி மாவட்ட செயலாளர்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்**
**25வது மாநில மாநாட்டில்**
**ஒடுக்கப்பட்டோரின் உரிமைக்குரல்**
**ஓங்கி ஒலிக்கட்டும்!**

உழைக்கும் வர்க்கத்தின்
உரிமைகளை மீட்டெடுப்போம்!
எதேச்சதிகாரத்தை முறியடிப்போம்;
முற்றுப்புள்ளி வைப்போம்!

புதிய பாய்ச்சலுக்கு அணிவகுப்போம்;
அணியமாவோம்!

பொதுவுடைமை மலர்ந்திட
போர்ப்பறை இசைத்திடுவோம்!

தோழர் **மு.வீரபாண்டியன்**
மாநிலச் செயலாளர்
தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம்

தோழர் **பொ.லிங்கம்**
அகில இந்திய துணைத் தலைவர்

மாநிலச் செயலாளர்கள்
வழங்கறிஞர் **கீ.சு. குமார், அசரப் அலி, எஸ்.கே.சிவா**

மாவட்டச் செயலாளர்கள்
**ஜி.சுப்பிரமணி** (வடசென்னை), **ஆர்.சி.மாதவன்** (தென் சென்னை),
**ராமச்சந்திரன்** (காஞ்சிபுரம்), **கிருஷ்ணன்** (திருவள்ளூர்),
**வெங்கடேசன்** (கள்ளக்குறிச்சி), **பழனிகுமார்** (விருதுநகர்),
**மூர்த்தி** [மதுரை), **செல்வன்** (தேனி)

# தம்பிக்குறள்

## 199. பொதுவுடைமை

**நல்லதெல்லாம் நாடுவான் நாடுக உள்ளமெல்லாம்**
**ஒன்றா சமதர்மம் நன்று.**

நல்லதையே விரும்புகின்றனர் உள்ளத்தில் ஒப்பற்ற பொதுவுடைமையே நல்லது என்று எண்ணி முயல்க.

**நல்குரவு நம்மைவிட் டோட பொதுவுடைமை**
**நல்வரவு ஆகும் நமக்கு.**

வறுமை நம்மை விட்டு அகல வேண்டுமானால், பொதுவுடைமைக் கொள்கையை விரும்பி வரவேற்பது சிறப்பு.

**பூத்துக் குலுங்குங்கால் பூவில் பொதுவுடைமை**
**மாது நல்லாள் மாண்பு மிகும்.**

உலகில் பொதுவுடைமை சிறந்து மலர்ந்து விரியும் காலத்தில், பெண்கள் சிறப்பு மேலும் மேலும் சிறந்து விளங்கும்.

**சண்டாளர் சாய்க்கும் சமதர்மம் சண்டையில்**
**மற்றது மாளவைக் கா.**

பொதுவுடைமை, தீயவர்களையே அழிக்கும் மற்ற மக்களை அழிக்காது வாழவைக்கும்.

**சாகாத தெல்லாஅும் சாகும்சம தர்மத்தில்**
**வாழாஅு தெல்லாம்வா ழும்.**

இதுவரை வாழ்ந்து வந்த ஏழை, பணக்காரர் என்ற தீமைகள், பொதுடைமைகள் வரும்போது அழியும். இதுவரை அடங்கிக் கிடந்த உயர்ந்த கொள்கைகள் வாழ்வு பெறும்.

– கு.ந.அர்த்தநாரி



தொடர்புக்கு:
இளம்பிள்ளை **சந்திரசேகர்**, செல்: 9443664002

**கோயில் மனைகளில் குடியிருப்போர்களின்**
**கோரிக்கைகளை வென்றெடுக்கும் போராட்ட களத்தில்**
**கம்யூனிஸ்ட் கட்சியின் பங்கு மகத்தானது!**
**இதை நினைவு கூரும் இந்த நேரத்தில்**

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்**
**தமிழ்நாடு மாநில 25வது மாநாடு சிறக்க**

**தமிழ்நாடு முழுவதும் பரவியுள்ள கோயில் மனை**
**வாழ்வோர்களின் குடும்பங்களின் சார்பாக மனமார்ந்த**
**வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்!**



**தமிழ்நாடு கோவில் மனையில் குடியிருப்போர் சங்கம்**
எண். 48, 10வது அவென்யூ, அசோக்நகர், சென்னை-600 083. ✆ : 044-24741842

| | | |
|---|---|---|
| **வி.அ. பாலசுப்பிரமணியன்** | **வை. சிவபுண்ணியம்** Ex.M.L.A. | **எஸ். ஏழுமலை** |
| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
| ✆ : 9941917203 | ✆ : 9443725537 | ✆ : 9444127498 |

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 06.08.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57




Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.